கோகுலம்


GOKULAM

ஜூலை 2001 ரூ.6/-



நட்சத்திரங்களுடன் நட்பு!

வரைந்து பழகுங்கள்



புள்ளிகளை
இணைத்து
படத்தை நிறைவு
செய்யுங்கள் .




திருடனைப் பிடிக்க போலீசுக்கு
வழி காட்டுங்கள்!




பிருந்தாவணம்

● தாடி தடுக்கி யாராவது விழுவார்களா? — 54



● "பேயையும் காணவில்லை. பிசாசையும் காணவில்லை. நண்பர்களே, ஏன் பயந்து ஓடுகிறீர்கள்? ஒருவர் சொல்வதை அப்படியே நம்பி விடுவதா? உண்மையா, பொய்யா?எனக் கண்டறிய வேண்டாமா? " என்றார் நரேந்திரர் — 70





● நீங்கள் உங்கள் தம்பி, தங்கை, அம்மா, அப்பா, தாத்தா, பாட்டியிடம் கேள்வி கேட்டிருப்பீர்கள். கிஃபு என்பவன் கடவுளிடம் கேள்வி கேட்கப் புறப்பட்டான். பதில் கிடைத்ததா? — 65



● 12 கோழி முட்டைகள் சேர்த்தால் எவ்வளவு பெரிதாக இருக்குமோ அவ்வளவு பெரியது நெருப்புக் கோழியின் முட்டை — 12

● உங்கள் மனம் கவர்ந்த சக்திமான் போஸ்டர் — 40



மலர்: 19 இதழ் : 6

ஜூலை 2001

கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

- பாரதியார்.

வைகுண்டபதி என்ற ஊரின் அருகே கன்னியார் குன்று என்ற சிறிய மலையில் பெரிய குகை ஒன்று இருந்தது. அந்தக் குகையில் பூதம் ஒன்று வசிப்பதாக ஊரில் பேசிக்கொண்டனர். ஆனால் பூதத்தை யாரும் பார்த்ததில்லை. இருந்தாலும் அந்தப் பக்கம் சென்றால் பூதம் பிடித்து விழுங்கி விடும் எனப் பயந்து இருட்டிய பின் யாரும் செல்வதில்லை.

அந்த ஊரில் செல்வம், கேசவன் என்ற இரு நண்பர்கள் இருந்தனர். செல்வத்திடம் ஏராளமான ஆடுகள் உண்டு. அவன் பேராசைக்காரன். ஏழைகளிடம் மிகவும் குறைச்சலான விலைக்கு ஆடுகளை வாங்கி அதிக விலைக்கு விற்பான். கேசவனிடம் ஒரே ஒரு ஆடுதான் இருந்தது. அவன் ஏழை என்றாலும் நல்லவன்.

கேசவன் மனைவிக்குத் திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டது. தனது ஆட்டை எடுத்துக் கொண்டு பணம் தருமாறு செல்வத்திடம் கேட்டான். ஐநூறு ரூபாய் மதிப்புள்ள ஆட்டை வெறும் இருநூற்று ஐம்பது ரூபாய்க்குக் கேட்டான் செல்வம். மனம் நொந்து போன கேசவன் தனது ஆட்டை சந்தைக்குக் கொண்டு செல்லத் தீர்மானித்தான்.

சந்தையில் அவன் ஆட்டை யாரும் வாங்கவில்லை. மனச் சோர்வுடன் வீட்டுக்கு மலை குகை வழியே திரும்பிக் கொண்டிருந்தான். அப்போது குகையின் உள்ளே இருந்து பயங்கர சத்தம் கேட்டது. திடீர் என,



“டேய்... என்னடா இந்த நேரத்தில் இங்கு நடமாட்டம். நீ யாரு?” என்று ஒரு குரல் அதட்டியது.

கேசவனின் கை கால்கள் வெடவெட என நடுங்கின. அவன் பயந்து குளறியபடியே “ஐயா நான் ஏழை. என் மனைவி உடல் நலம் சரியில்லை. அதனால் இந்த ஆட்டை விற்க வந்தேன். யாரும் வாங்கவில்லை. அதனால் திரும்பிக் கொண்டிருக்கிறேன். தயவு செய்து என்னை ஒன்றும் செய்து விடாதீர்கள்” என்று கெஞ்சினான்.

“சரி... சரி... உன் ஆட்டை நானே விலைக்கு வாங்கிக் கொள்கிறேன். என்ன விலை சொல்?” என்றது குரல். “ஐநூறு தந்தால் ஆட்டை விற்று என் மனைவிக்கு வைத்தியம் செய்வேன்” என்று பயந்தபடி சொன்னான் செல்வம்.

“நாளை வந்து பணத்தைப் பெற்றுக் கொள்” என்றது அந்தக் குரல். பணம் எதுவும் கிடைக்காவிட்டாலும் உயிர் தப்பினால் போதும் என்று கேசவன் வீடு வந்து சேர்ந்

தான்.

மறுநாள் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு குகைக்குச் சென்றான். குகை வாசலில் ஒரு மஞ்சள் பையில் ஆயிரம் ரூபாய் இருந்தது. கேசவனுக்கு மகிழ்ச்சி தாள வில்லை. சந்தோஷமாக வீடு வந்து தன் நண்பன் செல்வத்திடம் விபரம் சொன்னான்.

செல்வத்துக்கும் பூதத்திடம் தனது ஆடுகளை விற்று இரட்டிப்பாகப் பணம் பெற ஆசை வந்தது. தனது நூறு ஆடுகளையும் ஓட்டிக் கொண்டு குகைக்குச் சென்றான். கேசவனிடம் பேசிய குரல் செல்வத்திடமும் ஆடுகளை வாங்கிக் கொள்வதாகச் சொன்னது. ஆடுகளை அங்கு விட்டுச் செல்லும் படியும் மறுநாள் வந்தால் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் கூறியது.


செல்வம் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினான். மறுநாள் காலை குகை வாசலுக்குச் சென்றபோது அங்கு ஒரு கடிதம் இருந்தது. அதில் 'பேராசை கொண்ட முட்டாளே! உனக்குச் சரியான பாடம் புகட்டிவிட்டேன். இந்தக் குகையில் இருந்த நான் பேயோ பூதமோ அல்ல. உன்னைப் போன்ற மனிதன்தான்! பேய் பூதம் என்று நன்றாக ஏமாந்தாய். நீ மற்றவர்களை ஏமாற்றி ஆடுகளை வாங்க எண்ணினாய். இப்போது உன் ஆடுகளை நான் ஓட்டிக் கொண்டு செல்கிறேன்' என்று எழுதியிருந்தது.

அதைப் படித்த செல்வம் வெட்கப்பட்டு இனி யாரையும் ஏமாற்றவோ, பேராசைப் படவோ கூடாது என்று முடிவு செய்தான்.

— ஹ. அருண்குமார்,
ஒன்பதாம் வகுப்பு,
சேது மாணிக்கம் உயர்நிலைப்பள்ளி,
மேலச்சீத்தை, இராமநாதபுரம் மாவட்டம்

ஆடுகளை விலைக்கு வாங்கிய பூதம்





விஷம விச்சு
ஞாயிற்றுக்கிழமை விச்சுவின் அம்மா ஸ்வீட் செய்து கொண்டிருந்தார்.
ஏய் அனு! அம்மா ஸ்வீட் செய்றாங்க.
இப்போ ஆளுக்கு ஒண்ணு எடுத்துக்கங்க! அப்புறமா நானே தருவேன். என்னிடம் சொல் லாமல் உங்க இஷ்டத்துக்கு எடுத்துச் சாப்பிட்டா அடி விழும்.
விளையாடச் சென்றிருந்த விச்சுவும் அனுவும் பிற்பகலில் வீட்டுக்குள் நுழைந்தனர்.
அம்மா! நானும் அனுவும் ஸ்வீட் எடுத்துக்கறோம்மா!
சமையலறையில் நுழைந்து இருவரும் இஷ்டத்துக்கு ஸ்வீட்டைக் காலி செய்தனர்.
ஸ்வீட் சாப்பிட்ட களைப்பில் விச்சுவும் அனுவும் படுத்திருந்தனர். ஸ்வீட் காலியானதை அறிந்த அம்மா கோபத்துடன் வந்தார்.
டேய் விச்சு! என்னிடம் சொல்லாமல் ஏண்டா ஸ்வீட் எடுத்துச் சாப்பிட்டீங்க?
உன்னிடம் சொன்னோம்மா! ஆனால் நீதான் அப்ப நல்லா தூங்கிட்டிருந்தே!
?!

கண்ணால் பார்ப்பதை நம்பலாமா?

கண்ணால் காண்பதை அப்படியே நம்பி விடுவீர்களா? எங்கே இங்குள்ள சில படங்களைப் பார்த்து பதில் சொல்லுங்கள்.

1. இதில் எத்தனை முகங்கள் உங்களால் பார்க்க முடிகிறது?
2. எந்தப் பூவின் நடுவட்டம் மிகவும் சிறியது?
3. இந்தப் படத்தில் எத்தனை பிராணிகள் உள்ளன?
4. கறுப்புக் கட்டங்களைப் பத்து வரை எண்ணியபடி உற்றுப் பாருங்கள். என்ன தெரிகிறது?




1



2



3



4

விடை: 1. 4 முகங்கள், 2. எல்லா பூக்களின் நடு வட்டங்களும் ஒரே அளவு, 3. இரண்டு பிராணிகள்: முயல், வாத்து, 4. கட்டங்களுக்கு இடையே வெள்ளை நிறக் கோடுகளில் சாம்பல் வண்ணப் புள்ளிகள் தோன்றுகின்றன.

காரணம்: இடமாறு தோற்றப் பிழையால் கண் பாதிக்கப்பட்டு மூளையை ஏமாற்றி விடுகிறது.

மாவீரன் அலெக்சாண்டர் மாணவனாக இருந்த காலத்தில், ஒருநாள் அவரது ஆசிரியரின் இல்லத்தில் மற்ற மாணவர்களுடன் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தான். அப்போது, சாம்பிராணியை நெருப்பில் சற்று அதிகமாகப் போட்டு விட்டான் அலெக்சாண்டர். புகை அதிகமாகி, அறையெங்கும் நிறைந்து விட்டது. அதைக் கண்ட ஆசிரியர், அலெக்சாண்டரைப் பார்த்து, "தம்பி தற்போது நம்மிடம் சாம்பிராணி குறைந்த அளவே இருக்கிறது. சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்" என்று கூறி விட்டு, "இத்தகைய நறுமணப் பொருள்கள் விளையும் நாடுகளை நீ கைப்பற்றும்போது உன் இஷ்டம் போல் வேண்டிய அளவு போட்டுப் புகைத்துக் கொள்ளலாம்" என்று கிண்டலாகக் கூறினார். அதைக் கேட்டு மற்ற மாணவர்கள் சிரித்து விட்டனர்.

அன்று ஆசிரியர் கிண்டலாகக் கூறியது அலெக்சாண்டரின் வாழ்க்கையில் உண்மையாகவே நடந்து விட்டது. பிற்காலத்தில் அலெக்சாண்டர் போரிடுவதில் மாவீரனாகி, சிரியா நாட்டை அவர் கைப்பற்றியபோது, அந்த நாட்டில் சாம்பிராணி, குங்கிலியம் போன்ற வாசனைப் பொருள்கள் ஏராளமாகக் கிடைத்தன.


அவற்றைப் பார்த்தபோது, அலெக்சாண்டருக்கு மாணவப் பருவத்தில் ஆசிரியர் கூறியது நினைவுக்கு வந்தது. ஏராளமான வாசனைப் பொருள்களை அந்த ஆசிரியருக்கு அனுப்பி வைத்தார். அத்துடன் ஆசிரியருக்கு ஒரு கடிதமும் எழுதியனுப்பினார். 'வணக்கத்துக்குரிய ஆசிரியர் அவர்களுக்கு, தங்களுக்குச் சாம்பிராணியும் குங்கிலியமும் பெருமளவில் அனுப்பி வைத்துள்ளேன். இனி பிரார்த்தனையின்போது சிக்கனம் காட்ட வேண்டியதில்லை' என்று குறிப்பிட்டிருந்தார்.

வாக்குப் பலித்தது!

6 அறிவாளியாக வருவான்!

தாமஸ் ஆல்வா எடிசன் சிறு வயதில் பள்ளிக்கூடத்தில் படித்த போது, வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்துவதைக் கவனிக்காமல் எதையாவது சிந்தித்துக் கொண்டிருப்பான். ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்கு அவன் பதிலளிப்பதில்லை. இதனால் ஆசிரியர் அவனை ஒன்றும் தெரியாத முட்டாள் என்று ஒதுக்கி விட்டார். வகுப்பில் கடைசியில் அவனை உட்கார வைத்தார்.

ஒருநாள் அந்த வகுப்புக்குக் கல்வி அதிகாரி வந்தார். அவரிடம் ஆசிரியர் எடிசனைச் சுட்டிக்



• எடிசன்

காட்டி, "இவன் எப்போதும் எதையோ நினைத்துக் கொண்டு குழம்பிப் போயிருக்கிறான். படிப்பில் கவனம் செலுத்துவதே இல்லை. இவன் பள்ளிக்கு வருவதால் ஒரு பயனும் இல்லை" என்று கூறினார். இதைக் கேட்ட எடிசனின் மனம் மிகவும் புண்பட்

டது. வீட்டிற்குச் சென்று, தன் தாயிடம் நடந்ததைக் கூறினான். இனிமேல் பள்ளிக்குச் செல்ல முடியாது என்று சொன்னான்.

ஆசிரியரின் மேல் கோபம் கொண்ட தாய், மகனை அழைத்துக் கொண்டு ஆசிரியரிடம் சென்றாள்.

"என் மகனை மட்டம் தட்டாதீர்கள். அவன் சிறந்த அறிவாளியாக வருவான்" என்று கூறிவிட்டு வந்தாள்.

அன்று முதல் அவளே தன் மகனுக்கு ஆசிரியராக இருந்து, பாடம் கற்பித்தாள். வரலாறு, அறிவியல் அனைத்தையும் போதித்தாள். அறிவியலில் இருந்த ஆர்வத்தை அறிந்து அவனை ஊக்கப்படுத்தினாள்.

அன்று ஆசிரியரால் ஒன்றும் தெரியாத முட்டாள் என்று ஒதுக்கப்பட்ட தாமஸ் ஆல்வா எடிசன்தான் பிற்காலத்தில் உலகப் புகழ்பெற்ற அறிவியல் மேதையாகத் திகழ்ந்தார்.

– மு. பெரியசாமி

ஒட்டகம் தரமுடியுமா?

ஒருவர் நபிகள் நாயகத்திடம் வந்து தமக்கு ஓர் ஒட்டகத்தைத் தானமாகத் தரும்படிக் கேட்டார். "ஒட்டகம் தர முடியாது. ஒட்டகக் குட்டி வேண்டுமானால் தருகிறேன்" என்று சொன்னார் நபிகள்.

"ஒட்டகக் குட்டியை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது?" என்று கேட்டார் வந்தவர். நபிகள் நாயகம் புன்முறுவலோடு "எந்த ஒட்டகமும் தன் தாய்க்குக் குட்டி தானே!" என்றார். பின்னர் அவருக்குப் பெரிய ஒட்டகம் ஒன்றைக் கொடுத்தனுப்பினார்.

– க. கண்மணி

ராக்ஃபெல்லரின் மனக்குறை



• ராக்ஃபெல்லர்

அமெரிக்க நாட்டுக் கோடீஸ்வரர், ராக்ஃபெல்லர். அவர் உலகப் புகழ்பெற்ற தொழிலதிபரும் ஆவார். அவர் ஒருமுறை ஃபிரான்சு நாட்டிற்குச் சென்றிருந்தார்.

ஒரு பிரபல விடுதிக்குச் சென்று, இரு நாட்களுக்குத் தங்குவதற்கு, தமக்கு ஓர் அறை வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அமெரிக்கக் கோடீஸ்வரர் தம் விடுதியில் தங்க வந்தது ஒரு பெருஞ்சிறப்பு எனக் கருதி, அந்த விடுதி உரிமையாளர் அந்த விடுதியிலேயே மிகுந்த வசதி கொண்ட பெரிய அறைகளை அவருக்குக் காண்பித்தார்.

"இந்த மாதிரி அறைகளுக்கு அதிகமாக வாடகை கொடுக்க வேண்டியிருக்குமே! வசதி குறைவாக இருந்தாலும் பரவாயில்லை. வாடகை குறைந்த சிறிய அறை ஒன்றை எனக்கு ஒதுக்குங்கள்" என்று ராக்ஃபெல்லர் கேட்டுக் கொண்டார்.

அதைக் கேட்டு ஆச்சரியமடைந்த விடுதி உரிமையாளர், "ஐயா, தங்கள் மகன் எங்கள் விடுதிக்கு வந்தால், 'வாடகை எவ்வளவு அதிகமாய் இருந்தாலும் பரவாயில்லை, வசதிகள் மிகுந்த அறையை ஒதுக்குங்கள்' என்பார்" என்றார்.


"என் மகன் செலவுக்குப் பணம் கொடுக்க கோடீஸ்வரரான அவன் தந்தை இருக்கிறார். என் தந்தை அப்படி செல்வந்தர் இல்லையே!" என்று ராக்ஃபெல்லர் அமைதியான குரலில் கூறினார்.


— பாலு

மன்னர் கொடுத்த பூசணிக்காய்!

கதை :
எஸ். அரவிந்த், சென்னை.

படம் :
மகேஸ்







இருவரும் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.
வேலா, உனக்கு இரண்டு வெள்ளி நாண யங்களை அரசர் கொடுத் திருக்கிறார். எனக்கு வெறும் பூசணிக்காய்தான்.
அதுதான் எனக்கும் புரியலை.
என் குடும்பம் பெரிசு. இந்தப் பூசணிக்காயை வச்சிக்கிட்டு வெள்ளிக் காசுகளைத் தந்தீன்னா எனக்கு உதவியாக இருக்கும்.
சரி. இந்தா பாலா.
வேலன் மனைவியிடம் நடந்ததைச் சொன்னான்.
உங்களுக்கு ரொம்பத்தான் இரக்க குணம். இப்படி ஏமாந்துட் டீங்களே!
போனால் போகட்டும் போ. பூசணிக்காயை நறுக்கி சாம்பார் வை.
வேலனின் மனைவி பூசணிக்காயை வெட்டினாள்.
ஏங்க, இங்க வாங்க. பூசணிக் காய்க்குள் தங்கக் காசுகளும், வைரக் கற்களும் இருக் குங்க.
அடடா! பாலன் இப்படி தந்துட்டானே. நான் போய்க் கொடுத்துட்டு வரேன்.
அங்கு வந்த மன்னர் -
வேலா அது உனக்குத்தான். பாலன் பேராசைப் பட்டான். அவன் கேட்டதைக் கொடுத்தும் சரியா பயன்படுத்திக்கலை. உன நல்ல குணத்துக்கு இது பரிசு.
நன்றி மன்னா!



சக்திமான்... சக்திமான்...


சக்திமான் என்ற பெயரைத் தெரியாதவர்களே இருக்க முடியாது. சக்திமான் தொடர் தொலைகாட்சியில் ஆண்டு கணக்கில் வெளிவந்து குழந்தைகளின் ஒட்டு மொத்தப் பாராட்டையும் பெற்றது. 'தீய சக்திகளால் நல்லவர்களுக்குத் தீங்கு ஏற்படும்போது பல சாகசங்கள் புரிந்து நல்லவர்களைக் காப்பாற்றி தீய சக்திகளை அழிப்பதுதான் சக்திமான் தொடரின் அடிப்படை அம்சம். சக்திமானின் உடை, நடை, பாவனை, சாகசங்கள் என அனைத்து விஷயங்களும் குழந்தைகளை ஈர்த்தன. இது மட்டுமின்றி நல்ல குழந்தைகளாக உருவாக வேண்டும், நன்றாகப் படிக்க வேண்டும், ஆரோக்கியமாக இருக்க வேண்டும் போன்ற விஷயங்களையும் சக்திமான் தொடரின் மூலம் குழந்தைகளுக்கு அறிவுறுத்தி வந்தார். சக்திமான் படம் போட்ட பிஸ்கட், புத்தகங்கள், உடைகள் என பல பொருட்கள் வெளிவந்தன. அவற்றையும் ஆர்வமாக வாங்கிக் குழந்தைகள் பயன்படுத்தினர்.


இப்படி சக்திமான் மேல் அபிமானம் கொண்டவர்கள் காலப் போக்கில் சக்திமான் என்ற பாத்திரம் கற்பனையானது என்பதை மறந்து உண்மை என எண்ண ஆரம்பித்தனர். விளைவு 'சக்திமான் என்னைக் காப்பாற்றுவார்' என்று மொட்டை மாடியிலிருந்தும், தண்ணீருக்குள்ளும் சில குழந்தைகள் குதித்ததாக செய்திகள் வெளி வந்தன. திரையில் பார்க்கும் பாத்திரங்கள் கற்பனையானவை. உண்மையில் அப்படி நடக்க முடியாது. ஏன் சக்திமானாக நடிக்கும் முகேஷ் கண்ணாவால் கூட இது சாத்தியமில்லை என்பதைக் குழந்தைகளும் புரிந்து கொள்ள வேண்டும். பெற்றோர்களும் புரிய வைக்க வேண்டும். இப்படி புரிந்து கொண்டு பார்த்தால் நல்ல பொழுதுபோக்கு அம்சமாக மட்டும் சக்திமானைப் பார்த்து ரசிக்க முடியும்.

மகாபாரதம் தொடரில் பீஷ்மராக நடித்த முகேஷ் கண்ணா அந்தத் தொடரைக் காட்டிலும் சக்திமானாக நடித்தபொழுதுதான் எல்லோருடைய கவனத்தையும் அதிகம் கவர்ந்தார்.

முகேஷ் கண்ணா குழந்தைகள் மீது ஈடுபாடும் அக்கறையும் கொண்டவர். தானே தொலைக் காட்சித் தொடர்களில் நடித்தாலும் 'புத்தகங்கள் வாசிப்பதிலிருந்து குழந்தைகளின் கவனத்தைச் சிதறடித்து, தன் வசப்படுத்தி விடுகின்றன டீ.வி நிகழ்ச்சிகள். குழந்தைகளின் புத்தக வாசிப்பிற்கோ, விளையாட்டிற்கோ, பள்ளிப் படிப்பிற்கோ டீ.வி நிகழ்ச்சிகள் இடையூறாக இருக்கக் கூடாது. ஒரு மனிதன் முழுமை பெற வேண்டும் என்றால் படிப்பும் விளையாட்டும் அவசியம் தேவை' என்கிறார். நாட்டுப் பற்றையும் நட்புணர்வையும் குழந்தைகளுக்குப் பிடிக்கும்படி கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் குழந்தைகளுக்கான தொடர்களில் நடிப்பதாகக் கூறுகிறார் முகேஷ்கண்ணா, அதாவது, சக்திமான்! 40 ஆம் பக்கத்தில் சக்திமான் போஸ்டர் உங்களுக்காக!

புதிர் உலகம்





I. இங்கிருக்கும் கட்டத்தில் 1 முதல் 8 வரை உள்ள எண்களை நிரப்ப வேண்டும். ஒரு நிபந்தனை என்னவெனில் இதில் அடுத்தடுத்த எண்கள் பக்கத்தில் பக்கத்தில் வரக் கூடாது. அதே போல் எதிரெதிராகவும் அடுத்தடுத்த எண்கள் வரக்கூடாது. நிரப்புங்கள் பார்க்கலாம்!

-ஹேமா, காஞ்சிபுரம்.

II. ஒரு குற்றவாளி முன்பு இரண்டு கூண்டுகள் உள்ளன. ஒன்றில் சிங்கமும், மற்றொன்றில் ஆடும் உள்ளன. இரண்டில் ஒன்றைக் குற்றவாளி திறந்து பலனை அனுபவிக்க வேண்டும் என்பது அரசு ஆணை! அங்கு இரு காவலாளிகள் உள்ளனர். ஒருவன் எப்பொழுதும் உண்மையைச் சொல்லுவான். மற்றொருவன் எப்பொழுதும் பொய்யே சொல்லுவான். இவர்களில் யாராவது ஒருவரிடம் ஒரு கேள்வி மட்டும் கேட்டுக் கொள்ளலாம். இவர்களில் யார் உண்மை பேசுபவன், பொய் பேசுபவன் என்பது தெரியாது. சிறிது நேரம் யோசித்த அந்தக் குற்றவாளி ஒரே ஒரு கேள்வியைக் கேட்டு புலியிடமிருந்து தப்பித்துக் கொண்டான். அது என்ன கேள்வி ?

**- பெ. நடராசன், ஒன்பதாம் வகுப்பு,
சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி,
மேலச்சீத்தை, இராமநாதபுரம்.**

III. பாரதி தன் சிலேட்டுப் பலகையில் 1 முதல் 100 வரை வீட்டுக் கணக்கு எழுதி வைத்திருந்தாள். அவள் தங்கை ஜெயந்தி பலகையை எடுத்து ஒன்று எனும் எண்களை எல்லாம் அழித்து விட்டாள். பாரதி மறுபடியும் வீட்டுக் கணக்கைச் சரி செய்ய எத்தனை முறை 'ஒன்று' எழுத வேண்டும்?

- க. பூங்கொடி, சித்தோடு.

IV. மூன்று இலக்கங்கள் உள்ள ஒரு எண்ணை அதே இலக்கங்களைக் கூடுதலாகப் பக்கத்தில் எழுதியதுபோல விடை வரும்படி எந்த எண்ணைக் கொண்டு பெருக்க வேண்டும்? உதாரணமாக 247 எனில் விடை 247247 என்று வரவேண்டும்.

- ச. பிரபாகரன், குமாரபாளையம்.

V. மேரியின் அம்மாவுக்கு நான்கு குழந்தைகள். மூத்த குழந்தைக்கு வடக்கு என்றும், இரண்டாவது குழந்தைக்குத் தெற்கு என்றும், மூன்றாவது குழந்தைக்குக் கிழக்கு என்றும் பெயர் வைத்தாள் அம்மா. நான்காவது குழந்தையின் பெயர் என்ன?

- க. பூங்கொடி, சித்தோடு.

VI.

9 + 9 = 18	9 x 9 = 81
24 + 3 = 27	24 x 3 = 72
47 + 2 = 49	47 x 2 = 94
497 + 2 = 499	497 x 2 = 994
4997 + 2 = 4999	4997 x 2 = 9994

மேற்கண்ட இரண்டு கணக்குகளில் ஒன்று கூட்டல் தொகை. மற்றது பெருக்கல் தொகை. இதில் உள்ள அதிசயம் என்னவென்றால் கூட்டல் தொகையின் எண்கள் பெருக்கல் தொகையில் அப்படியே வலம் இடமாக மாறி வருகிறது.

- சே. ஹயாத்கான், சிவகங்கை.

விடைகள் 74ஆம் பக்கம்



டிஸ்கவரி சானலில் நெருப்புக் கோழிகளின் நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார் அம்மா. நண்பனுடன் வீட்டுக்குள் நுழைந்தான் விஸ்வேஸ். "அம்மா, ஆஸ்ட்ரிச் நிகழ்ச்சி இப்பதான் ஆரம்பித்தா?" என்று கேட்டான்.

"இல்லை விஸ்வேஸ். இது முடியற நேரம். அதோ பார் முடிஞ்சே போயிடுச்சு. நீ கொஞ்சம் சீக்கிரம் வரக் கூடாதா?" என்றார் அம்மா.

"வர்ற வழியில ட்ராஃபிக் ஜாம். நானும் அப்துலும் சேர்ந்து ஆஸ்ட்ரிச் பற்றி கட்டுரை எழுத முடிவு செஞ்சிருந்தோம். பார்க்க முடியாமல்



போயிடுச்சு. நீங்கதான் எங்களுக்கு ஹெல்ப் பண்ணனும்மா" - விஸ்வேஸ்.

"சரி. ரெண்டு பேரும் எழுதத் தயாராகுங்க. நான் போய் தர்பூசணி ஜூஸ் எடுத்துட்டு வரேன். பிறகு நீங்க கேட்கிற கேள்விக்கு பதில் சொல்றேன்" என்றபடி அடுக்களைக்குள் நுழைந்தார் அம்மா.

"நல்லவேளை விஸ்வேஸ். ஆன்ட்டியாவது அந்த நிகழ்ச்சியைப் பார்த்தாங்களே!" என்றான் அப்துல்.


இருவருக்கும் ஜூஸ் கொடுத்துவிட்டு அருகில் உள்ள நாற்காலியில் அமர்ந்துகொண்டார் அம்மா.

"அம்மா எங்களுக்குத் தெரிந்ததைச் சொல்றோம். தெரியாத விஷயங்களை நீங்க

வேகமாக ஓடும் பறவை!

எஸ். சுஜாதா

சொல்லுங்க. உலகத்திலேயே மிகப் பெரிய பறவை இந்த ஆஸ்ட்ரிச் எனப்படும் நெருப்புக்கோழி. இது ஆப்பிரிக்காவில் வசிக்கிறது. அதுவும் வறட்சியான





பகுதிகளில் நம்ம ஊர் ஒட்டகத்தைப் போல் வசிக்கக் கூடியது" என்று நிறுத்தினான் விஸ்வேஸ்.

"நான் சொல்றேண்டா. ஆண் நெருப்புக் கோழிகளின் உடல் கறுப்பாகவும் வால் மற்றும் இறக்கைகளின் நுனிப் பகுதிகள் வெண்மையாகவும் இருக்கும். பெண் நெருப்புக் கோழிகள் பழுப்பு நிறமாகவும் வெள்ளை நிறமாகவும் இருக்கின்றன. அப்புறம்... இவற்றால் பறக்க முடியாது" என்றான் அப்துல்.

உடனே அம்மா "பறக்க முடியாவிட்டாலும் இவை வேகமாக ஓடக் கூடியவை. மணிக்கு 70 கி.மீ வேகத்தில் ஓட முடியும் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இப்படி ஓடுவதற்கு வசதியாக நெருப்புக் கோழியின் கால்கள் உயரமாகவும் உறுதியாகவும் அமைந்துள்ளன" என்றார்.

"அம்மா நீங்க சொல்லுங்க. நாங்க எழுதிட்டே வர்றோம்" என்றான் விஸ்வேஸ்.

"உங்களுக்கு என்ன தேவையோ



கேளுங்க. அப்பதான் எனக்குச் சொல்ல வசதியாயிருக்கும்" - அம்மா.

"ஆன்ட்டி இந்தப் பறவை ரொம்பப் பெரிசா இருக்கே! அப்ப இது இடுகிற



முட்டையும் பெரிய அளவாதான் இருக்குமா?" என்றான் அப்துல்.

"பறவைகளின் முட்டைகளிலேயே நெருப்புக் கோழியின் முட்டைதான் ரொம்பப் பெரிசு. 12 கோழி முட்டைகளைச் சேர்த்தால் எவ்வளவு பெரிசாக இருக்குமோ அவ்வளவு பெரிசு இந்த முட்டை. முட்டை ஓடும் ரொம்பக் கடினமாக இருக்கும். இவற்றின் முட்டைகளைச் சாப்பிட நினைக்கும் பிராணிகள் கற்களை முட்டை ஓட்டின் மீது போட்டு உடைத்த பின்புதான் சாப்பிடுகின்றன. பொதுவா எல்லா பறவைகளுக்கும் ஒவ்வொரு காலிலும் நான்கு விரல்கள் இருக்கும். நெருப்புக் கோழிக்கு எத்தனை விரல்கள் தெரியுமா?"- அம்மா.

"சாதாரண பறவைகளுக்கு நான்கு விரல்கள் என்றால் இதுக்கு எட்டு விரல்களா?" என்றான் விஸ்வேஸ்.

"அதுதான் இல்லை. இதுக்கு ரெண்டே ரெண்டு விரல்கள்தான்" என்ற அம்மா வாசலில் பால்காரர் சத்தம் கேட்டு எழுந்து போனார்.

"ஆன்ட்டி, நெருப்புக் கோழி முட்டையைப் பற்றிச் சொன்னீங்க. அது எத்தனை முட்டை இடும்னு சொல்லலியே" என்றபடி அப்துலும் எழுந்து போனான்.

பாலை வாங்கிக் கொண்டு திரும்பி வந்த அம்மா "வருஷத்துக்கு ஒருமுறைதான் இது முட்டைகளை இடும். ஒரு தடவைக்கு 12 முதல் 20 முட்டைகள் வரை இடும். மணலைத் தோண்டி குழிக்குள் முட்டைகளை இடுகிறது. ஆணும் பெண்ணும் சேர்ந்து 45 நாட்கள் அடை காக்கின்றன. இதில் பெண் பகலிலும், ஆண் இரவிலும் அடை காக்கும். சில நேரங்களில் வெப்பமான பகுதிகளில் முட்டைகளை இட்டுச் சூரிய வெப்பத்தால் முட்டைகள் பொரிவதும் உண்டு. அப்போது அருகிலிருந்து காவல் காக்கும். முட்டையிலிருந்து குஞ்சு வெளி வந்ததும் சுறுசுறுப்பாக நடக்க ஆரம்பித்து விடுகின்றன. தனியாக இரை தேடத் தெரிகிற வரை பெற்றோர் பாதுகாக்கின்றன."

"அம்மா, இது கூட்டமாகப் பெற்றோருடன் வசிக்குமா? இல்லை தனியா வசிக்குமா?" - விஸ்வேஸ்.

ஆணும் பெண்ணும் ஜோடியாகச் சுற்றித் திரியும். குஞ்சுகள் மட்டும் கூட்டமாக வாழும். நன்கு முதிர்ந்த நெருப்புக் கோழி ஆறே முக்கால் அடி உயரமிருக்கும். இவற்றின் வாழ்நாள் 50 ஆண்டுகள். அப்புறம்?" - என்றார் அம்மா.

"ஆன்ட்டி, நெருப்புக் கோழி என்னவெல்லாம் சாப்பிடும்?" என்றான் அப்துல்.

"புல், சாறு நிரம்பிய பழங்கள், விதைகள் முதலியவையே முக்கிய உணவு. சில சமயங்களில் பூச்சிகளையும் உண்பதுண்டு. உணவை விழுங்கும்போது அதனுடன் சேர்த்து நிறைய கூழாங் கற்களையும் விழுங்குகின்றன. கடினமான உணவை அரைத்துக் கூழாக்குவதற்கு இக் கற்கள் உதவுகின்றன"

"நெருப்புக் கோழிக்கு எதிரிகள் இருக்காம்மா?" - விஸ்வேஸ்.

"ஏன் இல்லை? நம்மைப் போன்ற மனிதர்களே எதிரிதான். முட்டைக்காகவும், இறைச்சிக்காகவும் மனிதர்கள் வேட்டையாடுகிறார்கள். அது தவிர சிங்கம் மற்றும் சிறுத்தைகளாலும் நெருப்புக் கோழிகள் வேட்டையாடப் படுகின்றன. சிறிய பிராணிகள் குஞ்சுகளையும் முட்டைகளையும் உணவாக்கிக் கொள்கின்றன. அவ்வளவுதானே! சரி நான் டிபன் செய்யணும்" என்று எழுந்தார் அம்மா.

"ஆன்ட்டி ஒரு சந்தேகம். ஆஸ்ட்ரிச்க்கு நெருப்புக் கோழின்னு ஏன் பெயர் வந்தது?" என்றான் அப்துல்.

"நெருப்புக் கோழிக்கு உடல் முழுவதும் இறகு இருக்காது. கழுத்திலும் தொடையிலும் சிவப்பு நிறமாகத் தோல் காட்சி தரும். எனவே இவற்றை நெருப்புக் கோழி என்று அழைத்து வருகின்றோம். மற்றபடி நெருப்புக்கும் ஆஸ்ட்ரிச்க்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை" என்றபடி எழுந்து போனார் அம்மா.

அப்துலும் விஸ்வேஸும் நெருப்புக் கோழி பற்றிய செய்திகளைத் தொகுத்து கட்டுரையாக்கும் பணியில் ஈடுபட ஆரம்பித்தார்கள்.



* உங்கள் குழந்தைகளிடம் படிக்கும் பழக்கத்தை உருவாக்குங்கள்.

* கோகுலம் அவர்களுக்கு அன்பளிப்பாகக் கிடைக்கச் செய்யுங்கள்.

* கல்கி வார இதழுக்கு ஓராண்டு சந்தா ரூ.275/- செலுத்தினால் போதும்; ரூ.36/- பெறுமானமுள்ள தமிழ் அல்லது ஆங்கில கோகுலம் ஆறு மாதங்களுக்கு (ஆறு இதழ்கள்) உங்கள் குழந்தை பெயருக்கு இலவசமாக வந்து சேரும்.

* கல்கி வார இதழுக்கு இரண்டு ஆண்டு சந்தா ரூ.550/- செலுத்தினால் ரூ.72/- பெறுமானமுள்ள தமிழ் அல்லது ஆங்கில கோகுலம் ஓராண்டுக்கு (12 இதழ்கள்) உங்கள் குழந்தை பெயருக்கு இலவசமாக அனுப்பப்படும்.

கல்கி சந்தா செலுத்தினால் கோகுலம்/GOKULAM இலவசம்!

* ஏற்கெனவே சந்தாதாரர்களாக உள்ளவரும் தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொண்டு பயன்பெறலாம். சந்தா முடிவு தேதி நீடிக்கப்படும்.

* கல்கி என்ற பெயருக்கு மணி ஆர்டர் அல்லது டிமாண்ட் டிராஃப்ட் அனுப்பவும். வெளியூர் காசோலைகள் ஏற்பதற்கில்லை.

டி.டி. அல்லது எம்.ஓ. அனுப்ப முகவரி :

மானேஜர், கல்கி,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

என் பெயர் : ....

என் மகன் / மகள் பெயர் : ....

....

விலாசம் : ....

....

....

....

கல்கி வார இதழுக்கு ஓராண்டு / இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ. .... அனுப்பியுள்ளேன். என் மகன் / மகள் பெயருக்கு கோகுலம் தமிழ் / ஆங்கிலம் 6/12 இதழ்கள் * அன்பளிப்பாக அனுப்பவும்.

* தேவையற்றதை அடித்து விடவும்.

கையொப்பம் : ....

ஜூலை இறுதி வரை மட்டுமே இந்தச் சலுகை! முந்துங்கள்!

ஜோக்ஸ் கார்னர்



"அவர் பசை உள்ள ஆளுன்னு எப்படி சொல்றீங்க?"

"அவரை 'ஒட்டி'த்தானே ரெண்டு பேர் வர்றாங்க!"

- பொறையாறு கங்கா கணேசன்



"அந்த ஹோட்டல்லே எல்லாமே ரொம்ப விலை அதிகமா, எப்படி?"

"'வெங்காய வாடை - 10 ரூபாய்'னு போட்டிருக்கே!"

- சாயம் வெ. ராஜாராமன்



"நாங்க இரண்டு பேரும் சின்ன வயசில் இருந்து ஒண்ணா புட்பால் விளையாடறோம்"

"அப்ப 'பால்'ய ஸ்நேகிதர்கள்னு சொல்லு."


- சாயம் வெ. ராஜாராமன்

"ஏன் அவர் கவலையோடு இருக்கார்?"

"'கவலையில்லாமல் வாழ்வது எப்படி?' என்று அவர் எழுதி வெளியிட்ட புத்தகம் விற்கவேயில்லையாம்!"

- காயக்காடு ராமகிருஷ்ணன்





"பால் எல்லாத்தையும் பூனை குடிக்கிற வரைக்கும் என்ன பண்ணிக்கிட்டு இருந்தே?"

"இந்தப் பூனையும் பால் குடிக்குமான்னு பார்த்துக்கிட்டு இருந்தேன்!"

- வினோத், விருதாச்சலம்



* வாஜ்பாய்



* முஷாரப்

கோகுலம் நியூஸ்!

அழைப்பு

பாகிஸ்தானின் ராணுவ ஆட்சியாளர் பர்வேஸ் முஷாரப்புக்கு இந்திய பிரதமர் வாஜ்பாய் பேச்சு வார்த்தை நடத்த வருமாறு அழைப்பு விடுத்தார். முஷாரப்பும் இந்த அழைப்பை ஏற்று பேச்சு வார்த்தைக்குச் சம்மதம் தெரிவித்திருக்கிறார். இந்த நிகழ்ச்சியை இரு நாட்டு மதம் மற்றும் அரசியல் அமைப்புகளும் வரவேற்றுள்ளன. இரு நாடுகளின் சமரச முயற்சிக்கு இது நல்ல ஆரம்பம் என்கிறார்கள் பார்வையாளர்கள். இச்சந்திப்பு ஜூலை 15ந் தேதிக்குள் நடைபெறவுள்ளது.

தொல்லை

உலகம் முழுவதும் எலித் தொல்லையால் அவதிப்படுகிறது. மலேசியாவில் உள்ள போர்னியோ தீபகற்பத்தில் எலித் தொல்லை பெருந்தொல்லையாக இருக்கிறது. எனவே எலிகளை ஒழிக்க அரசு புது முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அதாவது ஒரு எலி பிடித்தால் இரண்டரை ரூபாய் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எலி பெருகினால் பிளேக் நோய் வரும் அபாயமும் இருப்பதால் அரசும் மக்களும் சுறுசுறுப்புடன் எலி வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

புளிக்குக் காப்புரிமை

வேப்ப மரத்தின் மகிமையை நம் நாட்டில் நன்கறிந்தும் அதற்குக் காப்புரிமையைப் பெறுவதில் இந்தியா கோட்டை விட்டுவிட்டது. ஆனால் இப்போது புளிக்கு சர்வதேச காப்புரிமையைப் பெற்று விட்டது. புனே நகரில் உள்ள தேசிய வேதியியல் சோதனைக்கூட விஞ்ஞானிகள் புளியை ஆராய்ந்து அதன் பலனை விளக்கியுள்ளனர். புளியின் ஓடு, பழம், கொட்டைகளில் மருத்துவம் மற்றும் உணவுப் பொருட்களுக்குத் தேவையான அம்சங்கள் அடங்கியுள்ளன. மிட்டாய், ரொட்டி, குளிர் பானங்கள் மற்றும் மருந்துகளை இனி இதிலிருந்து தாராளமாகத் தயாரிக்கலாம். இதன் மூலம் கோடிக் கணக்கில் அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும்.

பரிதாபம்

ஜெருசலேமில் உள்ள வெர்சேல்ஸ் அடுக்கு மாடி திருமண மண்டபத்தின் கடைசி இரு மாடிகளில் திருமண வரவேற்பு கோலாகலமாக நடந்து கொண்டிருந்தது. இதில் 700க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். திடீரென்று கட்டடத்தின் மேற்கூரை இடிந்து நொறுங்கியது. இதில் 25 பேர் உயிரிழந்தனர். 300 பேர் பலத்த காயமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் முடிந்தது

தமிழ்நாடு, கேரளா, பாண்டிச்சேரி, அஸ்ஸாம், மேற்குவங்கம் ஆகிய பகுதிகளுக்குச் சட்டசபை தேர்தல் நடந்து முடிந்தது. இதில் தமிழ் நாட்டில் அதிமுக கூட்டணியும், கேரளம், அஸ்ஸாம், பாண்டிச்சேரியில் காங்கிரஸ் கூட்டணியும் மேற்கு வங்கத்தில் இடதுசாரி கூட்டணியும் வெற்றி பெற்று ஆட்சியில் அமர்ந்துள்ளன.

கார்ட்டூனிஸ்ட்

எந்தத் துறையிலும் இருக்கும் சாதனையாளர்களை இருவகைப் படுத்தலாம். ஒன்று, அவர்கள் இயற்கையாகவே பிறவி மேதைகளாக இருப்பார்கள்; அல்லது கடுமையான உழைப்பின் மூலம் தங்களைச் சாதனை யாளர்களாக மாற்றிக் கொண்டவர்களாக இருப்பார்கள். பிறவி மேதைகளுக்கு மரபணுக்கள் மூலமாகவே, வித்வத்துவம் வந்து சேருகிறது. அந்த மேதைகளின் உடலை, மரபணுக்கள் ஒரு வாகனமாகப் பயன்படுத்திக் கொண்டு சாதனைகள் செய்ய முனைகின்றன. அவற்றிற்கு ஜாதி மதம் ஏதும் கிடையாது. ஓவியர்கள் வரிசையில் பிகாஸோ, டாவின்ஸி, மைக்கேல் ஏன்ஜெலோ போன்ற பிறவி மேதைகளைக் குறிப்பிடலாம். பல்வேறு துறைகளைப் பார்த்தால், இதுபோன்ற பிறவி மேதைகளை அடையாளம் காண முடியும். அதே போல் உழைப்பும் ஒருவரை உயரே கொண்டு செல்லும். ஒரு சாதனையாளரைப் பார்த்து உந்தப்பட்டு, தானும் அது போல வர வேண்டும் என்று ஒருவர் முயற்சிக்கும் போது அந்தத் தாக்கம் ஒரு சதம் என்றால், மீதம் 99 சதவீதம் உழைப்பு தேவைப்படும். எனவே முதலில் நான் வலியுறுத்த விரும்புவது உழைப்பு. குறிப்பாக இளமையில் சோம்பேறித்தனத்தைச் சுருட்டி, பரண் மேல் போட்டு விட வேண்டும்.

கார்ட்டூனிஸ்ட்

மதன்



என்னை எடுத்துக் கொண்டால் ஐந்து அல்லது ஆறு வயதிலேயே படங்கள் போடத் துவங்கி விட்டேன். எல்லாம் கடவுள் படங்கள்தான். அதிலும் பெரும்பாலும் அனுமார் படங்கள். சஞ்சீவி மலையை அனுமார் தூக்கிக் கொண்டு பறப்பது போலவே 3000 படங்களுக்கு மேல் போட்டிருப்பேன். சூப்பர்மேன்களுக்கு முன்னோடியான அனுமார் என்னைக் கவர்ந்ததில்


வியப்பில்லை. கல்கி, ஆனந்த விகடன், தினமணி கதிர் தீபாவளி மலர்களில் பிரபல ஓவியர்கள் வரைந்துள்ள படங் களைப் பார்த்து வரைவேன். நான் மிகவும் விரும்பி வரைந்தது தஞ்சை மாரியம்மன் கோயிலில் உள்ள, அரக்கனை வதம் செய்யும்

ஆவது எப்படி?

மகிஷாசுரமர்த்தனி படம்தான்.

"ஆஹா... பிரமாதமாக வரைகிறாய்" என்று பார்ப்பவர்கள் பாராட்டுவார்கள். குழந்தைப் பருவத்தில் திறமையைக் காட்டும் போது, தேவைப்படுவது ஊக்கமும், பாராட்டும். ஒரு சிறுவன் தன்னைத் தானே ஊக்கப்படுத்திக் கொள்ள முடியாது. ஒன்றரை வயதுக் குழந்தையுடன் ஓடிப் பிடித்து விளையாடும் போது, அந்தக் குழந்தை நம்மைப் பிடிக்க அனுமதிக்கிறோம். அப்படி பிடித்தவுடன் அந்தக் குழந்தையின் முகத்தில் பூக்கும் வெற்றிச் சிரிப்பைப் பார்க்கும் போது, 'வெற்றியடைய வேண்டும்' என்ற ஆசை குழந்தையிலேயே, ஒவ்வொரு வருக்கும் கிளர்ந்தெழுவது புரியும். குழந்தைப் பருவத்தில் பளிச்சிடும் திறமைகளை அடையாளம் காண வேண்டும். பெற்றோர்கள் தங்கள் விருப்பங்களைக் குழந்தைகள் மீது திணிக்கக்கூடாது. சிறுவர் சிறுமியர் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொண்டு வர வேண்டும். எந்த நேரத்தில் அதிர்ஷ்டம் உங்கள் வீட்டுக் கதவைத் தட்டும் என்பது தெரியாது.

ஒரு உதாரணம் சொல்கிறேன். ருமேனியாவில் ஒரு ஒலிம்பிக் பயிற்சியாளர் பள்ளிக்கூட விளையாட்டு மைதானம் வழியாகப் போகும் போது அங்கே ஒரு சிறுமி உடலை வளைத்து அட்டகாசமாக பல்டிகள் போடுவதைப் பார்த்தார். அவருக்கு மின்னலடித்தது. உடனே சைக்கிளை நிறுத்தி விட்டு மைதானத்துக்குள்ளே ஓடினார். அதற்குள் சீருடை அணிந்து கொண்டிருந்த சிறுமிகள் பள்ளிக்குள் சென்று விட்டார்கள். அதனால் அந்தக் குறிப்பிட்ட சிறுமியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதன் பின் எல்லா சிறுமிகளையும் கூப்பிட்டு பல்டி அடிக்கச் சொல்லிப் பார்த்து, அந்தச் சிறுமியைக் கண்டுபிடித்தார். பிறகு அவளுக்கு ஜிம்னாஸ்டிக் பயிற்சி கொடுத்து அந்தத் துறையில் மிகப் பெரிய அளவில் அவளை உருவாக்கினார். அந்தச் சிறுமியின் பெயர் நாடியா கொம்னாட்சி. உங்கள் அப்பா, அம்மா உங்கள் திறமைகளை அடை யாளம் காணாவிட்டால், உங்கள்



ப ள ள
ஆசிரியர்,
பக்கத்து வீட்டுக்காரர்
சம்பந்தமே இல்லாத மூன்றாம் நபர் கூட அவற்றை அடையாளம் கண்டு, தூக்கிவிடக் கூடும்.

எங்கள் குடும்பத்தில் டாக்டர்களும்,


வழக்கறிஞர்களும் அதிகம். நானும் அது போலத்தான் வர வேண்டும் என்று விரும்பினார்கள். ஆனால் நான் தூரிகையுடன் தோழமை கொண்டு விட்டேன். பள்ளியிறுதி வகுப்பு படிக்கும் போது, ஓவியம் வரைவதென்பது ஒரு வெறியாகவே என்னுள் உருவாகி விட்டது. ஒரு ஓவியனுக்கு மிகவும் பொறுமை வேண்டும். ஆனால் எனக்குக் கொஞ்சமும் பொறுமை கிடையாது. எதிலும் ஒரு அவசரம், ஒரு பரபரப்பு இருக்கும். அப்படிப்பட்ட என்னை ஆனந்த விகடனில் கோபுலு அவர்கள் துப்பறியும் சாம்பு கதைக்குப் போட்ட 'சாம்பு' கேலிச் சித்திரம் கவர்ந்தது.



'இதுபோன்ற கேலிச் சித்திரங்களைச் சட்டென போட்டு விடலாம் போலிருக்கிறதே' என்று என் கவனம் அதுபோன்ற சித்திரங்களின் மேல் திரும்பியது. உடனே துவங்கி விட்டேன். பால்காரர், பக்கத்து வீட்டுக்காரர், ஆசிரியர்கள், கல்லூரி பேராசிரியர்கள் என்று பார்க்கும் மனிதர்களைக் கோடுகளைக் கொண்டு கேலிச் சித்திரங்களாக உருவாக்கினேன். ஒரே பாராட்டு மழைதான்!

ஓவிய ஆர்வம் உள்ள நீங்கள், இந்தத் துறையில் எந்தப் பிரிவில் பளிச்சிடுவீர்கள் என்பதை நீங்கள் வரையும் படங்களை வைத்தே கணித்து விடலாம். டாம், ஜெர்ரி, மிக்கி மௌஸ், டொனால்ட் டக் ஆகிய கார்ட்டூன் கேரக்டர்களை வரைவதில் நீங்கள் ஆர்வம் காட்டினால் பிற்காலத்தில் கேலிச் சித்திரங்கள் வரைவதற்கு உங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள முடியும் என்று தைரியமாகச் சொல்லலாம். கார்ட்டூன் படங்கள் என்பது சாதாரண ஓவியர்களைத் தாண்டிய விஷயம். 'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி' என்ற பத்திரிகையில் பிரபலமானவர்கள் பற்றி ஒரு பக்கத்தில் எழுதியிருப்பார்கள். எதிர்பக்கத்தில் அவர்களைக் கேலிச் சித்திரமாக வரைந்திருப்பார் பிரபல கார்ட்டூனிஸ்ட் ஆர்.கே. லட்சுமணன். பெரியார், அண்ணா, எம்.எஸ். ஆகியோரை இது போன்று 'வீக்லி'யில் வரைந்திருக்கிறார் ஆர்.கே. லட்சுமணன். அந்தப் படங்களைப் பார்த்துத்தான் ஒரு கார்ட்டூனிஸ்டாக உருவாக வேண்டும் என்று முடிவெடுத்தேன். அதே சமயம் கல்லூரி படிப்பு முடித்த நிலையில் பல நூலகங்களுக்குப் படையெடுத்தேன். 'பஞ்ச்' போன்ற வெளிநாட்டு கேலிச்சித்திரப் பத்திரிகைகளைப் பார்த்து அதில் உள்ள சித்திரங்களை வரைந்து பழகினேன். வெளிநாட்டு அரசியல் நிகழ்வுகள் பலவும் மனப்பாடமாகி விட்டன!

நான் வரைந்து அச்சில் முதலில் வந்தது ஷேக்ஸ்பியர் மற்றும் மாம்பழம் படங்கள். 'வானொலி' என்ற பத்திரிகையில் ஒரே இதழில் அவை வெளிவந்தன. குடும்பத்தில் மூத்த மகனாகப் பிறந்து விட்டதால் சம்பாதிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் எனக்கிருந்தது. தொலைபேசித் துறையில் சேஷாத்திரி என்பவர் பணிபுரிந்து கொண்டிருந்தார். எனக்கு ஏதாவது வேலை வாங்கித் தருவார் என்று அவரைப் போய் பார்க்கச் சொன்னார்கள். அவர் என் ஓவியங்களைப் பார்த்து விட்டு, வேலைக்கான என் விண்ணப்பங்களைக் கிழித்துப் போட்டு விட்டார். கல்கி, விகடன் என்று பத்திரிகை அலுவலகங்களுக்கு அழைத்துச் சென்று என்னை அறிமுகப்படுத்தினார். நகைச்சுவை துணுக்குகளுக்குப் படம் வரைய வாய்ப்பு கிடைத்தது. அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த லிண்டன் ஜான்ஸன் படத்தை விகடனுக்காக வரைந்தேன். அதற்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டார்கள். பல்வேறு தலைவர்களை நான் கேலிச்சித்திரங்களாக வரைந்திருப்பதைப் பார்த்த விகடன் ஆசிரியர் பாலசுப்பிரமணியம் 'இதோ ஒரு குட்டி ஆர்.கே. லட்சுமணன்' என்றார். எனக்குள் பயம் பிடித்துக்



கொண்டது. நாம் யாருக்கும் ஜெராக்ஸாக இருக்கக் கூடாது; நமக்கென்று ஒரு 'ஸ்டைல்' இருக்க வேண்டும் என்று முனைந்து முயற்சி செய்து எனக்கென்று ஒரு பாணியை உருவாக்கிக் கொண்டேன். எனவே நீங்களும் பல்வேறு சித்திரக்காரர்கள் வரைந்த படங்களைப் பார்த்து பழகிக் கொண்டாலும், உங்களுக்கென்று தனிப் பாணியை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

கார்ட்டூன்கள் பலவிதம். நகைச்சுவை துணுக்குகளுக்கான தமாஷ் படம், குட்டிக் கதை கூறும் வரிசையான கார்ட்டூன்கள், சமூகத்தைப் பற்றிய கேலிச் சித்திரங்கள், கடைசியாக வருவதுதான் அரசியல் கார்ட்டூன்கள். ஒரு அரசியல் கார்ட்டூனிஸ்டுக்கு நல்ல மூளைப் பயிற்சி அன்றாடம் வேண்டும். நகைச்சுவை உணர்வு, அரசியல் அறிவு வேண்டும். பஞ்சதந்திரக் கதைகள், புராணங்கள் ஆகியவற்றைப் பற்றியும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அவற்றில் சொல்லப்பட்டுள்ள சம்பவங்களை அரசியல் நடப்புகளோடு பொறுத்திப் பார்த்து கார்ட்டூன் போட்டு, நாட்டுநடப்பைப் பளிச்சென காட்ட வேண்டும். காமராஜ் படத்தைப் போட்டால், அது காமராஜ்தான் என்று பார்ப்பவர்களுக்குப் புரிய வேண்டும். பல்வேறு தலைவர்களுக்கும் அங்க லட்சணங்கள் இருக்கின்றன. அவற்றைக் கூர்ந்து கவனித்து படங்களைப் போட்டுப் பழக வேண்டும். எப்போதும் அலர்ட்டாக இருக்கணும். ஐடியாக்கள் எந்த நேரமும் மின்னலடிக்கலாம். வாட்டர் கேட் பிரச்னையில் ஆட்சியை இழந்தார் ஜனாதிபதி நிக்ஸன். அதைக் கார்ட்டூனாக விளக்க வேண்டும். எப்படி? யோசித்துக் கொண்டிருந்தேன். பென்சில் கீழே விழுந்து விட்டது. எடுப்பதற்குக் குனிந்தேன். என் நாற்காலியில் இருந்த வளைவான மூன்று கால்கள் தெரிந்தன. உடனே தோன்றியது ஐடியா. நாற்காலியில் நிக்ஸனை உட்கார வைத்தேன். அதன் கால்களை வாட்டர்கேட் ஆக்டோபஸாக மாற்றி நிக்ஸனைச் சுற்றி வளைக்கச் செய்தேன். கார்ட்டூன் படம் உருவாகி விட்டது. இதுபோன்று பல அனுபவங்கள் எனக் குண்டு.

ஒரு துறையில் சாதனை புரிய வேண்டுமென்றால் அதற்கான முயற்சியைப் பத்து வயதிலேயே துவங்க வேண்டும். நான் இளம்வயதில் படங்கள் வரைந்தாலும் இருபது வயதுக்கு மேல்தான் கேலிச் சித்திரக்காரர் ஆக வேண்டும் என்று முழு மூச்சோடு இறங்கினேன். அதனால் ஓவர் டைம் செய்ய வேண்டியதாகி விட்டது. உங்களுக்கு கார்ட்டூனிஸ்ட் ஆக ஆசை இருந்தால் பத்து வயதிலேயே முயற்சி துவங்குங்கள். சரித்திரத்தைப் பார்த்தால் இருபது வயதுக்குள் மகத்தான சாதனை செய்தவர்களைத் தெரிந்து கொள்ளலாம். தினசரி செய்தித்தாள்களைப் படியுங்கள். நாட்டு நடப்புகளைத் தெரிந்து கொள்ளுங்கள். அவற்றை நகைச்சுவையாக 'உல்டா' செய்ய முயலுங்கள். தலைவர்களின் படங்களைப் (கேரிகேச்சர்கள்) போடப் பழகுங்கள். இப்போதெல்லாம் அரசியல் கார்ட்டூன்கள் போடும் சித்திரக்காரர்கள் கூட, வாழ்க்கையில் வசதியும் வாய்ப்பும் பெற்று சிறந்து விளங்குகிறார்கள். என் வாழ்க்கையில் இருந்து நான் எடுத்துக்காட்டிய சில சம்பவங்கள் உங்கள் ஆர்வத்திற்கு செழுமை ஊட்டும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. ஆல் த பெஸ்ட்!

சந்திப்பு : **ப்ரியன்**

வைகுண்டம் எவ்வளவு தூரம்?

நாயக்கர் காலத்தில் கடைசியாகத் தஞ்சையை ஆண்டவர் மன்னர் நாயுடு. அவரிடம், 'ஷராப்'பாக இருந்தவர் சேஷாசல செட்டியார். அவருடைய ஒரே மகன் பெரியசாமி மிகுந்த அறிவாளி. கல்வி கேள்விகளில் சிறந்தவன். தெய்வபக்தி மிகுந்தவன்.

அரசவையில் இருந்தவர்களெல்லாம் ஜால்ரா போடுபவர்களாய் இருந்தனர். அரைகுறை படிப்பாளிகள். அதனால் தந்தைக்குப் பின் 'ஷராப்' ஆக மறுத்து விட்டான் பெரியசாமி.

சேஷாசலம் மகனுக்கு வளையல் கடை வைத்துக் கொடுத்தார். பெரியசாமிக்கு இரக்கக் குணம் அதிகம். யாராவது காசில்லாமல் ஏக்கத்தோடு ஏதாவது வளையலைப் பார்த்தால் ஓசியாகவே தந்து விடுவார்.

இதனால் கடையில் கூட்டம் இருந்தது. கல்லாவில் காசு தான் சேரவில்லை! நஷ்டத்தில் வியாபாரம் செய்ய முடியுமா? கடை மூடப்பட்டது.

"ஊரார் பித்தன் என்று இகழ்கிறார்கள். எந்தப் புராணத்தில் கடமையைச் செய்ய வேண்டாம் என்று சொல்லி இருக்கிறது. நீங்கள் புத்தி சொல்லக் கூடாதா?" என்று பிரவசனம் செய்யும் பாகவதர்களிடம் முறையிட்டார் செட்டியார்.

அவர்களும், "நீ வணங்கும் திருமால் ராமாவதாரம் எடுக்கும் போது தந்தை வாக்கைக் காப்பாற்ற பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்யவில்லையா? உன் தந்தை சொற்படி உத்யோகம் ஏற்பதே உனக்குப் பெருமை" என்று அறிவுரை கூறி



னர்.

பெரியசாமியும் தந்தையிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு 'ஷராப்' உத்யோகத்தை ஏற்றுக் கொண்டார். 'ஷராப்' பதவியிலிருப்பவர்கள் நடந்து போகக் கூடாது.



குதிரையில்தான் போக வேண்டும்.

ஒருநாள் பெரியசாமி குதிரையில் அரண்மனைக்குப் போகும் போது குதிரைக் குளம்பு பட்டு சிறுவர்கள் விளையாடிய கோலிகள் உடைந்தன. சிறுவர்கள் பெரியசாமியைக் குதிரையிலிருந்து இழுத்து, கீழே தள்ளி நையப் புடைத்தனர். பெரியசாமி எதிர்க்கவோ, தடுக்கவோ இல்லை.

'தப்புக்குத் தண்டனை' என்று பேசாதிருந்தார். அப்போது அவ்வழி வந்த அவரது நண்பர் யாதவ ரங்கன் சிறுவர்களை விரட்டி பெரியசாமியைக் காப்பாற்றினார்.

அன்றுடன் அரண்மனை வேலையை உதறி எறிந்தார் பெரியசாமி. மக்கள் அவரைப் பெரிய தாசர் என்று கொண்டாடினர்.

ஒருநாள்

ஆர். பொன்னம்மாள்

அரசர் புலவர்களிடம், "இங்கிருந்து வைகுண்டம் எவ்வளவு தூரம்?" என்று கேட்டார்.

புலவர்கள் பதில் சொல்ல முடியாமல் விழித்தனர். ஒருவர், "அரசே! பெரியதாசர் தான் இதற்கு விடை சொல்ல முடியும்!" என்றார். உடனே பெரியதாசரை அழைத்து வரச் சொன்னார் அரசர்.

பெரியதாசர் வந்ததும் தன் கேள்வியைக் கேட்டார் அரசர். "ஆதிமூலமே'என்று பூலோகத்திலிருந்து யானை அலறியதும் ஓடிவந்து காப்பாற்றி இருக்கிறார் மகாவிஷ்ணு. அதனால் கூப்பிடு தூரத்தில்தான் வைகுண்டம் இருக்க வேண்டும்" என்றார் தாசர்.

ஏராளமாக வெகுமதிகள் தந்து பாராட்டிய அரசர் "என்னைப் போற்றி ஒரு பாட்டுப் பாடுங்கள்" என்றார்.

"நரசிம்மத்தைப் பாடும் வாயால் நரனைப் பாட மாட்டேன்" என்றார் பெரியதாசர்.

அவ்வளவுதான்! அரசருக்குக் கோபம் வந்து விட்டது. 'இவனைப் புலிக் கூண்டில் தள்ளுங்கள்' என்று உத்தரவிட்டார்.

நரசிம்மரைத் தியானம் செய்து கொண்டிருந்த தாசரைப் புலி வணங்கியது. கத்தி, ஈட்டி போன்ற கூரான ஆயுதங்களால் குத்தச் செய்தார் அரசர். ஆயுதங்கள் முனை மழுங்கி உடைந்தன. சூட்டுக்கோல் குளிர்ந்தது. குடித்த நஞ்சு அமிர்தமாயிற்று. பட்டத்து யானையை அங்குசத்தால் மத்தகத்தில் குத்தி மதங்கொள்ள வைத்து தாசரைத் தூரத்தினர்.

யானையின் கண்களுக்குத் தாசர் சிங்கமாகக் காட்சி அளித்ததால் யானை பயந்து விழுந்து இறந்தது. கல்லில் கட்டி குளத்தில் இறக்கினார்கள். கல் தெப்பமாக மிதந்தது. முடிவாகக் கழுவில் ஏற்ற உத்தரவிட்டார் அரசர்.

மக்கள் கண்ணீர் பெருக்கினர். 'அரசனுக்கும், நாட்டுக்கும் கேடு வரப் போகிறது" என்று பேசிக் கொண்டனர்.

தர்பாரில கேட்ட கர்ஜனையைக் கண்டு அரசர் உட்பட அனைவரும் அஞ்சினர். நரசிம்மமூர்த்தி கையில் சாட்டையுடன் அனைவரையும் விளாசினார்.

"ஐயோ! அம்மா" என்று அலறினார் அரசர்.

"என் பக்தன் என்ன குற்றம் செய்தானென்று கழுவில் ஏற்றச் சொன்னாய்? தண்டனையை நிறுத்து. மன்னிப்புக் கேள், ஓடு" என்று உறுமினார்.


குதிகால் பிடரியில் பட ஓடி வந்த அரசர், தாசரின் பாதங்களில் விழுந்து மன்னிக்கும்படி வேண்டினார். பொறாமைக்காரர்களும், அரசனுக்குத் தூபம் போட்டவர்களும் தாசர் பாதங்களைக் கண்ணீரால் நனைத்தனர். நடந்ததை அறிந்த தாசர், "அரசே! நீங்கள் பாக்கியவான். தியானம் செய்த என்னை ஒதுக்கி உங்களுக்குத் தரிசனம் தந்திருக்கிறார் நரசிம்மமூர்த்தி" என்று உருகினார்.

மக்கள் தாசரைக் கொண்டாட நாட்டில் குதூகலம் நிரம்பியது.



"மருந்து சீட்டையே பார்க்காமல் கையில் கிடைத்த மருந்தைக் கொடுக்கிறீர்களே?"
"இது கைகண்ட மருந்து!"
— எஸ். மோகன்

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. ராமனின் தந்தை (5)
7. கசப்புச் சுவையுடைய காய் (3)
14. சிங்கத்தை விட புலி ________ உடையது (3)

வலமிருந்து இடம்

4. பணத்தைச் சேமிக்கவும், கடன் பெறவும் ஏற்ற இடம் (3)
5. மழையை இப்படியும் அழைக்கலாம் (2)
10. ஒரு வருடத்திற்கு இது 12 (3)
12. இயற்கையை ________ (2)
16. கடுகு, மிளகு, சீரகம் போன்ற பொருட்களில் ஒன்று. குளிர்ச்சியானது (5)


மேலிருந்து கீழ்

1. தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்; ________ மறுபடியும் வெல்லும் (4)
2. வெட்டுக்கிளிக்கு இது வெள்ளையாக இருக்கும் (4)
3. ஜோசியத்துக்குப் பயன்படும் பறவை (2)
4. பெண்களின் கைகளை அலங்கரிக்கும் ஆபரணம் (4)
8. ஆடல், பாடல் என்பது ________ (2)
11. பொருட்களின் மூன்று நிலைகளில் ஒன்று ________ (4)
13. ஒட்டப் பந்தயத்தில் முயலைத் தோற்கடித்த பிராணி (2)


கீழிருந்து மேல்

6. கோள்களின் தலைவன் (4)
9. ஆடையை நெய்ய இது அவசியம் (2)
14. நிறம் (4)
15. அக்கா என்பதை இப்படியும் சொல்லலாம் (4)
16. சுப காரியங்களில் இதுவும் பாக்கும் கட்டாயம் இடம் பெறும் (4)

விடை 74 பக்கம்




— ப. கார்த்திக், அனந்தபுரம், செஞ்சி.



எழுப்பியது யார்?

சமூக அறிவியல் பாடவேளை. ஆசிரியர் ஷாஜஹான் பற்றி பாடம் நடத்தி முடித்து விட்டு, வரிசையாகக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டு வந்தார். என் நண்பனிடம் "தாஜ்மஹாலை எழுப்பியது யார்?" என்று கேட்டார். வேகமாக எழுந்தவன் "தாஜ்மஹாலைத் தூங்க வைத்தது யாரோ, அவங்கதான் அதை எழுப்பியிருக்கவும் முடியும்" என்று சொன்னான். நாங்கள் சட்டென சிரித்து விட்டோம். ஆசிரியரோ "ரொம்ப புத்திசாலித்தனமா பேசறதா நினைப்பா?" என்று கோபமாகக் கேட்க, அவன் மன்னிப்புக் கேட்டான்.


– அ.பேச்சியப்பன், ராஜபாளையம்.



ஓட்டக்கூடாது

எங்கள் பள்ளி வளாகத்துக்குள் யாரும் சைக்கிள்களை ஓட்டிக் கொண்டு வரக் கூடாது. இறங்கி உருட்டிக் கொண்டுதான் வர வேண்டும். பள்ளி வாசலில் 'சைக்கிள்களில் வருபவர்கள், கீழே இறங்கி வர வேண்டும்' என்ற பலகை இருக்கும். அன்று என் நண்பன் அவன் அக்காவின் சன்னியை ஓட்டிக் கொண்டு நேரே பள்ளிக்குள் நுழைந்தான். காவலாளி ஓடி வந்து "பள்ளிக் கூடத்துக்குள் ஓட்டக் கூடாதுன்னு தெரியாதா?" என்றார் கோபத்துடன். "சைக்கிள் தான் ஓட்டக் கூடாதுன்னு போட்டிருக்கீங்க. சன்னி ஓட்டக்கூடாதுன்னு போடலையே" என்றான் நண்பன். உடனே காவலாளி "நட ஹெச்.எம். ரூமுக்கு" என்றவுடன் மன்னிப்புக் கேட்டுவிட்டுச் சென்றான்.

– சி. ராஜசேகரன், இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம்.



லீவ் லெட்டர்

எங்கள் ஆங்கில ஆசிரியர் லீவ் லெட்டரை ஆங்கிலத்தில் தான் எழுத வேண்டும் என்றும் தவறாக இருந்தாலும் பரவாயில்லை என்றும் கூறியிருந்தார். இப்படி சொன்னாலும் தவறாக எழுதிய கடிதத்தை அனைவருக்கும் முன்பு படித்துக் காட்டுவார். எனவே லீவ் லெட்டரை வீட்டில் உள்ள பெரியவர்களிடம் எழுதி வாங்கிக் கொடுப்போம். ஒரு நாள் என் நண்பன் தமிழில் லீவ் லெட்டரை எழுதிக் கொடுத்தான். ஆசிரியர் அவனிடம் "ஏன் ஆங்கிலத்தில் எழுதவில்லை?" என்று கேட்டார். உடனே அவன் "ஆங்கிலத்துக்கு உடம்பு சரியில்லை" என்றான் பதட்டத்தில். ஆசிரியர்

ஸ்கூ

வியப்புடன் "என்ன சொல்றே?" என்றார். "எங்க அண்ணன் தான் லீவ் லெட்டர் எழுதித் தருவார். அவருக்கு உடம்பு சரியில்லை" என்றான். "நீயே எழுதலாமே" என்றார் ஆசிரியர். "நீங்க தப்பா எழுதினா படிச்சுக் காட்டுவீங்களே சார்" என்றான். ஆசிரியர் இனி அப்படி செய்ய மாட்டேன் என்றார்.

— ராம்கி, புதுக்கோட்டை.

வால் எதற்கு?

எங்கள் பள்ளியில் ஒரு நாள் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்ததைக் கவனிக்காமல் ஒரு மாணவன் பள்ளி சுவற்றில் உள்ள




வால் எதுக்கு?

ஒரு பொந்தில் எலி நுழைவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஆசிரியர் பாடம் நடத்துவதை நிறுத்திவிட்டு அம்மாணவனை அழைத்து, "பாடத்தைக் கவனிக்காமல் எலியைத்தானே கவனித்துக் கொண்டிருந்தாய்" என்றார். ஆசிரியர் கவனித்துவிட்டதை அறிந்து "ஆம்" என்று குற்றத்தை ஒப்புக் கொண்டான், "சரி, எலியைப் பற்றி ஒரு கேள்வி கேட்கிறேன் சொல்கிறாயா?" என்றார். அதற்கு அவனும் 'கேளுங்கள்' என்றான். "எலிக்கு வால் எதற்கு?" என்றார். "எலி செத்துப் போனால் தூக்கி எறிய வால் உதவியாக இருக்கும்" என்றான். ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்துவிட்டோம்.

— ஆர்.தங்கராஜ், திருப்பூர்.

மணி

ஒரு நாள் எங்கள் தமிழ் ஆசிரியர் மனுநீதிச் சோழன் பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார். ஆசிரியர் அதனை விவரிக்கையில் "கன்றை



இழந்த பசுவானது நீதிவேண்டி மனுநீதிச் சோழனின் அரண்மனை வாயிலில் கட்டப்பட்டிருந்த மணியை அடித்தது" என்றார். அதனை அரைகுறையாகக் கேட்ட மாணவன் "மணி அடிச்சிருச்சா சார்" என்றான். ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்தோம். ஆசிரியர் "மணி எப்ப அடிக்கும்னு காத்துக்கிட்டு இருக்கே போலிருக்கு. இன்னும் ஐந்து நிமிடங்களில் நான் போய் விடுவேன்" என்றார்.

— கா. சசி, மன்னார்குடி.

ஏன் லேட்?

வகுப்பு நடந்து கொண்டிருந்தது. இருபது நிமிடங்கள் தாமதமாக மூன்று மாணவர்கள் வந்தனர். ஆசிரியர் பாடத்தை நிறுத்திவிட்டு முதலில் ஒருவனிடம் "ஏன் லேட்?" என்று கேட்டார். அவன், "சைக்கிள் பங்சர் சார்" என்றான். அடுத்தவனிடம் கேட்டார். சைக்கிள் பங்சர் என்றான். மூன்றாமவனிடம் கேட்டார். அவனும் சைக்கிள் பங்சர் என்றதும், கோபமாகிய ஆசிரியர், "என்ன மூவரும் பேசி வைத்துக் கொண்டு வந்தீர்களா.. எப்படி மூவருக்கும் ஒரே நேரத்தில் பங்சர் ஆகும்?" என்று கேட்டார். ஒருவன் அமைதியாக "நாங்கள் மூன்று பேரும் ஒரே சைக்கிளில்தான் வந்தோம்" என்றான். வகுப்பே சிரித்தது. "இதை முதல்லேயே சொல்றதுக்கென்ன?" என்றார் ஆசிரியர்.

— ராமகிருஷ்ணன், காயக்காடு.

பாறையைத் தூக்க மறுத்த யானை!

அன்று விடுமுறை நாளானதால் இளங்கோ, அமுதன், பூங்குன்றன், பூங்கோதை, கண்ணன் ஆகிய மாணவர்கள் சைக்கிள்களில் மலையடிவாரம் சென்றார்கள். அடிவாரத்துக் குடிசையிலிருந்த நீலன் இவர்களைப் பார்த்து ஓடி வந்தான்.

''நீலா இன்னைக்கு அடிவாரத்துலயே எங்காவது கூட்டிப் போ. நாங்க வர்றோம். பூங்கோதைக்கு காலில் புண். மலையேற முடியாதாம்'' என்று அமுதன் கூறினான்.

''சரி சாமி வாங்க போகலாம்'' என்றவாறே ஒற்றையடிப் பாதையில் நடந்தான் நீலன். சைக்கிள்




களை மரத்தடியில் வைத்துப் பூட்டிவிட்டு மாணவர்களும் உடன் சென்றார்கள். பாதை ஓரத்தில் துத்திச் செடிகள் செழிப்பாக வளர்ந்து சிவப்புப் பூக்கள் அழகாய் பூத்திருந்தன.

''சாமி இந்தச் செடிகளைப் பார்த்தீங்களா? எவ்வளவு நல்லா வளர்ந்துருக்குது'' - நீலன்.

''ஆமாப்பா, என்ன செடி இது? எதுக்கு ஆகும்?'' இளங்கோ ஆர்வமுடன் கேட்டான்.

''சாமி இதுக்குப் பேரு துத்தி. நல்ல மருந்துச் செடி. இந்த இலைகளை இடிச்சி சாறு எடுத்துச் சாப்பிட்டா நல்லா உடல் வளர்ச்சி உண்டாகும். நீங்க தங்க பஸ்பம் கேள்விப்பட்டிருக்கிங்களா?''

''ஆமாம். பணக்காரங்கதான் அதை வாங்கிச் சாப்பிடுவாங்களாம்! உடம்பு



பளபளப்பா வருமாம்'' என்று கண்ணன் கூறினான்.

''ஆமா சாமி, தங்கத்தைப் புடம் போட்டு பவுடராக்கி மருந்து கலந்து சாப்புடுறதுதான் தங்கபஸ்பம். இது ரொம்பத் துட்டு ஆகும். ஆனால் இந்தத் துத்திப் பூக்களைப் பறிச்சி ஒரு குவளைப் பாலுல போட்டுக் காய்ச்சி சாப்பிட்டா பாயசம் மாதிரி ருசியா இருக்கும். ஒரு கிராம் தங்க பஸ்பம் செய்யற வேலையை இந்த ஆறு பூக்கள் செய்யும். உடம்புல தைரியம் கூடும், பளபளப்பா ஆகும்'' என்று சொல்லிக் கொண்டே போனான் நீலன்.

''அப்ப நாங்க பறிச்சிட்டுப் போகலாமா?'' இது பூங்கோதை. ''சாமி இது உங்க ஊருலயே இருக்கும். நீங்க

கொ.மா. கோதண்டம்

கவனிச்சிருக்க மாட்டீங்க. இந்தச் செடியை அடையாளம் பார்த்துக் கோங்க. ஊர்ல போயி பூவைப் பறிச்சி தினமும் காய்ச்சி சாப்பிட்டா புத்திகூட வளர்ச்சி ஆகும்'' – நீலன்.

''சரி வாங்க போகலாம்'' – இளங்கோ.

அவர்கள் நடந்து கொண்டிருந்தனர். சிறிது தூரத்தில் செடிகளில் மஞ்சள் பூக்கள் கொத்து கொத்தாகப் பூத்திருந்தன.

''சாமி இது ஆவாரம் செடி. இதுவும் ரொம்ப முக்கியமான மூலிகை. இந்த இலைகளைக் காய வச்சி தீயில போட்டு அதன் புகையைக் காட்டுனா கால், கை வாத வீக்கங்கள் குறையும், வலியும் இருக்காது. அப்புறம் இந்தப் பூக்களை பறிச்சி நிழல்ல காயப் போட்டு பவுடராக்கி தினமும் பாலிலோ வெந்நீரிலோ கலந்து சாப்பிட்டா, உடம்பு துர்நாற்றம் இருந்தா போயிடும். உப்புச் சத்துக் குறையும். சர்க்கரை நோயும் குறையும். வெயில்ல போகும் போது கொஞ்சம் இலைகளைப் பறிச்சி தலையிலே வைத்துக் கட்டுப் போட்டுட்டா வெயில் உடம்பைத் தாக்காது''



''குரைக்கிற நாய் கடிக்காது. ஏன் தெரியுமா?''

''தெரியலையே!''

''ரெண்டு வேலையையும் ஒரே நேரத்தில் அதால செய்ய முடியாது!''

— எம். வெங்கடாசலம்

என்றான் நீலன்.

''யப்பா நீலா இரு. இதை எல்லோரும் எழுதிக்கிறோம். இந்த ரெண்டும் இருந்தா டாக்டர்கிட்டயே போக வேண்டாம் போலிருக்கே?'' – பூங்குன்றன்.

''இதுகூட அருகம்புல்லுச் சாறும் காலையில சாப்பிட்டா யாரும் டாக்டர் கிட்டயே போகவேண்டாம். இதுகூட வேண்டாமே சாமி, பசிச்சி சாப்பிட்டு, எண்ணெய்ப் பலகாரத்தை ஒதுக்கிட்டு நேரத்துக்குத் தூங்கி சுத்தமா இருந்தாலே எந்த நோயும் வராதில்லே'' என்றான் நீலன்.

''சரிதான், நீயே வரவர பெரிய டாக்டரா ஆயிடுவே போலிருக்கு. ஒரு நாள் எங்க பள்ளிக்கூடத்துல பேச வர்றியா?'' – பூங்கோதை.

''போங்க சாமி. நான் படிக்காதவன் எனக்கு பேசவெல்லாம் தெரியாது. எங்க பாட்டான் வைத்தியர். அவரு சொன்னததான் நான் சொன்னேன்'' அவர்கள் பேசிக்கொண்டே நடந்தனர்.

அப்போது 'கிக்பிக்'கென கத்தியவாறே ஏதோ பிராணி மரங்களில் தாவி ஓடியது.

''நீலா இது என்ன பிராணி?''

''இதுதாங்க சாம்பல் நிற மலையணில். இது நம்ம வட்டாரத்துலதான் நிறைய இருக்கு. இதுக்கு அரசாங்கம் பாதுகாப்புச் சட்டம் போட்டிருக்கு.''

''ரோமம் எவ்வளவு அழகா இருக்கு பார்த்தியா?'' என்று வியந்தபடி கேட்டாள் பூங்கோதை.

சிறிது தூரம் சென்றதும் ஒரு இடத்தில் ஆட்கள் சத்தம் கேட்டது. அங்கே சென்றார்கள். ஐந்தாறு ஆட்களும் அருகில் ஒரு யானையும் இருந்தது.

''என்ன நீலா யானை பக்கத்தில் ஆட்களெல்லாம் நிற்கிறாங்க?'' கண்ணன்.

''இது வளர்ப்பு யானையா இருக்கும். வாங்க போய்ப் பார்க்கலாம்'' என்றான் நீலன்.

அங்கே யானைப்பாகன் லத்திக் கம்பால் அடிப்பதும் அதட்டுவதுமாக இருந்தான். யானை அசையாமல்

நின்றது "சாமி யானையை அடிக்காதீங்க சாமி கோபம் வந்ததுன்னா எல்லாத்தையும் தூக்கி எறிஞ்சிடும்" என்று நீலன் கூறினான்.

"ஆமா, ஆலோசனைக்கு இவனைத் தான் தேடுனோம். வேலையைப் பார்த்துக்கிட்டுப் போ!" பாகன் எரிந்து விழுந்தான். தனியாக நின்ற ஒருவரிடம் நீலன் சென்று "என்ன விஷயங்க?" என்று கேட்டான்.

"பெரியவர் இருக்காரே, அவரு எங்க முதலாளி. இது அவரு தோப்பு. இந்த மேட்டுல பெரிய கிடங்கு இருக்கு. மேயப் போற மாடு தரை வழுக்கி கெடங்குல விழுந்துடுது. அதைத் தூக்குறது பெரும்பாடா போகுது... அதால கிடங்கை மூடணுமுன்னு முதலாளி சொன்னார். இதை மூடணுமனா நிறைய ஆட்கள் வேணும். கீழேயோ நிறைய பாறை இருக்கு. அதை நாம தூக்க முடியாது. அதனால வளர்ப்பு யானையைக் கூட்டி வந்தோம்" - என்றார்.

"இது இந்தப் பாறைகளை ரெண்டு நாளா தூக்கிக் கிடங்குல போட்டது. இன்னிக்குப் போட்டா கிடங்கை மூடிடலாம். ஆனா இன்னக்கி யானை பாறையைத் தொட மாட்டங்கிது. என்னன்னுதான் தெரியலை" என்று அவர் சொல்லிவிட்டு அந்தப் பக்கம் போய்விட்டார்.

"**நீ**லா என்னவாக இருக்கும்?" - பூங்குன்றன்.

"இருங்க சாமி" என்ற நீலன் சரிவின் மேல ஏறி கிடங்குப் பக்கம் சென்று எட்டிப் பார்த்தான். அதே நேரம் யானையை அடிக்க ஓங்கிய பாகனை யானை தும்பிக்கையால் ஒரு தட்டு தட்டியது. அவன் தூரப் போய் மணலில் விழுந்தான். பின் எழுந்து வந்து உடம்பைப் பிடித்துவிட்டவாறே ஒரு பாறையில் அமர்ந்துகொண்டான்.

மேட்டில் ஏறி கிடங்கை எட்டிப் பார்த்த நீலன் "ஐயா! இங்க வாங்க, இங்க வந்து பாருங்க சாமி" என்று சத்தமிட்டான்.

தோப்புக்கார பெரியவரும் அடிபட்ட பாகனும் தவிர அனைவரும் மேட்டில் ஏறி கிடங்கை எட்டிப் பார்த்தார்கள்.

"உள்ளே முயல் விழுந்துருக்கு சாமி, அது மேல பாறை விழுந்துருமுன்னுதான் யானை பாறைகளை தூக்கிப் போட மாட்டேங்குது" என்றான் நீலன்.

"நம்ம சத்தம் கேட்டு முயல் துள்ளுறதைப் பாரு. யானைக்கு அறிவைப் பார்த்தியா!" - என்றான் இளங்கோ.

"மனுசங்களுக்கு இல்லாத அறிவு சில மிருகங்களுக்கு இருக்குமுன்னு கேள்விப்பட்டது உண்மைதான்" - நீலன் ஓடிச் சென்று ஒரு பெரிய மரக்கிளை எடுத்து வந்து கிடங்கில் நிறுத்தி அதன் வழியாக இறங்கி சிரமப்பட்டு முயலைப் பிடித்து வந்து தரையில் விட்டான்.தாவி ஓடி மறைந்தது முயல்.

யானை ஒரு பெரிய உருட்டுக்கல்லை தூக்கிக் கொண்டு மேட்டில் ஏறியது.

"நீலன் போய்ப் பார்க்கலேனா இன்னக்கி வேலையே முடிஞ்சிருக்காது" என்றார் பெரியவர்.


நீலனுடன் மாணவர்கள் திரும்பி வந்தார்கள்.



"அதோ... வான்கோழியைப் பாருன்னா... மேலே ஆகாயத்தை ஏன் பார்க்கிறே...?"


"வானத்துல கோழி பறக்குதாக்கும்னு பார்த்தேன்!"

— பொறையாறு புலவர் கணேசன்




வானம் நமக்கு நீல நிறத்தில் தெரிகிறது அல்லவா? வானம் உண்மையில் நீலநிறத்தில் இல்லை. நாம் வசிக்கும் பூமி கோள வடிவில் உள்ளது. பூமியைச் சுற்றி வாயு மண்டலம் சூழ்ந்துள்ளது. அதாவது பிராண வாயு, கரியமில வாயு, நைட்ரஜன் வாயு, நீராவித் துளிகள் ஆகியவை சூழ்ந்துள்ளன. இந்த வாயு மண்டலத்தில சூரிய ஒளி ஊடுருவும் போது, வெண்மையாக இருந்த ஒளி பல்வேறு நிறப்பட்டைகளாகப் பிரிகிறது. அதாவது சிகப்பு, ஆரஞ்சு, வயலட், நீலம் முதலிய ஏழு வண்ணங்களாகப் பிரிகிறது. இதில் நீல நிறம் மட்டும் அதிகமாகப் பரவுகிறது. இதனால்தான் ஆகாயம் நமக்கு நீலநிறமாகக் காட்சியளிக்கிறது. சந்திரனிலிருந்து மேலே பார்த்தால், ஆகாயம் கருமையாகத்தான் தோன்றும். காரணம், பூமியில் இருப்பது போல் வாயு மண்டலம் சந்திரனில் கிடையாது.

– மு. பெரியசாமி, விட்டுக்கட்டி.



ஆங்கில அகராதியை உருவாக்கியவர் என்ற பெருமைக்கு உரியவர் சாமுவேல் ஜான்சன். அவர் ஒரே ஒரு நாவலையும் எழுதினார். எதற்காக எழுதினார் என்றால், நோய்வாய்ப்பட்டிருந்த தமது தாயாரின் வைத்தியச் செலவைச் சமாளிப்பதற்காக. ஏழே நாட்களில் அவர் எழுதி முடித்த 'அபிசீனிய இளவரசர் ஏசேலஸ்' என்ற நாவலுக்கு நூறு பவுன்ட் சன்மானமாகக் கிடைத்தது. ஆனால், அத் தொகை தாயாருடைய வைத்தியச் செலவுக்கு உதவவில்லை. ஏனெனில், பணம் கிடைப்பதற்குள் அவர் இறந்து விட்டார்.

– ஏ.எல். பாத்திமா, காரைக்கால்.




நம்முடைய உடல் நன்றாக வியர்த்திருக்கும் போது காற்றடித்தால் மிகவும் குளிர்ச்சியாக இருக்கும். காரணம் – வேகமாக வீசும் காற்றானது உடலிலிருந்து வியர்வை ஆவியாவதை அதிகரிக்கும். இந்த ஆவியாதல் செயலினால் உடலில் இருந்து பெருமளவு வெப்பம் வெளியேறி குளிர்ச்சி உண்டாகும். இதனாலேயே வியர்த்திருக்கும் போது காற்றடித்தால் சுகம் ஏற்படுகிறது.

– ஆர்.ஆர். பூபதி, திண்டுக்கல்.

நத்தையின் கால்கள் சப்பட்டையாகவும், வழுவழுப்பாகவும் இருக்கின்றன. இதன் கால்களில் சின்னச் சின்ன சுரப்பிகள் இருக்கின்றன. அவற்றிலிருந்து பிசுபிசுப்பான திரவம் கசிந்து கொண்டிருக்கும். இந்தத் திரவத்தின் மூலம் நத்தை லேசாக வழுக்கியபடி நகர்ந்து செல்கிறது. நத்தையின் கால்கள் மிகவும் உறுதியானவை. மிகக் கூர்மையான கத்தி முனையில் கூட அது காயம் படாமல் நகர்ந்து சென்று விடும்.

– மு. பெரியசாமி, விட்டுக்கட்டி.

பொதுவாக மலை என்றாலே கரடு முரடாகவும், மேடு பள்ளமாகவும், வானு



பிருந்தாவனம்

யர்ந்து நிற்கும். இதற்கு விதிவிலக்காக உள்ளது மேசைமலை. இதன் மேற்பரப்பு ஏறக்குறைய சமதளமாக உள்ளது. எனவே, பார்க்க பெரிய மேசை போல் இருப்பதால் மேசை மலை எனப்படுகிறது. 1087 மீ. நீளம் உள்ள இம் மலை தென் அமெரிக்காவில் தொடங்கி கேப் ஆஃப் குட் ஹோப்பில் முடிவடைகிறது. பனி படர்ந்த இம் மலையின் மேற்பரப்பைப் பார்க்கையில் வெள்ளைத் துணியால் மூடிய பெரிய மேஜை போல் இருக்கும். மலையின் பெரும் பகுதி மணற் பாறையால் ஆனது.

– க. கண்மணி, மிட்டூர்.


வான்பிரிச் என்ற பிரெஞ்சு நாட்டு விஞ்ஞானி தேனீக்களின் நடனம் பற்றிய ஆய்வை நடத்தினார். இதில் தேனீக்கள்



வட்ட நடனம், வாலாட்டும் நடனம் என்ற இரு நடனங்கள் ஆடுவதாகக் கண்டறிந்தார். தேனீக்கள் வட்ட நடனம் ஆடினால் உணவு (தேன்) 300 அடிக்குள் இருப்பதாகவும், வாலாட்டும் நடனம் ஆடினால் 300 அடிக்கு அப்பால் இருப்பதாகவும் அர்த்தமாம். உணவு கிடைக்கும் திசை, தூரம் இவற்றை உணர்த்தும் வகையில் அவற்றின் நடனம் மாறி மாறி அமையும்.

– நா. பாண்டியம்மாள், இராமநாதபுரம்.


யானைகள் மிக நுண்ணிய ஒலி அலைகளையும் உள் வாங்கிக் கொள்ளும் திறனைப் பெற்றவை. பல கிலோ மீட்டர் தூரத்திலுள்ள தன் இனக் கூட்டத்தை அவற்றின் நடமாடும் அதிர்வலைகளைக் கொண்டே ஒரு யானை உணர்ந்து அங்கு போய்விடும். பெண் யானைகள் ஆண் யானைகளை நோக்கியும், ஆண் யானைகள் பெண் யானைகளை நோக்கியும் இந்த மீயொலித் திறத்தாலேயே பயணம் மேற்கொள்கின்றன.




– ராமகிருஷ்ணன், புதுக்கோட்டை.

கங்காருவின் பால் மற்ற பால்களைப் போல் வெள்ளை நிறம் உடையது அல்ல. வெளிறிய சிவப்பான நிறம் கொண்டது. அதிக புரோட்டீன் சத்தை உடையதும் கூட. அதோடு, கங்காருவின் பாலில் சர்க்கரைச் சத்து அறவே இல்லை. ஆகவே வேறு எந்தப் பாலும் கங்காரு குட்டிக்கு

கங்காருவின் பால் என்ன நிறம்?





ஒத்துக் கொள்வது இல்லை.

– எம். சகிலா பானு,
லெட்சுமாங்குடி.

எறும்புகள் சாரை சாரையாகச் செல்ல அவை சுரக்கும் 'பார்மிக் அமிலம்'தான் காரணம். இதேபோல் 'லூனா மாத்' என்ற பூச்சியின் பெண்ணினம் ஒருவகை வேதிப் பொருளைச் சுரக்கின்றது. இந்த வாசனையை 7 மைல்களுக்கு அப்பால் உள்ள ஆண் பூச்சிகள் உணர்ந்து கொள்கின்றன.

– பெ. நடராசன்,
எட்டாம் வகுப்பு,
சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி,
மேலச்சித்தை,
இராமநாதபுரம்.


பிரதி எடுக்கப் பயன்படும் கார்பன் பேப்பரை முதலில் கண்டுபிடித்தவர் லண்டனைச் சார்ந்த ரால்ஃப் வெட்ஜ் வுட் என்பவர். கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு 1806.



வரிசையில் நிற்கும் பழக்கம் முதன் முதலாக இங்கிலாந்தில்தான் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. முதன் முதலில் துறைமுகங்களை உருவாக்கியவர்கள், ரோமானியர்கள்.

உலகப் புகழ்பெற்ற புத்த ஸ்தூபி உள்ள இடம் போராபுதூர்.

கிரேக்கச் சிறுவன் பழங்காலத்தில் வைத்திருக்கும் இரும்புக் குச்சியை ஒரு கல்லில் வைத்திருக்க அது இழுப்பது போலிருக்கவே அதில் மாய சக்தி இருப்பதாக உணர்ந்தான். அந்தச் சிறுவன் பெயர் 'மாக்னஸ்'. அவனால் முதன் முதலில் உலகிற்கு அறிமுகமானதால் காந்தத்திற்கு 'மாக்னட்' என்று பெயர் வந்ததாகக் கூறுவர். கிரீஸ் நாட்டின் ஒரு பகுதியான 'மாக்னீசிய' என்ற ஜில்லாவிலிருந்து காந்தக் கல் பாறைகள் கிடைத்ததனால் இதற்கு 'மாக்னட்' என்று பெயர் வந்ததாகவும் கூறுவர்.



– எஸ். மோகன்ராஜ்,
சீர்காழி.

பெங்குவின் பறவையின் கண்களுக்கு மேல் ஒரு தனி அங்கம் இருக்கிறது; அது கடல் நீரை நல்ல தண்ணீராக மாற்றும் வல்லமை படைத்தது! பெங்குவின் பறவை ஒரே ஒரு வாழ்க்கைத் துணையுடன் தன் வாழ்நாள் முழுவதும் வாழ்கிறது. தாய்ப் பறவையும் தந்தைப் பறவையும் பட்டினி கிடந்தாவது தமது குஞ்சிற்கு உணவு தேடிக் கொடுக்கும்.

– எம். சகிலா பானு,
லெட்சுமாங்குடி.

உங்கள் நூலகம்



புவனாவும் வனஜாவும் செஸ் விளையாடிக் கொண்டிருந்தனர். ஆட்டம் விறு விறுப்பாகச் சென்று கொண்டிருந்தது. அப்போது

"ஹாய் ஜேம்ஸ், நேற்று நடந்த நம்ம காலனி விழாவுல உன்னைப் பார்க்க முடியலையே" என்றாள் புவனா.

"எப்படி பார்ப்பீங்க? நானே ஊருக்குப் போயிட்டு இப்பத்தான் வந்தேன். ரெண்டு பேரும் போட்டிப் போட்டுக் கொண்டு பரிசுகளைக் குவிச்சிட்டீங்களாமே! கேள்விப்பட்டேன்" – ஜேம்ஸ்.

"அதிகமில்லை. புவனா நான்கு பரிசு வாங்கினாள். நான் மூணு வாங்கினேன். அவ்வளவுதான்" என்றாள் வனஜா.

"தன்னடக்கம் அதிகம் தான் உனக்கு. ரெண்டு பேரும் பரிசுகளை எடுத்துட்டு வாங்க, நான் பார்க்கணும்" என்று ஜேம்ஸ் சொல்லவும் இருவரும் சென்றனர்.

இரண்டே நிமிடத்தில் திரும்பியவர்களின் கைகளில் சில புத்தகங்களும், பேனா செட்களும் இருந்தன.

"ஓவியப் போட்டியில் கிடைச்ச பரிசு பூச்சிகளின் அதிசயங்கள். ஆழி. வே. ராமசாமி எழுதியிருக்கிறார். தேனீ, கொசு, சிலந்தி, மின்மினி என்று பல வகையான பூச்சிகளைப் படங்களுடன் நமக்கு அறிமுகப் படுத்தியிருக்கிறார். ரெஃபரன்ஸ் புத்தகமா வச்சுக்கலாம். மா. சுரேஷ் எழுதியிருக்கிற 'அம்மா என்னை மன்னிச்சுடு' என்ற சிறுகதைகளின் தொகுப்பு ஒட்டப் பந்தயத்தில் ஜெயிச்சதுக்குக் கிடைத்தது. பத்துச் சிறுகதைகள் இதுல இருக்கு. சில கதைகள் கோகுலத்துல வெளி வந்திருக்கு. படங்களே இல்லாததுதான் குறை" என்று நிறுத்தினாள் புவனா.

"வனஜா உன்னுடைய பரிசுகளைக் காட்டு" என்றான் ஜேம்ஸ்.

"கவிதைப் போட்டிக்கு எனக்கு கிடைத்த புத்தகம் இராயர் – அப்பாஜி கதைகள் எல்லாம் அருமையான கதைகள். படிக்கும்போது படிப்பது போன்ற உணர்வே வரலை. யாரோ கதை சொல்வது போல இருந்தது. அப்புறம் பேச்சுப் போட்டிக்கு ஈசுவர சந்திர வித்யா சாகரின் வாழ்க்கை வரலாறு கிடைத்தது. இது நம்மைப் போன்ற மாணவர்கள் படிக்க வேண்டியது" என்றாள் வனஜா.

"உங்ககிட்டே பேசினதுல நேரம் போனதே தெரியலை. கடைக்குப் போகணும், வரேன்" என்றபடி வேகமாகக் கிளம்பிச் சென்றான் ஜேம்ஸ்.

புவனாவும் வனஜாவும் விளையாட்டைத் தொடர்ந்தனர்.

– ரே

✠ பூச்சிகளின் அதிசயங்கள், ஆழி. வே. ராமசாமி, பக்– 112, ரூ.28/– குமரிப் பதிப்பகம், 8. நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம் – 611 001.

✠ அம்மா என்னை மன்னிச் சுடு, மா. சுரேஷ், பக்– 80 ரூ. 20/– தோப்பாசாமி கோவில் தெரு, சைதாப் பேட்டை, வேலூர் – 632 012.

சிரிக்க சிந்திக்க ராயர்-அப்பாஜி கதைகள்!

✠ புகழ் பெற்ற இராயர் – அப்பாஜி கதைகள், பாலமுருகன், பக்–96, ரூ.22/–, குறிஞ்சி, 20–ஏ, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, வில்லிவாக்கம், சென்னை – 49.

✠ ஈசுவர சந்திர வித்யாசாகர், எம்.வி. வெங்கட்ராம், பக்.62, ரூ.15/–, பழனியப்பா பிரதர்ஸ், 14, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 600 014.


11. ஆளப்பிறந்தவன்!

கதை : ராஜி
படம் : லலிதா








புரிந்தது. அதோ அந்தக் கறுப்புக் குதிரையில் என்னைத் தொடர்ந்துவா.
இதோ வருகிறேன்.
அது ஒரு முரட்டுக் குதிரை. அதைச் சமாளித்துச் சவாரி செய்ய யாராலும் முடியாது. ஆனால் இவள் எப்படியோ சமாளித்து வருகிறாளே! நாம் நினைத்தது போல இந்த லைலா லேசானவள் இல்லை.
ஜெயசிம்மன் தனக்காகக் காத்திருக்கும் கிராமத்து நண்பர்களிடம் வந்து சேர்ந்தான்.
நண்பா, இது என்ன புது சிநேகம்?
இவள் லைலா. என் அரண்மனைத் தோழி. எப்போதும் என்னுடனே இருப்பாள்.
நாங்கள் இருக்கும் போது இவள் எதற்கு?
சோமு என்னுடன் ஒரு நிமிடம் வா.


சோமு இவளைத் தவிர்க்க முடியவில்லை. ஆகவே ஏதாவது கடினமான விளையாட்டாக விளையாடுவோம்.
விளையாடி னால்?
அவளால் ஜெயிக்க முடியாமல் தோற்று அவமானமடைவாள். நாளை முதல் என்னுடன் வரமாட்டாள். அப்படி ஏதாவது ஏற்பாடு செய்.
சரி, என் வேலையைக் காட்டறேன்.
தோழர்களே! உங்களிடம் உள்ள கயிறுகளை மரக் கிளையில் கட்டுங்கள். ஒரு கயிற்றில் ஊசலாடியபடி அடுத்த கயிற்றைப் பிடிக்க வேண்டும். இப்படியே மறு கோடிக்குச் செல்ல வேண்டும்.


நல்ல விளையாட்டு.
இதோ தயார் பண்றோம்.
ஐயோ... லைலாதான் முதலில் வருகிறாள். இவளை எந்த விதத்திலும் விரட்டியடிக்க முடியாது போலிருக்கே!
சோமு நாளை நாம் மறுபடியும் இங்கே சந்திப்போம். இந்தக் கயிறுகள் இப்படியே இருக்கட்டும். நாளை விளையாடப் பயன்படும்.
சரி ஜெயசிம்மா.
ஒரு மரத்துக்குப் பின்னால் நின்று குப்பன கவனித்துக் கொண்டிருந்தான்.

(தொடரும்)


கோகுலம்
போஸ்டர்



பற்கள் கூசுவது ஏன்?

● எம். வினோத், விருத்தாச்சலம்.

? நகம், முடி ஆகியவற்றை வெட்டினால் வலிப்பதில்லையே, ஏன்?

! உடலில் எந்த இடத்தில் வலி ஏற்பட்டாலும் அந்த வலி உணர்வை மூளைக்குத் தெரிவிக்க நரம்புகள் தேவை. அப்போதுதான் அங்கு வலி உணரப்படும். நகத்திலும் முடியிலும் வலியை உணரக்கூடிய நரம்புகள் இல்லை. அதனால் அவற்றை வெட்டும்போது வலிப்பதில்லை.

● டெ. ஜோஷ்வின், ஐரேனிபுரம்.

? முள், ஆணி, கண்ணாடி போன்றவை குத்தி உடலில் காயம் ஏற்பட்டுவிட்டால், T.T எனும் தடுப்பூசி போடுகிறார்கள். T.T என்பதன் விரிவு என்ன?

! Tetanus Toxoid (டெட்டனஸ் டாக்சாய்ட்)

● ப. காளிதாசன், நீர்விளங்குளம்.

? ஒரு மனிதனின் உடலில் சர்க்கரை மற்றும் உப்பு எந்த அளவில் இருக்கலாம்? அவை அதிகமாக இருந்தால் எப்படி குறைப்பது?

! 100 மி.லி ரத்தத்தில் 80 மி.கி முதல் 120 மி.கி வரை சர்க்கரையின் அளவு (Blood Glucose Level) இருக்க வேண்டும்: 20 மி.கி முதல் 40 மி.கி வரை உப்பு (Blood Urea Level) இருக்க வேண்டும். இந்த அளவுகள் அதிகமாக இருந்தால் காரணமறிந்து சிகிச்சை பெற வேண்டும். ரத்தச் சர்க்கரையைக் குறைக்க தினசரி உணவில் அரிசி, கோதுமை போன்ற மாவுப்பொருள் (Carbohydrate) நிறைந்த உணவுகளையும் வெல்லம், சீனி, சர்க்கரை, தேன், ஜாம் போன்ற இனிப்புப் பொருள்களையும் பழங்கள் மற்றும் கிழங்கு வகைகளையும் குறைத்துக் கொள்ள வேண்டும். ரத்தத்தில் உப்பின் அளவைக் குறைக்க உணவில் சமையல் உப்பு சேர்ப்பதைக் குறைத்துவிட வேண்டும். உப்பு அதிகமுள்ள ஊறுகாய், அப்பளம், வடகம், கருவாடு போன்ற உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.



● கு. தமிழ்ச்செல்வி, விளாப்பாக்கம்.

? குழந்தைகளுக்குக் காதில் சீழ் வடிவது ஏன்? எப்படி குணப்படுத்துவது?

! நம் காதில் மூன்று பகுதிகள் உள்ளன. அவை வெளிக்காது, நடுக்காது, உள்காது. நடுக்காதிற்கும் வெளிக்காதிற்கும் இடையில் ஒரு மெல்லிய சவ்வு உள்ளது. இதற்குச் செவிப்பறை (Ear Drum) என்று பெயர். நடுக்காதையும் தொண்டையின் மேற்பகுதியையும் ஒரு தசைக்குழாய் இணைக்கிறது. இதற்குக் 'காது மூக்குத்

கேட்கட்டுமா டாக்டர்?

டாக்டர் கு. கணேசன்

தொண்டைக் குழாய்' (Eustachian Tube) என்று பெயர். குழந்தைகளுக்கு ஜலதோஷம், சளி பிடிக்கும்போதும் தொண்டையில் புண் ஏற்படும்போதும் அங்குள்ள கிருமிகள் இந்தத் தசைக்குழாய் வழியாகப் பயணித்து நடுக்காதை அடையும். பின்பு நடுக்காதிலும் அழற்சி, புண், சீழ் ஆகியவற்றை உண்டாக்கும். நடுக்காதில் அதிகமாக சீழ் பிடித்துவிட்டால் அது செவிப்பறையைக் கிழித்துக் கொண்டு வெளியேறும். காதில் சீழ் வடிய இதுதான் காரணம். தகுந்த கிருமிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தி இதனைக் குணப்படுத்த முடியும். அடிக்கடி இது ஏற்பட்டால் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியது வரலாம். காதில் சீழ் வடிவதைத் தடுக்க மூக்கிலும் தொண்டையிலும் சளி பிடிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மூக்கடைப்பு ஏற்படக்கூடாது. தடுமம் பிடிக்கும்போது மூக்கைப் பலமாகச் சிந்தக் கூடாது.



● **சி. சத்யகாந்த், நீடாமங்களம்.**

? இருமலுக்குப் பனங்கற்கண்டு பால் அருந்தலாமா? பாலில் மஞ்சள் தூள் கலந்து குடிக்கலாமா?

! இருமலுக்கு எவ்வளவோ காரணங்கள் உள்ளன. ஒருவருக்கு ஒரு வாரத்திற்கு மேல் இருமல் நீடித்தால், அதற்குரிய காரணம் தெரிந்து சிகிச்சை பெறுவதே நல்லது. பனங்கற்கண்டு பால் அருந்துவது, பாலில் மஞ்சள் தூள் கலந்து குடிப்பது போன்றவை சாதாரண இருமலைக் குணப்படுத்த உதவலாம்.

● **உ. காசிநாதன், சோழபுரம்.**

? பற்கள் கூசுவதற்கு என்ன காரணம்? தடுப்பது எப்படி?

! பல்லின் வேர் ஈறுகளில் புதைந்துள்ளது. பல்லுக்குத் தேவையான சத்துகளைக் கொண்டு வரும் ரத்தக் குழாய்களும், வலியை உணர்த்தக் கூடிய நரம்புகளும் வேரில் உள்ளன. பற்களில் குழி விழுதல், பற்களின் எனாமல் தேய்ந்து போவது, பற் சொத்தை ஏற்படுதல், ஈறுகள் தேய்ந்து போவது ஆகிய காரணங்களால் பல்லின் வேர் உணவுடன் நேரடியாகத் தொடர்பு கொள்கிறது. இதனால் பற்களில் கூச்சம் உண்டாகிறது. பற்களைச் சுத்தமாக பராமரித்தால் பற்கூச்சம் ஏற்படாது. பற்சொத்தைகளைத் துவக்கத்திலேயே சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். பற்குழியை அடைத்து விட வேண்டும். பற்களில் காறை படிவதைத் தவிர்க்க வேண்டும். சாக்லேட், மிட்டாய் போன்ற அதிக இனிப்புள்ள பண்டங்களையும், புளி, மாங்காய் போன்ற புளிப்புள்ள பண்டங்களையும் சாப்பிடக் கூடாது. அதிகக் குளிர்ச்சி அல்லது அதிக சூடுள்ள பானங்களை அருந்தக் கூடாது. மருத்துவரின் ஆலோசனைப்படி தகுந்த பற்பசையைப் பயன்படுத்த வேண்டும்.

4. பல்லவியின் சோகம்

பல்லவியின் கையிலிருந்து பறித்த கார்டை இளங்கோ பார்த்தான். முன்னும் பின்னும் திருப்பித் திருப்பிப் பார்த்தான். அவனுக்குப் புதிதாய் எதுவும் தெரியவில்லை. நெடுமாறன் அதே கார்டை வாங்கிப் பார்த்தான். அவனுக்கும் அந்த முகவரியைத் தேடிப் போகக் கூடாது என்று குறிப்பால் உணர்த்தும் எந்தச் சொல்லும் தெரியவில்லை.

அவர்கள் விழிப்பதைப் பார்த்துச் சிரித்தாள், பல்லவி.

''மூவேந்தர்களே! ஏதோ ஒண்ணு கடிதத்திலே இருக்குன்னு சொன்னா, அந்தக் கடித வாசகங்களையே மனப்பாடம் பண்ணுறமாதிரி திருப்பித் திருப்பிப் படிச்சுகிட்டிருக்கக்கூடாது. அந்த வார்த்தைகளைத் தவிர கடிதத்தில் வேறெதாவது இருக்கான்னு பார்க்கணும். புரியுதா'' என்றாள்.

மீண்டும் மூவரும் கடிதத்தைப் புரட்டிப் பார்த்தனர்.

''கடிதம் எழுதின குமாரின் முகவரி இருக்கு! நம்ம முகவரி இருக்கு'' என்றான் அருள்மொழி.

''அந்த நம்ம முகவரிக்குக் கொஞ்சம் மேலே பாருங்க. அங்கே என்ன இருக்கு?''

பல்லவி கேட்க, மூவரும் பெறுநர் முகவரிக்கு மேலே பார்த்தனர்.

''அஞ்சலக முத்திரை இருக்கு'' என்றான் நெடுமாறன்.

''ரெண்டு முத்திரை இருக்கு'' என்றான் அருள்மொழி.

''சரியான ட்யூப் லைட் நீங்க. முத்திரை இருந்தா, அதைப் படிக்க வேணாமா?''



பல்லவி கேட்டதும், அதுவரை வாய் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்த இளங்கோ, ''கண்டு பிடிச்சுட்டேன்! கண்டுபிடிச்சுட்டேன்! இரண்டு முத்திரையிலும் ஒரே அஞ்சலக எண் இருக்கு! யுரேகா!'' என்று கத்தினான்.

பல்லவி சிரித்தபடி, ''நல்ல வேளை! இளங்கோ, உனக்கு என் பாராட்டு'' என்று கை நீட்ட, இளங்கோ அதை பற்றிக் குலுக்கிப் பெருமை தோன்ற மற்ற இருவரையும் பார்த்தான்.

''மூவேந்தர்களே... அஞ்சலக முத்திரையில், அஞ்சலக எண் இருக்கிறது. பாருங்கள். கார்டு எந்தப் பகுதியில் போடப்பட்டுள்ளதோ அந்த அஞ்சலக எண்ணும், கடிதத்தை எந்த அஞ்சலகம் டெலிவரி செய்ததோ அந்த அஞ்சலக

அக்னிக் குஞ்சுகள்!

எண்ணும் உள்ளன. இந்த எண்கள் உங்கள் கண்களுக்குத் தெரியலையா?''

பல்லவி கேட்க, ஆறு கண்களும் எண்களைப் பார்த்தன. அங்கிருந்த எண் : 600 029.

''இரண்டு முத்திரையிலும் ஆறு லட்சத்து இருப்பத்தொன்பது என்ற எண்ணே இருக்கிறது. இது நாம் வசிக்கிற அமைந்தகரை எண். நமது அய்யாவு காலனிக்கும் இதுதான் எண். இந்தப் பகுதியில் இருப்பவன் அஞ்சலில் சேர்த்திருக்கிறான். இந்தப் பகுதியில் இருக்கும் நெடுமாறன் வீட்டுக்கு வந்துள்ளது. கார்டை எழுதிய குமாரின் முகவரி சேத்துப்பட்டைச் சேர்ந்தது. அதனால் இதைச் சேத்துப்பட்டு குமார் எழுதலே. அமைந்தகரை ஆசாமி எழுதியிருக்கிறான். அவன் கற்பனையா ஒரு சேத்துப்பட்டு முகவரியைத் தரலே. அங்கே ஒரு பயங்கர நாய் இருப்பதை அறிந்தே எழுதியிருக்கிறான்னு நினைக்கிறேன்.''

''பல்லவி நீ புத்திசாலி'' என்று நெடு



டாக்டர் பூவண்ணன்



''சொத்தைப் பிடுங்கி விட்டு அதற்கு பீசும் கேட்கிறார்!''
''யாரு?''
''பல் டாக்டர்!''
- கு. அருணாசலம், தென்காசி.

மாறன் பாராட்டிய போதும் அவளது நகைச்சுவை உணர்வு சும்மாயிருக்க வில்லை.

''நான் புத்திசாலி. அப்போ நீங்க.?'' என்று தொலைக்காட்சி விளம்பரம் பாணியில் கையை நீட்டி அவர்களைச் சுட்டிக் காட்டிக் கேட்டதும், மூவரும் கலகலவென்று சிரித்தனர்.

சிரிப்பு முடிந்ததும், ''இந்தக் குமார் எழுதிய கடிதம் அல்லது குமார் எழுதியதாக வந்த கடிதம் நம்மை அலைக்கழித்துச் சிரமப்படுத்தணும் என்கிற நோக்கத்தோட, யாரோ எழுதியிருக்கிறாங்க. இந்தப் போலிக் கடிதம் எழுதியவன் யார்?'' என்று கேட்டான், நெடுமாறன்.

''அதைக் கண்டுபிடிக்க வேண்டும். அதிலேயே நம் நேரத்தை, முயற்சியை வீணாக்க வேண்டாம். இனி வரும் கடிதங்களைக் கொஞ்சம் கவனித்து, ஆராய்ந்து செயல்படுவோம்'' என்றான் இளங்கோ.

மற்றவர்கள் அதை ஏற்றுக் கொண்டனர்.

மறுநாள் உணவு இடைவேளையின்போது, நெடுமாறனும், அருள்மொழியும், இளங்கோவும் பள்ளியின் அரச மர நிழலில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அது மிகப் பெரிய அரச மரம்! அதனால் அதன் நிழலில் ஆங்காங்கே மாணவர்கள் உட்கார்ந்து உணவருந்துவது வழக்கம். உண்டு முடித்தவர்களும் அங்கே தங்கி உரையாடி மகிழ்வார்கள்.

மூவேந்தர்கள் அமைதியாக உண்டு கொண்டிருந்தபோது, அருள்மொழி 'சட்' டென்று திரும்பிப் பார்த்தான். அருகே யாரோ பேசுகிற பேச்சில் அவன் பெயர் அடிபட்டது. அடிபட்டதாவது? பாராட்டப் பட்டது.

அருள் மொழி பார்த்த திசையில் பாலு தெரிந்தான். அவனைச் சுற்றி நான்கு பேர். பாலு ''அப்புறம் என்ன நடந்தது, தெரியுமா?அந்த நாய் நம்ம ராஜராஜனை நோக்கிப் பாய்ந்தது...'' என்று தொடர்ந்து பேச, மற்றவர்கள் ஆர்வத்தோடு கேட்டார்கள்.

பாலு என்ன சொல்கிறான் என்பது அருள்மொழிக்குப் புரிந்தது. அவன் பார்வையயைப் பின் தொடர்ந்த இளங்கோ, நெடுமாறனுக்கும் புரிந்தது.

அருள்மொழி நாயோடு செய்த வீரச் செயலைப் பார்த்த பாலு ஒரு நேரடி வர்ணனைப் பாணியில் விவரித்துக் கொண்டிருந்தான். 'நம் பள்ளி மாணவன் அச்சம் தவிர்த்த ஆண்மையாளன்' என்பதை உணர்த்தும் பெருமிதம் அவன் குரலில் தெரிந்தது.

அப்போது, திடீரென்று ஒரு குரல் குறுக்கிட்டது.

''அளந்து விடுடா பாலு! சராசரி நாயை ஆளுயரம் - மலை உயரம் என்று அளந்து தள்ளு!''

உடனே இந்தப் புதுக்குரல் வந்த திசையில் அனைவரும் பார்க்க, அங்கே மனோகரன் இருப்பது தெரிந்தது.

பாலு ஒரு கணம் தன் பேச்சை நிறுத்தினான். அந்த இடத்தில் திமர்

அமைதி.

இந்த அமைதியே தனக்கொரு வெற்றி போல நினைத்துப் பூரித்துப்போன, மனோகரன் ''என்ன பாலு, பேச்சையே காணோம்! பவர்ஃபெயிலியரா?'' என்று ஏளனமாகக் கேட்டான்.

பாலு உடனே பதில் சொல்லவில்லை. சில நொடி மனோகரனைச் சுட்டெரித்து விடுவது போலப் பார்த்தான்.

''என்னடா அப்படி பார்க்கறே?''

மனோகரனின் கேள்வி அவனை அதட்டியது.

பாலு அதற்காக அஞ்சியதாகத் தெரியவில்லை.

''மனோகரா! அருள்மொழி போரிட்ட அந்த நாய் சேத்துப்பட்டில் என் வீட்டுக்கு எதிரே இருப்பது. அதன் உயரம், அகலம், நீளம் எல்லாம் எனக்குத் தெரியும். அமைந்தகரைவாசியான உனக்கெப்படி தெரியும்?''

பாலுவின் கேள்வி மனோகரனின் நெற்றிப் பொட்டில் தாக்கியது.

''அது வந்து...''

மனோகரனுக்கு வார்த்தைகள் திடீர் வேலை நிறுத்தம் செய்தன.

''மனோகரா! நான் கேட்ட கேள்விக்குப் பதில் உனக்குத் தெரியும். ஆனால் சொல்லத் தயங்குகிறாய். நானே அதைச் சொல்கிறேன். உனக்கு அந்த நாயைத் தெரியும். அதன் ஆக்ரோஷம் தெரியும்! இப்போதுதான் உன் சித்தி வீடு அதே தெருவில் இருப்பது என் நினைவுக்கு வருகிறது. அதனால் அந்த நாய், அந்த வீடு, அந்த விலாசம் உனக்கு அறிமுகமானவை. மனோகரா, மூவேந்தர்களின் தமிழ்ச் சங்கம் செய்யும் பாடப்புத்தகப் பணிக்கு தடை உண்டாக்க நீதான் போலிக் கடிதம் எழுதியிருக்கிறாய்! நீதான் அந்தக் கடிதம் எழுதிய குமார். நான் சொல்வது உண்மைதானே'' என்றான் பாலு.

பாலசுந்தரத்தின் ஒவ்வொரு சொல்லும், பச்சை மரத்தில் பதிய அடிக்கப்படும் ஆணியாய் உறுதியோடு வந்தது. மனோகரனின் காதில் இறங்கியது.

மனோகரன் இந்தத் தாக்குதலை எதிர்பார்க்காததால் திகைத்துப் போனான். அவனைக் காட்டிலும் அதிகமாகத் திகைத்துப் போனார்கள் மூவேந்தர்கள்.

இதுவரை பாலுவின் வாயைப் பார்த்



தவர்களின் பார்வை, வெளிறித் திணறும் மனோகரனின் முகத்துக்கு மாறியது.

மனோகரன் சடாரென்று எழுந்து வேகமாக அங்கிருந்து போனான்.

போலிக் கடிதம் எழுதியவன் யார் என்பது மூவேந்தர்களுக்குப் புரிந்தது.

"மனோகரன் நமக்குப் பகைவனல்ல, அவனுக்கும் நமக்கும் இன்னும் நேரடிப் பேச்சும் ஏற்படவில்லை. அப்படியிருந்தும், ஒரு சிறிய தொண்டு செய்யும் நமக்குத் தண்டனை தர அவன் ஏன் விரும்ப வேண்டும்? நெடுமாறன் கேட்டான்.

"பிறர் துன்பத்தைக் கண்டு அதில் இன்பம் அடையும் மனோபாவம்!"

இளங்கோ சொன்னான்.

நாம் அவனைப் பொருட்படுத்த வேண்டாம். நமது பணியைத் தொடர்ந்து செய்வோம்.

பாடப் புத்தகப் பணி தொடர்ந்தது. மூவேந்தர்களும் பல்லவியும் அதில் ஈடுபட்டனர்.

ஒரு நாள், நால்வரும் நெடுமாறன் வீட்டில் அமர்ந்து இதுவரை தாம் செய்த பணிக்கு ஒரு கணக்கெடுத்தனர்.

எத்தனை பேர் பாட நூல்கள் கேட்டனர், கேட்டவர்களில் எத்தனை பேருக்கு நூல்கள் அளிக்கப்பட்டன, என்பனவற்றை ஆய்ந்தபோது ஒரு கடிதம் அவர்கள் கண்ணில் பட்டது.

கடிதத்தை எழுதியவன் பூபதி. சிந்தாதிரிப்பேட்டையிலிருந்து கடிதம் வந்திருந்தது. அவன் மூன்று நூல்கள் கேட்டிருந்தான். மூன்று நூல்களில் இரண்டு பழைய நூல்கள் கிடைத்தன. மூன்றாவது நூலைப் புதிதாக வாங்கி விடுவது என்று தீர்மானித்து, அதன்படி வாங்கிவிட்டனர். நேரில் வந்து புத்தகங்களைப் பெற்றுச் செல்லும்படி கடிதம் எழுதினர். கடிதம் எழுதிப் பத்து நாட்கள் ஆகிவிட்டன. பூபதி வரவில்லை. அவனிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை.

இப்போது என்ன செய்யலாம்?

"பூபதிக்கு உடல் நலமில்லாமல் இருக்கலாம். நேரில் போய்ப் பார்த்து, நூல்களைக் கொடுக்கலாமே?"

இந்த யோசனையை இளங்கோ கூறினான்.

யோசனை ஏற்கப்பட்டது.

சிந்தாரிப்பேட்டைக்குச் செல்வது யார்?

"நான் போகிறேன்" என்று முன் வந்தாள் பல்லவி.

"வேண்டாம்மா பல்லவி வேண்டாம்! அங்கே நாய் இல்லாமல் ஒரு அழகான பூனைக்குட்டி இருந்து பாய்ந்தாலும் நீ பயந்திடுவே. அருள்மொழியே போகட்டும்" என்றான் நெடுமாறன்.

பல்லவி விட்டுத் தரவில்லை.

"நான்தான் போவேன். சிந்தாதிரிப் பேட்டையில் என் சித்தி இருக்கிறார். அதனால் அது பழக்கமான இடம்" என்று கூறி, அவளே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள். அதன்படி புத்தகங்களோடு புறப்பட்டுப் போனாள்.

இரவு மணி ஏழாகிவிட்டது. 'பல்லவியைக் காணோமே!' என்று நெடுமாறன் கலங்கியபோது வாசலில் பல்லவி தெரிந்தாள். அவள் முகத்தில் ... சோகம். சொல்ல முடியாத சோகம்! சோகத்துக்கு என்ன காரணம்?

- தொடரும்

"'நளன் அன்னத்தைத் தூது விட்டான்...' இது எந்தக் காலம்?"


"ஈ மெயில் இல்லாத காலம் அப்பா!"

- தஞ்சை தாமு



பன்றிகள்

ஆழி





மற்ற எந்தப் பிராணிகளையும் விட, பன்றி மிகவும் சுத்தமானது என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். அது வளர்க்கப் படும் விதத்தைப் பொறுத்தது அதன் பழக்கங்கள். பன்றி தன்னைச் சுத்தப் படுத்திக் கொள்ளவே சேற்றில் புரள்கிறது என்கிறார்கள் அவர்கள்!




மனிதனால் முதன்முதல் பழக்கப்படுத்தப்பட்ட வீட்டு மிருகம் பன்றி என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். ஆதியில் பன்றிகள் சதுப்பு நிலத்திலும் ஈரமான பகுதிகளிலுமே வாழ்ந்தன. அதனால்தான் இன்றும் வீடுகளில் வளர்க்கப்படும் பன்றிகள், சேற்றிலும் சகதியிலும் புரள்கின்றன என்கிறார்கள்.

பன்றிகள் உலகெங்கும் காணப்பட்டாலும் சீனாவிலும் அமெரிக்காவிலும்தான் அதிகம். காட்டுப் பன்றிகள், வீட்டுப் பன்றிகள்—எல்லாமே சாக பட்சிணிகள். அவற்றின் முக்கிய உணவு கிழங்குகளும் வேர்களும்.







பொதுவாக, ஆண் பன்றிகளுக்கு மேல் தாடையில் தந்தம் போன்ற கோரைப் பற்கள் மேல் நோக்கி வளர்ந்திருக்கும். வீட்டுப் பன்றிகளுக்குச் சிறிதாக இருக்கும்; காட்டுப் பன்றிகளுக்குப் பெரிதாக இருக்கும்.



பாலூட்டிகளில் அதிக எண்ணிக்கையில் குட்டிப் போடுவது பன்றிதான். வெள்ளைப் பன்றி ஒரே தடவையில் 12 குட்டிகள் வரை போடும்!



பன்றி மிகுந்த பயன் உள்ளது. அதன் இறைச்சி உணவாகவும், கொழுப்பு சமையலுக்கும், தோல் குதிரைச் சேணம், கால்பந்து, கையுறை முதலியவை தயாரிக்கவும் பயன் படுகின்றன. உரோமத்திலிருந்து பிரஷ்களும் குளம்பிலிருந்து வச்சிரப் பசையும் தயாரிக்கிறார்கள்.



பன்றியின் எடையில் பாதி அளவு கொழுப்பு. பன்றியின் இரைப் பையிலிருந்து எடுக்கப்படும் 'பெப்சின்' என்னும் பொருள் மருந்தாகப் பயன் படுகிறது.




மிருகங்களில் அதிக அறிவு படைத்தவை குரங்கு இனங்கள். அடுத்து, திமிங்கில இனத்தைச் சேர்ந்த டால்பின்; யானை, யானைக்கு அடுத்த அறிவு படைத்தது பன்றி.




பன்றிகளில் மிகவும் பெரியது 'வார்ட் ஹாக்'. சுமார் 900 கிலோ எடை உள்ளது. மணிக்கு 48 கி.மீ. வேகத்தில் ஓடும் இந்தக் காட்டுப்பன்றி!



'பாபிரூஸா' என்னும் காட்டுப் பன்றியைப் பகலில் பார்க்க முடியாது. பகலெல்லாம் குகையில் தூங்கிவிட்டு, இரவில்தான் இரை தேட வெளியில் கிளம்பும்.




பன்றியிடம் ஒரு சிறப்பான குணம் உண்டு. உணவு அதிகமாகக் கிடைத்தாலும் கூட அது அளவுக்கு மேல் உண்ணாது.



திருட்டு, கொலை, கொள்ளை முதலியவற்றில் துப்புக் கண்டுபிடிப்பதற்காக நாய்கள் பயன்படுத்தப்பட்டு வருவது தெரியும். ஆனால் இப்போது மேற்கு ஜெர்மனியில், காவல் துறையில் பன்றிகளைப் பயன் படுத்துகிறார்கள். நாய்களை விட, பன்றிகளுக்கே மோப்ப சக்தி அதிகம் என்கிறார்கள் அவர்கள்!


இப்போது, மனிதனின் பாதிக்கப்பட்ட இதயத்திற்குப் பதிலாகப் பன்றியின் இதயத்தைப் பொருத்தும் முயற்சியில் மருத்துவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். மற்ற பிராணிகளைவிட, பன்றியின் இதயமே பொருந்தும் என்கிறார்கள்.






அமெரிக்காவை 'சாம் மாமா' என்று செல்லமாகக் குறிப்பிடுவார்கள். வெளிநாட்டில் போரிடச் சென்ற அமெரிக்க ராணுவத்தினருக்குப் பீப்பாய்களில் பன்றி மாமிசம் அனுப்பிய வியாபாரியின் பெயர் 'சாம் வில்சன்'. அந்தப் பன்றிமாமிச வியாபாரியின் பெயரே அமெரிக்காவுக்கு 'சாம் மாமா' என்று ஆகிவிட்டது!

ஆடு முட்டை இடுமா?





பையா...

என் சித்தி மும்பையில் வசிக்கிறார். விடுமுறைக்கு அவரது மகனுடன் வந்திருந்தார். சித்தி பையனுக்கு சரளமாகத் தமிழ்ப் பேச வராது. அன்று நாங்கள் அனைவரும் டீ.வி. பார்த்துக் கொண்டிருந்த போது பக்கத்து வீட்டு அண்ணன் வந்தார். அவரைப் பார்த்ததும் சித்தி பையன் "ஆவோ பையா" என்றான். உடனே அந்த அண்ணன் சிரித்தபடி "பத்து வருஷத்துக்கு முன்பு நான் பையன், இப்ப பெரிய ஆள்" என்றார். உடனே என் சித்தி "உன்னைப் பையன்னு அவன் சொல்லலை. பையா அதாவது அண்ணன்னுதான் சொன்னான்" என்றவுடன் அனைவரும் சிரித்தோம்.

- எம்.எஸ். கலா, பன்னிரண்டாம் வகுப்பு, குத்தாலம்.



மணி?


எங்கள் ஊர் திருவிழாவுக்காக நிறைய உறவினர்கள் வந்திருந்தனர். என்னையொத்த சிறுவர்கள் எல்லாம் சேர்ந்து கேரம் விளையாடிக் கொண்டிருந்தோம். நேரம் போனதே தெரியவில்லை. பசித்தது. என் மாமா பையனிடம் "போய் மணி என்னன்னு பார்த்துட்டுவா" என்றேன். அவனோ "எனக்கு மணி பார்க்கத் தெரியாது" என்றான். "பெரிய முள், சின்ன முள் எதுல இருக்குன்னு மட்டும் பார்த்து சொல்" என்றேன். வேகமாகப் போனவன் உடனே திரும்பி வந்தான். "பெரிய முள் மட்டும் 12ல நிற்குது. சின்ன முள்ளைக் காணோம்" என்றான். "மணி 12. ரெண்டு முள்ளும் ஒரே இடத்துல தான் இருக்கும்" என்றேன். அனைவரும் சிரித்தனர்.

- பி. விஜயகுமார், வேலநத்தம், சேலம் மாவட்டம்.




பறக்கும் படை

வீட்டில் நானும் என் தங்கையும் சதுரங்கம் ஆடிக் கொண்டு இருந்தோம். எங்கள் அத்தைப் பெண் சபிதா தன்னையும் சேர்த்துக் கொள்ளுமாறு சொல்லி நச்சரித்துக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்த என் அப்பா, "அவளுக்கும் சொல்லிக் கொடுத்து விளையாட விடுங்கள்." என்று சிபாரிசு செய்தார். உடனே என் தங்கை விலகிக் கொண்டு அவளை உட்கார வைத்தாள். காய்களை யானை, குதிரை, காலாட்படை என அறிமுகப்படுத்தி எப்படி நகர்த்த வேண்டும் எனவும் சொல்லிக் கொடுத்தாள். சிறிது நேரம் ஒழுங்காக விளையாடிய அவள் திடீரென்று ஏதோ ஒரு காயைத் தூக்கி என் ராஜாவை அடித்தாள். "ஏன் சபிதா இப்படி செய்யறே?" என்றதற்கு "அது பறக்கும் படை. அப்படித் தான் பறந்து வந்து அடிக்கும்" என்று அவள் சொல்ல சிபாரிசு



செய்த அப்பாவின் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

-சு. துர்கா காத்யாயனி, பத்தாம் வகுப்பு, புனித அலாய்சியஸ் மகளிர் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி.




வீட்டிலேயே...


வீட்டில் வானொலி பாடிக் கொண்டிருந்தது. பாட்டு முடிந்ததும் அப்பா "சென்னை அலைவரிசைக்கு மாற்றப் போகிறேன்" என்றார். அம்மாவோ "வானொலியைத் திருச்சியில் வையுங்கள்" என்று சொல்ல அதைக் கவனித்த தம்பி, "சென்னையிலும் வைக்க வேண்டாம். திருச்சியிலும் வைக்க வேண்டாம். ரேடியோ நம்ம வீட்டிலயே இருக்கட்டும்" என்று கூற அனைவரும் சிரித்துவிட்டோம்.

- சி. ராஜசேகரன், ராஜபாளையம்.

தெருவிளக்கு படிப்பு!



எங்கள் பக்கத்து வீட்டுப் பையன் தன் புத்தகப் பையைத் தூக்கி வைத்துக் கொண்டு அங்கும், இங்குமாக புலம்பலோடு நடைபோட்டுக் கொண்டிருந்தான். என்றைக்கும் இல்லாமல் இன்றைக்கு என்ன புதிதான பழக்கம் என்று எண்ணியபடி அவனை நெருங் கினேன். "தெரு விளக்கை ஏன் இன்னும் போடாமல் வச்சிருங்காங்க?" என்று சலிப் போடு கேட்டான். தெரு விளக்கு எரியாம லிருப்பதை அப்போதுதான் கவனித்தேன். வியப்போடு "ஏன்?" என்று கேட்க, அவன் படபடப்பாய், "பெரிய விஞ்ஞானிகளாகவும், அறிஞர்களாகவும் வாழ்க்கையில் உயர்ந்தவங்கள்லாம் தெரு விளக்குல தான் படிச்சிருக்காங்கங்கிற உண்மையை இன்னைக்கு எங்க சார் பாடம் நடத்தும்போது சொன்னாங்க. அதான் நானும் தெரு விளக்குல படிக்கலாம்னு காத்திருக்கேன்" என்று சொன்னான். என் நண்பன் உடனே அவனிடம் "மனவிளக்கை ஏற்றி வைத்து லட்சியத்தோடு வீட்டிலேயே படித்தால் போதும். நீயும் பெரிய ஆளாகிவிடலாம். நேரத்தை வேஸ்ட் செய்யாமல் வீட்டில் போய்படி" என்று சொன்னான். "அப்படியாண்ணே" என்றபடி அந்த பையன் வீட்டுக்குள் போக, நாங்கள் அவன் வெகுளித்தனத்தை ரசித்தோம்.




- ராமகிருஷ்ணன், காயக்காடு.

முட்ட வருது!

எங்கள் வீட்டில் ஆடுகள் வளர்க்கிறோம். வாசலில் அவை கட்டப்பட்டிருக்கும். ஒரு நாள் தம்பியை முட்டை வாங்கி வருமாறு கூறி கடைக்கு அனுப்பினார் அம்மா. கடைக்குப் போய் முட்டை வாங்கி வீட்டுக்குள் வந்த தம்பி அம்மாவிடம் "ஆடு முட்ட வருதும்மா" என்று சொல்ல அம்மா குழம்பினார். "ஆட்டிலிருந்து எப்படி முட்டை வரும்?" என்று கேட்க "என்னுடன் வாங்க காட்டறேன்" என்று சொல்லி வாசலுக்கு அழைத்துப் போனான். ஒரு ஆடு அவர்களை முட்ட வந்தது. அப்போது தான் அம்மாவுக்குப் புரிந்தது.

- அ. பேச்சியப்பன், ராஜபாளையம்.



தாடி தடுக்கி விழுந்த தாத்தா!

மாலதி

சோணபுரி ராஜாவுக்குச் சுயமாக சிந்திக்கும் திறன் இல்லை. ஆனால் நல்லவர். அவருடைய மந்திரி மகிபாலன் நுணுக்கமான அறிவு கூர்மையுள்ளவர்.

அவரை ஒழித்தால்தான் கஜானாவைச் சுரண்டலாம் என்று தீயவர்கள் சதி திட்டம் திட்டினர். அதன்படி ராஜாவுக்கு க்ஷவரம் செய்யும் நாவிதனை மிரட்டி தங்கள் திட்டத்துக்கு ஒத்துழைக்க வைத்தனர்.

நாவிதன் க்ஷவரம் செய்யும்போது "ராஜா! உங்கப்பா, அம்மா, தாத்தா, பாட்டி இவர்களையெல்லாம் நலம் விசாரிக்காமல் இருக்கீங்களே" என்று கேட்டான்.

ராஜா "என்னப்பா நீ சொல்றே? அவங்கதான் இறந்துவிட்டார்களே! எப்படி போய் நலம் விசாரிக்கிறது?" என்று கேட்டார்.

"மந்திரி மகிபாலருக்குச் சொர்க்கம் போகிற மந்திரம் தெரியும். அக்னியைக் கட்டற மந்திரம் தெரியும். சீதைக்கு அந்த மந்திரம் தெரிந்ததாலேதானே அவங்க புடவை எரியாம, பூ வாடாம வந்தாங்க. அவரை அனுப்பி விசாரிச்சுட்டு வரச் சொல்லுங்கோ" என்றான்.

ராஜா மகிபாலனைக் கூப்பிட்டனுப்பினார்.

"இத்தனை காலமா நீங்க அக்னியைக் கட்ட, தேவலோகம் போகவெல்லாம் மந்திரம் தெரியுமென்று சொல்லவே இல்லையே! நாவிதர் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. உடனே போய் அப்பா, தாத்தா, பாட்டியையெல்லாம் பார்த்து விட்டு வாருங்கள். தேவைப் படுகிற பணம், பட்சணம், உடை எல்லாம் எடுத்துக் கொண்டு போங்கள்" என்றார்.

மந்திரி இனிமே நாம என்ன சொன்னாலும் எடுபடாது என்கிறதைப் புரிந்துகொண்டார்.

"ராஜா! அது சாதாரண விஷயமில்லே... பணமும் நிறைய செலவாகும்!" என்றார்.

"தேவைப்படுகிற பணத்தை கஜானாவிலே வாங்கிக் கொள்ளுங்கள். இன்றைக்கே தகவல் அனுப்பிவிடுங்கள்" என்றார் அரசர்.

மந்திரி நம்பிக்கையான ஆட்களை வைத்து மயானத்துக்கும், அவர் வீட்டுக்குமாக ஒரு ரகசிய சுரங்கப்பாதை கட்டினார். அது முடிந்ததும் நேரே ராஜாகிட்டே போய் "ராஜா! தேவலோகத்திலிருந்து புறப்பட்டு வரச் சொல்லி அழைப்பு வந்துவிட்டது.. நான் இன்றைக்கே கிளம்புகிறேன்" என்றார்.

சுரங்கப்பாதைக்கு மேலே செங்கல் அடுக்கி அதிலே சப்பணமிட்டு உட்கார்ந்தார் மந்திரி. அவரை மறைத்து சந்தனக் கட்டைகள் அடுக்கி, தீ வைத்தார்கள் சூழ்ச்சியாளர்கள்.

சுற்றிக் கூட்டமாய் திரண்டிருந்த ஜனங்கள் கண்ணீர் விட்டழுதார்கள். சுரங்கப் பாதை வழியாக வீட்டுக்கு வந்து விட்டார் மந்திரி.

மூன்று மாதங்கள் யார் கண்ணிலேயும் படாமல் வாழ்ந்தார். அப்புறம் ராஜாவைப் போய் பார்த்தார். தாடி மீசையோடு இருந்த மந்திரியை ராஜா

வுக்கு அடையாளம் கண்டுபிடிக்கவே ரொம்ப கஷ்டமாயிருந்தது.

“மகிபாலா! பத்திரமா வந்திரா? எப்போ வந்தீர்? அப்பா அம்மா, தாத்தா பாட்டியெல்லாம் எப்படி இருக்கிறார்கள்? எனக்கு ஏதாவது கடிதம் கொடுத்தனுப்பினார்களா?'' என்று சரமாரியாகக் கேட்டார் அரசர்.

தூக்கிக் கொண்டு போகிறார்கள். அது தான் சிரமமாயிருக்கிறதாம்!

''நம்ம அரண்மனை நாவிதரை அனுப்ப முடிந்தால் நல்லது என்று அபிப்ராயப்படுகிறார்கள். நாவிதர் இருந்தால் நான் இப்படி வருவேனா" என்றவர் ஓலையைக் கொடுத்தார்.

அதிலும் நாவிதரை உடனே அனுப்



“நான் நேற்று ராத்திரி வந்தேன். எல்லாரும் சௌக்கியமா இருக்கிறார்கள், உங்களுக்குக் கடிதமும் கொடுத்திருக்கிறார்கள். தாத்தாவுக்குத் தடுக்கி விழுந்து உடம்பெல்லாம் காயம். நேற்று அப்பாவுக்குக் கை முறிஞ்சு போச்சு" என்றார் மந்திரி வருத்தத்துடன்.

ராஜா பதட்டமாக, “ஏன் தடுக்கி விழுகிறார்கள்? வயசானதினாலேயா?" என்று கேட்டார்.

“அங்கேதான் முதுமையே கிடையாதே! க்ஷவரம் பண்ண ஆளில்லே. தாடி தடுக்கி விழுகிறார்கள். தாடியை நாலா மடிச்சுத்

பும்படி எழுதி தந்தை, பாட்டனார் இருவர் கையெழுத்தும் இருந்தது. மகிபாலர் யார் கையெழுத்தையும் போடுவதில் சமர்த்தராயிற்றே!

உடனே நாவிதரை வரவழைத்தார் அரசர். “இன்றே நீ தேவலோகம் புறப்பட வேண்டும். அப்பா, தாத்தாவுக்கு மட்டுமின்றி அநேகம் பேருக்கு நீ க்ஷவரத் தொண்டு செய்ய வேண்டும். உன் குடும்பத்தினரை நான் கவனித்துக் கொள்கிறேன்' என்று உத்தரவு இட்டார் அரசர்.

நாவிதர் பேந்தப் பேந்த விழித்தார்.

மழை தரும் மேகம்!






வானம் எங்கும் மேகக் கூட்டம்
வண்ணக் கோலம் போட்டிடும்!
தானம் தருமம் உலகம் எங்கும்
தழைக்க மழையைத் தந்திடும்!

விண்ணில் வந்த மேகம் எல்லாம்
விந்தை செய்து காட்டிடும்!
மண்ணில் வாழும் மக்க ளுக்கு
மகிழ்வை அள்ளித் தந்திடும்!

அங்கும் இங்கும் ஓடு கின்ற!
அழகை மேகம் செய்திடும்
எங்கும் பச்சை உயிர்பி டிக்க
ஏற்ற வண்ணம் பெய்திடும்!

மேகம் எல்லாம் மோதி மோதி
மின்னல் மின்னித் துள்ளிடும்!
வேக மோடு இடியும் சேர
வெள்ளிக் கோடு பாய்ந்திடும்!

அழகனார்



விளையாட்டு அரங்கம்

சபாகரீம் ஓய்வு

இந்திய கிரிக்கெட் அணியின் விக்கெட் கீப்பர்களில் குறிப்பிடத்தக்கவர் சபாகரீம். மோங்கியாவுக்குப் பிறகு இவர்தான் விக்கெட் கீப்பராக வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. கடந்த ஆண்டு டாக்காவில் ஆசிய கோப்பை போட்டி நடைபெற்றது. இதில் வங்கதேச அணிக்கு எதிரான ஆட்டத்தில் அனில்கும்ப்ளே வீசிய பந்து எகிறி வந்து சபாகரீம் கண்ணில் பட்டு விட்டது. இதனால் அவர் பார்வை பாதிக்கப்பட்டது. அதற்குப் பின் சிகிச்சை பெற்று வங்க தேச அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடினார் சபாகரீம். என்றாலும் பார்வையில் ஏற்பட்ட கோளாறால் அவரால் தொடர்ந்து சிறப்பாக ஆட முடியவில்லை. மருத்துவர்களின் ஆலோசனைப்படி ஓய்வு பெறுவதாக அறிவித்து விட்டார். 1982-83 ஆம் ஆண்டு 15 வது வயதில் ரஞ்சி டிராபி போட்டிகளில் விளையாட ஆரம்பித்தார் சபாகரீம். இதுவரை 22 ஒரு தினப் போட்டிகளிலும் ஒரு டெஸ்ட் போட்டியிலும் விளையாடியிருக்கிறார். 27 கேட்சுகள் தவிர 3 ஸ்டம்பிங்களையும் செய்திருக்கிறார்.

• டெண்டுல்கர்



பாகிஸ்தான் பயணம்

1989 ஆம் ஆண்டு ஸ்ரீகாந்த் தலைமையில் இந்திய அணி பாகிஸ்தான் சென்று டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றது. அந்தத் தொடர் டிராவில் முடிந்தது. அதற்குப் பிறகு 12 ஆண்டுகள் இந்திய அணி பாகிஸ்தானில் டெஸ்ட் போட்டியில் விளையாடவில்லை. இப்போது மீண்டும் இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தான் செல்ல இருக்கிறது. இந்த ஆசிய டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை, பாகிஸ்தான், இந்தியா, வங்கதேசம் ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன. இந்தப் போட்டிகள் செப்டெம்பரில் துவங்கி பிப்ரவரியில் முடிவடையும்.


விருது

உலகின் தலைசிறந்த பேட்ஸ்மேன்களில் ஒருவரும் முன்னாள் கேப்டனுமான சச்சின் டெண்டுல்கருக்கு 'மகாராஷ்டிர பூஷண்' விருது வழங்கப்பட்டுள்ளது. மேலும் 10 கிலோ எடையுள்ள வெள்ளியிலான கிரிக்கெட் மட்டையும், ரூ. இரண்டரை லட்சத்துக்கான காசோலையும் வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு தினப் போட்டிகளில் 10,000 ரன்களைக் குவித்ததற்காக மும்பை வாங்கடே ஸ்டேடியத்தின் ஒரு பகுதிக்கு சச்சின் பெயர் சூட்டப்படவுள்ளது.

ஹிங்கிஸ் மூன்றாவது இடம்


உலகில் மிக அதிகமாகப் பணம் சம்பாதித்த டென்னிஸ் வீராங்கனைகளில் மூன்றாவது இடத்தைப் பிடித்திருக்கிறார் மார்டினா ஹிங்கிஸ். இதில் முதல் இடத்தில் இருப்பவர் ஸ்டெஃபி கிராஃப், அடுத்த இடத்தில் மார்ட்டினா நவரத்திலோவா. தற்போது ஹிங்கிஸ் மட்டுமே விளையாடி வருகிறார். மற்ற இருவரும் ஓய்வு பெற்று விட்டனர். இருபது வயதான ஹிங்கிஸ் இன்னும் 5 அல்லது 6 ஆண்டுகளில் முதல் இடத்தைப் பெற்று விடுவார் என்கிறார்கள்.

• ஹிங்கிஸ்





• சபாகரீம்



கோகுலம் க்விஸ்

கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்து கேள்விகளுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு விடை சரியானது. சரியான விடைகளைக் கண்டுபிடித்து எழுதி, உங்கள் முழு முகவரியையும் குறிப்பிட்டு, முகவரி கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும்.

கடைசி தேதி **31.7.2001**

1. மேற்கு வங்க முதல்வர்?

அ. ஜோதிபாசு, ஆ. மம்தா பானர்ஜி இ. புத்ததேவ் பட்டாச்சார்யா

2. சுமத்திரா தீவு உள்ள இடம்?

அ. மலேஷியா, ஆ. இந்தோனேஷியா, இ. தாய்லாந்து

3. ஜப்பானின் பணம்?

அ. டாலர், ஆ. தினார், இ. யென்

4. பஞ்சசீலக் கொள்கையை வகுத்தவர்?

அ. நேரு, ஆ. காந்தி, இ. வல்லபாய் பட்டேல்

5. உலகின் மிக உயரமான நீர்வீழ்ச்சி?

அ. ஜோக் – இந்தியா, ஆ. ஏஞ்சல் – வெனிசுவேலா, இ. துகேலா – தென் ஆப்பிரிக்கா

6. மதர்தெரசா தங்கி சேவை செய்த இடம்?

அ. மும்பை, ஆ. அஸ்ஸாம், இ. கோல்கத்தா

7. பக்கவாட்டில் நகரும் ஒரே உயிரினம்?

அ. நத்தை, ஆ. நண்டு, இ. தவளை

8. கோலா கரடிகள் எங்குள்ளன?

அ. சீனா, ஆ. ஆஸ்திரேலியா இ. ஆப்பிரிக்கா

9. துப்பாக்கியைக் கண்டுபிடித்தவர்?

அ. சாமுவேல் கோல்ட், ஆ. கிரிகர்மெண்டல், இ. ஸ்டீவன்சன்

10. இவற்றுள் பறக்க இயலாத பறவை எது?

அ. கிவி, ஆ. புறா, இ. ஹார்ன்பில்

ஆசிரியர்,
கோகுலம்
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை — 97

கோகுலம் சுழல் கோப்பை

கோகுலம் இதழ்களில் ஒரு வருடத்தில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெற்றிருக்கின்றனவோ, அப் பள்ளிக்கு சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சுழல் கோப்பையைக் கைப்பற்ற நிறைய பள்ளிகள் போட்டி போட்டு வருகின்றன. உங்கள் பள்ளியும் கோப்பை பெற வேண்டுமா? உடனே படைப்புகளை அனுப்பி வையுங்கள். கோப்பையை வெல்லுங்கள்!

HUMOUR SPECIAL


LAUREL & HARDY

Poster Heros



SPECIAL PUZZLE PAGES

The Legend of the Laughing Buddha - COVER STORY



P.G.WODEHOUSE - *A Curtain Raiser*

The Amazing Traveller - *Birbal Story*

+ All Regular Features

JULY 2001 **Rs.6/- ONLY**

GOKULAM

The monthly magazine for children

47, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097

Trouble for the New Teacher - Undir Story


இரவு வான் - அது

எட்டு மணி எப்படா அடிக்கும்? படுக்கையில் முழுக்கப் போர்த்திப் படுத்து 'கொர்... கொர்' விடலாம் என்று ஏங்குபவரா நீங்கள்? அல்லது டீ.வி. முன் அமர்ந்து மெகா சீரியல்களை ஒன்று விடாமல் பார்த்து கதையையும் மனதையும் குழப்பிக் கொள்ளும் பெருங்கூட்டத்தில் நீங்களும் ஒருவாரா?

நீங்கள் யாராய் இருந்தாலும் பரவாயில்லை. இன்றிரவு உங்கள் வீட்டு மொட்டை மாடிக்கு வாருங்கள். தலையை உயர்த்தி அண்ணாந்து பாருங்கள். மேலே... மேலே... என்ன தெரிகிறது? பரந்து விரிந்த வானம்... வானத்தில் அங்கங்கே சில நட்சத்திரப் புள்ளிகள் 'மினுக்... மினுக்...' செய்கின்றனவா? அவற்றைச் சிறிது நேரம் பாருங்கள். நிச்சயம் போரடிக்காது. 'இரவு வானை உற்று நோக்குதல்' என்பது சுவாரசியமான பொழுது போக்கு. செலவும் அதிகம் பிடிக்காது. இரவு வானில் நீங்கள் பார்க்கும் நட்சத்திரங்களை இணைத்து மனதிலே கோடுகள் வரைந்து பார்த்தீர்களானால், வியப்பூட்டும் உருவங்கள் கிடைக்கும். வானத்தில் ஒரு பெருங் கரடியையோ, பெரிய நாயையோ, ஒரு டிராகனையே, அன்னத்தையோ நீங்கள் கண்டு களிக்கலாம். எந்தெந்த நட்சத்திரங்களை இணைத்து இப்படிப்பட்ட உருவங்களைப் பெறலாம் என்பதைப் படிப்படியாக அறிந்து கொள்ளலாம். அவசரமில்லை.

நம் தாத்தாவுக்குத் தாத்தாவுக்குத் தாத்தாவுக்குத் தாத்தாவுக்குத் தாத்தா பார்த்த பல விஷயங்கள் இன்று நம்மால் பார்க்க முடியாது. இரவு வானைத் தவிர! ஆம். அவர் அன்று பார்த்து ரசித்த நட்சத்திரங்களையும் கோள்களையும் நாம் இன்றும் ரசிக்க முடியும். ஆயிரக்கணக்கான வருடங்களாக அதே இரவு வான்தான் உங்கள் பார்வைக்காக தவம் கிடக்கிறது.

இரவு வானில் ஒளிரும் நட்சத்திரங்களையும், நட்சத்திரக் கூட்டங்களையும் நாம் காண முடியும். கோள்களும் நிலவும் நகர்ந்து கொண்டேயிருப்பதால் இரவுக்கு இரவு - நிலைகள் மாறுபடுகின்றன. சூரிய அஸ்தமனமும், பால்வெளி மண்டலத்தின் ஒளியும் வானத்திற்கு வண்ணம் சேர்க்கின்றன. எப்போதாவது ஒரு எரி நட்சத்திரம் வானத்திலிருந்து ஒளியைப் பாய்ச்சிக் கொண்டே வந்து விழுகிறது.






இனிய வான்!

நம் 'தாத்தா'க்கள் பார்த்த இரவு வான் இன்னும் தெளிவாக இருந்தது. இப்போதைய இரவு வானோ நகர விளக்குகளின் வெளிச்சத்தில் தன் பொலிவை இழந்துவிட்டது. இதற்கு வானியலாளர்கள் Light Pollution என்று பெயரிட்டிருக்கிறார்கள். நகர்ப் புறங்களில் அதிக பிரகாசம் இருப்பதால் இரவு வானில் நட்சத்திரங்களை எளிதில் காண முடியாது. கிராமப் புறம், மலைப் பிரதேசத்திலிருந்து பார்க்கும் போது நிறைய நட்சத்திரங்களைக் காண முடியும்.


இரவு வானை உற்று நோக்குவதுதான் 'வானவியலாளர்' ஆவதற்கு முதல்படி. உங்களுக்கு முதல் தேவை ஒரு நோட்டுப் புத்தகம். இரவு வானில் நீங்கள் பார்ப்பனவற்றைப் படமாகக் குறித்து வைத்துக் கொள்ள அது உதவும். தேதியையும், நேரத்தையும் குறித்துக் கொள்ள வேண்டியதும் அவசியம். வானத்தில் நிலவு காணப்படுகிறதா? வானிலை எப்படி இருக்கிறது? - இவை போன்ற தகவல்களும் ஒரு இளம் வானவியலாளர் குறித்துக் கொள்ள வேண்டியவையே.


தொடக்கத்திலேயே தொலைநோக்கி போன்ற உபகரணங்கள் தேவையில்லை. சிறிய பைனாகுலர் இருந்தால் கூட போதும். அது இல்லையென்றால்கூட கவலை வேண்டாம். உங்கள் கண்ணே சிறந்த கருவி. வெயில் நேரத்தில் திரையரங் கின் உள்ளே நுழைந்தால் எப்படி இருக்கும்? சிறிது நேரத்துக்கு



இருட்டைத் தவிர எதுவுமே தெரியாது இல்லையா? அப்புறம் உங்கள் கண்கள் இருட்டுக்குப் பழகிப் போய் எல்லாவற்றையும் பெருமளவு பார்க்க முடியுமில்லையா? இதை ஆங்கிலத்தில் dark adapted என்று சொல்வதுண்டு.

அதுபோல இரவு வானை உற்று நோக்கப் போகும் நாமும் கண்களை dark adapted ஆக்கிக் கொள்ள வேண்டும். ஒரு இருளான அறையில் 10 - 20 நிமிடங்கள் இருந்து, பிறகு வெளியே வந்தால், மங்கலான நட்சத்திரங்களைக் கூட தெளிவாகப் பார்க்க முடியும். இரவு வானை உற்று நோக்குவதன் மூலம் அவற்றைப் பற்றி அறியும் ஆர்வம் அதிகரிக்கும். எல்லா நட்சத்திரங்களும் பகலில் நமக்கு ஒளி தரக்கூடிய பிரகாசமான சூரியனைப் போன்றவையே. அவை வெகுதூரத்தில் இருப்பதால் இரவில் மங்கலாகத் தெரிகின்றன.





''காற்று அடித்தால் வியர்க்கும்னு சொல்லுறியே, நம்ப முடியலையே!''

''சைக்கிளுக்குக் காற்று அடித்தால் வியர்க்காமல் என்ன செய்யும்?''

- கீரக்களூர் செந்தில்

பகலில் சூரிய வெளிச்சம் காரணமாக அவை புலப்படுவதில்லை.

நட்சத்திரங்கள் மின்னுவதைக் கவனித்திருப்பீர்கள். அந்த 'மினுக்... மினுக்...'கிற்குக் காரணம் என்ன தெரியுமா? புவியைச் சூழ்ந்திருக்கும் காற்றின் இடையே ஒளி ஊடுருவி வருவதுதான். கீழ் வானத்தில் நீங்கள் காணும் நட்சத்திரங்கள் அதிகம் மினுக்கிடும். ஏனென்றால் உங்கள் நேர் மேல் வானத்தில் காணும் நட்சத்திரத்தின் ஒளியை விடக் கீழ்வான் நட்சத்திர ஒளி அதிகக் காற்றின் வழியே பயணம் செய்கிறது.

நட்சத்திரங்கள் பல வண்ணங்களில் ஒளிர்வதையும் நீங்கள் காண முடியும். சில ஆரஞ்சு நிறத்தில், சில நீல நிறத்தில்; சில மஞ்சள் நிறத்தில் - ஏன் வெள்ளையாகக் கூட சில நட்சத்திரங்கள் ஒளி ரும். நீலநிற நட்சத்திரங்கள் அதிக வெப்பம் உள்ளவை - 60,000°F வெப்பநிலை. ஆரஞ்சு நிற நட்சத்திரங்கள் வெப்பம் குறைவானவை - வெறும் 5,000°Fதான்.

உங்களுக்கும், எனக்கும் பெயர் இருப்பதைப் போல பெரும்பாலான நட்சத்திரங்களுக்குப் பெயர் உண்டு. 'வேகா' போன்ற எளிய பெயர் கொண்டவையும் உண்டு. ஜுபேனெல்ஜெனோபி போன்று விசித்திரப் பெயர் கொண்ட நட்சத்திரங்களும் உண்டு. பல நட்சத்திரங்களின் பெயர்கள் பழங்கால அரபு மொழியிலிருந்து வந்தவை. 'டேனெப்' என்றால் 'வால்' என்று பொருள் 'சிக்னெஸ்' என்ற நட்சத்திரக் கூட்டத்திற்குப் பொருள் 'அன்னம்'.

உங்களுக்கு நட்சத்திரங்களின் பெயர்கள் எல்லாம் பரிச்சயமாகி விட்டால் போதும் அவை உங்கள் ஆருயிர் நண்பர்களாகி விடும். சில நட்சத்திர நண்பர்களை ஆண்டுக்கு ஓரிரு முறைதான் பார்க்க முடியும். சிலவற்றைக் கோடை காலத்தில் பார்க்கலாம். சிலவற்றிற்குக் குளிர் காலம்தான் பிடிக்கும்.

அடடா, எங்கே கிளம்பி விட்டீர்கள்? உங்கள் நட்சத்திர நண்பர்களைச் சந்திப்பதற்கா? உங்கள் அனுபவங்களையும் சந்தேகங்களையும் கோகுலத்துக்கு எழுதுங்கள். அடுத்த இதழில் தொடர்ந்து பேசலாம்.



- பூமா

அட்டையில் : நவீத்

வண்ணப்படம் : ஸ்ரீஹரி

கோகுலம் க்விஸ் முடிவு

மே இதழில் வெளிவந்த க்விஸ் போட்டியில் நிறைய பேர் கலந்து கொண்டனர். சரியான விடைகளை எழுதிய 20 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரியான விடை:

1. அண்மையில் கடலில் மூழ்கடிக்கப்பட்ட ரஷ்ய விண்கலம் மிர்.
2. மனிதன் தோன்றி 1½ கோடி ஆண்டுகள் ஆகின்றன.
3. கோப்பெருஞ்சோழனின் நண்பர் பிசிராந்தையார்.
4. பிலிப்பைன்ஸின் தலைநகரம் மணிலா.
5. கிரேக்கத்தில் ஒலிம்பிக்ஸ் தோன்றியது.
6. எலி ஒரு கொறி விலங்கு.
7. ஸ்டெஃபிகிராஃப் ஜெர்மனியைச் சேர்ந்தவர்.
8. ஷாஜஹான் ஆட்சிக் காலம் பொற்காலம் என்று அழைக்கப்படுகிறது.
9. மும்பை ஏழு தீவுகளின் நகரம் என்று அழைக்கப்படுகிறது.
10. பிட்சர் செடி பூச்சிகளைச் சாப்பிடும்.

அழ. வள்ளியப்பா நினைவு நாடகப் போட்டி முடிவு



கோகுலம் ஆசிரியருடன் எழுத்தாளரும் பதிப்பாளருமான திரு. அகிலன் கண்ணன் அவர்களும் சேர்ந்து பரிசுக்குரிய நாடகங்களைத் தேர்ந்தெடுத்தார். போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி. பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். முதல் பரிசு நாடகம் அடுத்த இதழில்!

முதல் பரிசு (ரூ.500/-)
மாறியது நெஞ்சம்... மாற்றியது யாரோ...
ஆர். திவ்யா, ஒன்பதாம் வகுப்பு, எஸ்.பி.ஓ.ஏ.பள்ளி, சொக்காம்புதூர், கோவை.

இரண்டாம் பரிசு (ரூ.300/-)
நல்ல நட்பு
இ. ஞானப் பிரகாஷ்,
எண் 1/953, கிருஷ்ணா நகர், மடிப்பாக்கம், சென்னை.

மூன்றாம் பரிசு (ரூ.200/-)
இரட்டைப் பரிசு!
ஜெ. ஆனி மேக்தலின்,
எட்டாம் வகுப்பு, டி.5.51, அன்புநகர், திருநெல்வேலி.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்:

1. ஆர். இந்திரா, திருவரங்கம், திருச்சி மாவட்டம்.
2. ஜி. ராஜசேகர், சிதம்பரம்.
3. பெ. நடராசன், மேலச்சீத்தை, இராமநாதபுரம் மாவட்டம்.
4. மா. உமா மகேஸ்வரி, கோவில்பட்டி.
5. த.சு. நிவேதிதா, திருநகர், மதுரை மாவட்டம்.
6. எம். பிரபு கிருஷ்ணன், ஒசூர்
7. ஹெச். பாலு, போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.
8. ம.ஷரன் குமார், நாகர்கோவில்.
9. ஆர். சுப்ரியா, சிதம்பரம்.
10. எம்.ஏ. வதனா, தூத்துக்குடி.
11. எம். சரண்யா, கோவை.
12. வி. விக்ரம், சென்னை.
13. என். விசு, மயிலாடுதுறை.
14. க. விஜய், வாழக்கோம்பை, சேலம் மாவட்டம்.
15. எம். ரேவதி, மணல்மேடு, நாகை மாவட்டம்.
16. க. நாராயணி, கும்பகோணம்.
17. த. சிவபாரதி, மல்லியாளையம், ஈரோடு மாவட்டம்.
18. ஜி. சுபஸ்ரீ மீனாட்சி, ஒசூர்.
19. க. கௌரி சங்கர், சித்தோடு, ஈரோடு மாவட்டம்.
20. வி. காமினி, அம்பத்தூர், சென்னை.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.
கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

சார் தபால்

பத்திரிகையாளராக ஆசை!



✉ கோகுலம் போஸ்டர் பகுதியில் பூக்கள் சிறப்பாக அலங்கரித்தன. கோகுலம் நியூஸ் ரொம்ப உபயோகமாக இருக்கிறது. அடுத்த போஸ்டர் என்ன?

— எஸ். ராஜா, பன்னிரண்டாம் வகுப்பு, அ.ஆ.மே.நி.பள்ளி, மகுடஞ்சாவடி, சேலம் மாவட்டம்.

✉ அம்பேத்கார் அவர்களைப் பற்றிய செய்திகள் புதியனவாகவும் சுவாரசியமாகவும் இருந்தன. தவிடும் தயிர் சாதமும் கதை நகைச் சுவையாகவும் அதே சமயத்தில் நீதி சொல்லும்படியாகவும் கச்சிதமாக அமைந்திருந்தது.

— கே. மிருதுளா, கோபிசெட்டிபாளையம்.

✉ பிரபஞ்சம் கட்டுரையில் படங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. நிறைய விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது. அலட்டல் பெரியப்பாவை விச்சு ஊசியில் நூல் கோர்க்கச் சொல்லி தடுமாற வைத்தது சிரிப்பை வரவழைத்தது.

— என். சங்கர், எட்டாம் வகுப்பு, அ.ஆ.உ.பள்ளி, மதுரை.



ஓவியப் போட்டி

இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: கடலில் அலைகளுக்கிடையே துள்ளிக் குதிக்கும் டால்ஃபின்கள். உங்கள் கற்பனைக்கேற்ற வகையில் வித்தியாசமாகப் படங்களை வண்ணத்தில் வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.

ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

முழு முகவரியைத் தரவும்.

கடைசி தேதி: 20.7.2001

✉ பத்திரிகையாளர் பால்யு அவர்களின் அனுபவங்களைப் படித்ததும் எனக்கும் பத்திரிகையாளர் ஆக வேண்டும் என்ற ஆசை எழுந்துள்ளது. ராமு தைத்த ஆடை கதை சூப்பர்.


— ஆர். பாலபாரதி, நாகூர்.

✉ உடல் பாதுகாப்பு பகுதியில் முடியைப் பற்றி படிக்கும்போதுதான் நிறைய விஷயங்கள் நாங்கள் தவறாக எண்ணிக்கொண்டிருப்பது புரிந்தது.

— எஸ். நர்மதாதேவி, பத்தாம் வகுப்பு, காரைக்குடி.


✉ க்விஸ், பிருந்தாவனம், அறிஞர்களின் வாழ்வில் நடந்த சுவையான நிகழ்ச்சிகள், பிராணிகள் கட்டுரை, வானியல் செய்திகள் என கோகுலம் பொது அறிவுப் பெட்டகமாகத் திகழ்கிறது.

— இரா. கஜேந்திரன், பன்னிரண்டாம் வகுப்பு, மகுடஞ்சாவடி.


பதில் தேடிப் புறப்பட்ட கிஃபு
வேணுவாரியத்
சீனாவில் உள்ள ஒரு கிராமத்தில் ஒரு வயதான தாயும் அவளது மகன் கிஃபுவும் வசித்து வந்தனர்.
எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தாலும் ஏன் தேவையான உணவு கிடைக்கமாட்டேங்கிறது? இந்த ஏரி கூட ஏன் இப்படி வறண்டு போய்விட்டது?
கிஃபு இந்தக் கேள்விகளுக்கு விடை கண்டுபிடிக்க வேண்டும் என்று தீர்மானித்தான்.
SAI FEATURES, ALUVA-683 107
www.kuttu.com
அம்மா நான் கடவுளைத் தேடிச் சென்று நம் கஷ்டங்களுக்கு விடை பெற்று வருகிறேன்.
கிஃபு ஏழு நாட்கள் பயணம் செய்து ஒரு வயதான பெண்மணியின் வீட்டை அடைந்தான்.
எனக்குக் கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா?
தரேன். எங்கே கிளம்பிப் போறே?
நான் கடவுளைக் கண்டு என் கேள்விகளுக்குப் பதில் பெற சென்று கொண்டிருக்கிறேன்.
கிஃபு, என் மகள் ஏன் ஊமையானாள் என்பதையும் அறிந்து வருகிறாயா?
கண்டிப்பாக
கிஃபு பயணத்தைத் தொடர்ந்தான். அடுத்த ஏழு நாட்களில் ஒரு விவசாயியைச் சந்தித்தான்.
எங்கே இப்படி அவசரமாகப் போறே?
என் கேள்விகளுக்கு விடை தேடி...


என் தோட்டத்தில் ஏன் ஆரஞ்சு பழங்கள் காய்ப்பதில்லை என்று அறிந்து வருகிறாயா?
நிச்சயமாக அறிந்து வருகிறேன்.
கிஃபு கடற்கரையை அடைந்தான்.
இந்தக் கடலை நான் எப்படி கடப்பேன்?
அடுத்த நொடி ஒரு டிராகன் தோன்றியது.
ஏன் சோகமாக இருக்கே? நான் உனக்கு உதவட்டுமா?
என்னைக் கடலின் மறு கரையில் விட முடியுமா? நான் கடவுளைச் சந்திக்க வேண்டும்.
நான் உதவறேன். எல்லோருக்கும் உதவி செய்யும் நான் ஏன் சொர்க்கத்துக்குப் போகக் கூடாது என்று கேட்டு வருகிறாயா?
கேட்டு வரேன்.
டிராகன் கிஃபுவை மறுகரையில் சேர்த்தது.


மறு நாள் கிஃபு ஒரு பெரிய நகரத்தை அடைந்தான்.
என்னைக் கடவுளிடம் அழைத்துச் செல்கிறீர்களா?
என்னுடன் வா
நான் சந்திக்க நினைத்த கடவுள் இவராகத்தான் இருக்க வேண்டும்.
ஏன் இங்கு வந்திருக்கிறாய்?
என்னுடைய கேள்விகளுக்கு விடை தேடி வந்தேன்.
நீ மூன்று கேள்விகளை மட்டுமே கேட்கலாம்.
அப்படியா! என்ன செய்வது? என் நண்பர்களின் மூன்று கேள்விகளுக்குப் பதில் பெற்று செல்ல வேண்டியது என் கடமை.
கிஃபு பதில்களைப் பெற்றுக் கொண்டு திருப்தியாகக் கிளம்பினான்.
கடற்கரைக்கு வந்து சேர்ந்தான்.
என் கேள்விக்குப் பதில் கிடைத்ததா?
இரண்டு நல்ல விஷயங்கள் நீ செய்தால் சொர்க்கத்தை அடையலாம்.
என்ன? சீக்கிரம் சொல்.
முதலில் நீ என்னை மறுகரையில் சேர்க்க வேண்டும். பிறகு உன் தலையில் உள்ள வைரத்தைத் தூக்கி எறிய வேண்டும்.



என் தலையில் உள்ள வைரத்தை எடு.
உடனே டிராகன் மெதுவாக சொர்க்கத்தை நோக்கிப் பறக்க ஆரம்பித்தது.
கிஃபு, இந்த வைரத்தை என் பரிசாக நீயே வைத்துக் கொள்.
கிஃபு ஆரஞ்சு விவசாயியைச் சந்தித்தான்.
பதில் கிடைத்ததா?
ஆமாம். உங்கள் தோட்டத்தில் உள்ள குளத்தில் தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள் அடங்கிய பானைகள் உள்ளன. அவற்றை எடுத்து விட்டு நீரைப் பாய்ச்சினால் ஆரஞ்சு காய்க்கும்.
கடைசியாகப் பானைகளைக் கண்டு பிடிச்சாச்சு!
சில நாட்களில் ஆரஞ்சு மரங்கள் காய்க்க ஆரம்பித்தன.
கிஃபு, இந்தத் தங்க, வெள்ளி நாணயங்களை நீயே வைத்துக் கொள்.
நன்றி ஐயா!
கிஃபு வயதான பெண்மணியின் வீட்டை அடைந்தான்.
என் மகளைப் பற்றி கடவுளிடம் கேட்டாயா?
உங்கள் மகள், திருமணம் செய்ய விரும்பும் இளைஞனைப் பார்த்தவுடன் பேசுவாள்.


உடனே-
அம்மா...
என்ன! நீ பேச ஆரம்பித்து விட்டாயா? கிஃபு நீதான் அந்த இளைஞன்.
திருமணம் செய்து கொள்.
கிஃபு மனைவியுடன் தன் வீடு நோக்கிக் கிளம்பினான்.
saifeatures@yahoo.com
வீட்டில் -
நீண்ட காலம் சென்று வந்திருக்கே. உன்னைப் பார்க்க முடியவில்லையே. பார்வை போச்சே.
நான் பார்வையை வரவழைக்க முயற்சிக்கிறேன்.
கிஃபு வைரத்தின் உதவியால் அம்மாவுக்கு பார்வை மறுபடியும் கிடைக்கச் செய்தான்.
இது அற்புதமான வைரக்கல். நம் தேவைகள் பூர்த்தியாகி வருகின்றன. இந்த ஏரியில்கூட எப்படி தண்ணீர் நிரம்பி வழிகிறது!
கிஃபுவும் அவன் குடும்பமும் மகிழ்ச்சியாக வாழ்ந்தது.

பேயையும் காணோம்; பிசாசையும் காணோம்!

வீட்டிலேயே ஓர் ஆசிரியரை நியமித்து நரேந்திரனுக்கும் சில மாணவர்களுக்கும் பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்பட்டன.

ஆசிரியர் பாடம் நடத்தும்போது மற்ற மாணவர்கள் கவனமாய்க் கேட்டு வருவதையும், நரேந்திரன் கண்களை மூடி அமர்ந்திருப்பதையும் கண்ட ஆசிரியர், நரேந்திரன் படிப்பில் மந்தம் என்றும் சரியான தூங்கு மூஞ்சி என்றும் முடிவுக்கு வந்தார்.





ஒரு நாள் ஆசிரியர் கண்களை மூடி அமர்ந்திருந்த நரேந்திரனைப் பார்த்து கோபமாக ''இன்று காலையில் என்ன பாடங்களை நடத்தினேன் என்று உனக்குத் தெரியுமா? அதைச் சொல்?'' என்றார்.

நரேந்திரன் காலையில் நடத்திய பாடங்களை மட்டுமின்றி இதுநாள் வரை நடத்திய பாடங்களையும் தெளிவாகவும், தவறில்லாமலும் கூறியதைக் கண்டார்.

ஆசிரியரின் கோபம் வியப்பாக மாறியது.

உண்மையில் இவன் கண்களை மூடித் தூங்கினானா? அல்லது தூங்குவதுபோல் கண்களை மூடிக் கொண்டு அமர்ந்திருந்தானா?

எது எப்படி இருந்தாலும், தான் நடத்திய பாடங்களைத் தவறில்லாமல் சொன்னவனின் ஞாபக சக்தியும், கேள்வி ஞானமும் அவருக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது.

இவன் போன்ற அறிவாளியைத் தன் வாழ்நாளில் கண்ட இல்லை எனப் பாராட்டினார். நரேந்திரனிடம் அன்பும் மரியாதையும் வைக்கலானார்.

வீட்டிலேயே கல்வி கற்ற நரேந்திரன் பின் உயர்நிலைப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பப் பட்டார்.

நரேந்திரன் இளமைக் காலத்தில் பகுத்



தறிவுடன் பல துணிச்சலான காரியங்களில் ஈடுபட்டு எல்லாரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார்.

இவரின் பள்ளிப் பருவத்தில் இவரது நண்பர் ஒருவர் வீட்டிற்கு விளையாட அடிக்கடி செல்வார். அங்கிருந்த ஒரு செண்பக மரத்தில் தொங்கி விளையாடுவது என்பது இவருக்கு அதிக விருப்பம்.

ஒரு நாள் நரேந்திரனும் அவருடைய நண்பர்களும் அந்த மரத்தில் ஊஞ்சல் ஆட வேண்டுமென விரும்பி அருகில் சென்றனர்.

அப்போது பக்கத்து வீட்டுக்காரர் அந்த மரத்தில் ஊஞ்சல் போட்டால் அந்த மரக்கிளை ஒடிந்து அதனால் பிள்ளைகளுக்கு ஆபத்து ஏற்படும் என்று கருதினார். எனவே "இந்த மரத்தில் ஒரு பேய் இருக்கிறது. அது உங்களைக் கொன்று விடும். அதனால் யாரும் ஊஞ்சல் போட்டு விளையாடக் கூடாது" என்றார்.

இதைக் கேட்ட மற்ற பிள்ளைகள் பயந்து, "டேய் அந்த மரத்தில் பேய், பிசாசு இருக்கிறதாம். யாரும் விளையாட வேண்டாம். வாருங்கள் ஓடி விடுவோம்" எனப் பயந்து ஓடி விட்டார்கள்.

நரேந்திரர் மட்டும் ஓடவில்லை. "யாரும் பயப்பட வேண்டாம். ஓட வேண்டாம். அந்த மரத்தில் பேய் எப்படி இருக்கிறது என்று நான் பார்க்கிறேன்?" என்று கூறினார். கூறியது மட்டுமின்றி, அந்த மரத்திலேயே ஏறி, கிளைகளை உலுக்கி மரத்தில் தொங்கி, "பேயையும் காணவில்லை. பிசாசையும் காணவில்லை. நண்பர்களே! ஏன் பயந்து ஓடுகிறீர்கள்?. ஒருவர் சொல்வதை எல்லாம், நாம் அப்படியே நம்பிவிடுவதா? அது உண்மையா? பொய்யா? எனக் கண்டறிய வேண்டாமா?" என்றார்.

இப்படி அந்தச் சின்னஞ்சிறு வயதிலேயே உண்மையைக் கண்டறிந்ததும், எதிலும் துணிவுடன் செயல்பட்டதும், விவேகானந்தரின் எதிர்காலச் சிறப்புக்கு, முன்னறிவிப்பு போல் இருந்தது.

— கு. கண்ணகி, மிட்டூர்.


ஓவியப் போட்டி முடிவுகள்!


மே இதழில் ‘கோடை வெயிலின் தாக்கம்’ என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.

முதல் பரிசு:
டி.ஜி. சிவப்ரியா, ஐந்தாம் வகுப்பு,
மாமல்லன் மெட்ரிக் பள்ளி, காஞ்சிபுரம்.



இரண்டாம் பரி
சா. ஜனனி எஸ்தர்,
ஆறாம் வகுப்பு,
அ.மே.நிலைப்பள்ளி, பொன்பரப்பி.






மூன்றாம் பரிசு:
பா. சரண்யா, பத்தாம் வகுப்பு,
பாரதியார் மேல்நிலைப்பள்ளி,
கூடுவாஞ்சேரி.

ஆறுதல் பரிசு:
எஸ். ஸ்ரீவித்யா,
ஐந்தாம் வகுப்பு, கும்பகோணம்.





ஆறுதல் பரிசு:
கே.எஸ். சர்மிளா
ஒன்பதாம் வகுப்பு,
ஏ.ஈ.சி.எஸ், கல்பாக்கம்.



என்ன பழமொழி? கோடை விடுமுறைப் போட்டி — 1 முடிவு

மே இதழில் என்ன பழமொழி? போட்டி அறிவித்திருந்தோம். நிறைய பேர் போட்டியில் கலந்து கொண்டு சரியான விடைகளையும் அளித்திருந்தார்கள். எனவே பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ரூபாய் முப்பது பரிசு பெறுவோர்:

1. பி. மோகனலக்ஷ்மி, கோவை.
2. க. மலையரசி, கண்டவராயன்பட்டி, சிவகங்கை.
3. ஆர். சுருதியா, சென்னை.
4. ஆர். பவித்ரசெல்வி, கோபிச்செட்டிபாளையம்.
5. ந. ராமராஜ், கல்யாணபுரம்.
6. மா. உமா மகேஸ்வரி, கோவில்பட்டி.
7. நா. ஷண்முகவள்ளி, மதுரை.
8. ஜி. சுயஸ்ரீ மீனாட்சி, ஒசூர்.
9. ம. மோகன், செந்துறை.
10. எம். விக்னேஷ்வர், ஓமலூர், சேலம் மாவட்டம்.

சரியான விடை:

கற்றது கை மண் அளவு
கல்லாதது உலகளவு

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள்.
கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 த	ச	2 ர	த	ன்	■	3 கி	ங்	4 வ
ர்	■	த்	■	ய	■	ளி	■	ளை
ம	■	த	■	ரி	5 மா	■	■	ய
ம்	■	ம்	■	6 சூ	■	7 பா	8 க	ல்
■	றி	■	■	■	■	■	லை	■
ம்	9 த	10 மா	■	11 தி	■	கை	■	லை
ண	■	■	சி	12 ர	■	க்	■	றி
ண்	■	13 ஆ	■	வ	■	ம	■	ற்
14 வ	லி	மை	■	ம்	ய	15 த	ந்	16 வெ

புதிர் உலக விடைகள்

I.

	7	
4	1	3
6	8	5
	2	

II. ஏதாவது ஒரு காவலனிடம் புலி இருக்கும் இடம் எது என்று உன் எதிராளியைக் (அடுத்த காவலன்) கேட்டால் எதைக் காட்டுவான்? என்று கேட்டால் அவன் கூறும் கூண்டே 'ஆடு' இருக்கும் கூண்டு.

விளக்கம் : காவலன் உண்மை சொல்லுபவனாக இருந்தால் எதிராளி புலி கூண்டுக்குப் பதிலாக ஆடு உள்ள கூண்டைக் கூறுவான் என்பதாகச் சொல்லி விடுவான்.

காவலன் பொய் சொல்லுபவனாக இருந்தால் புலி கூண்டுக்குப் பதிலாக ஆடு உள்ள கூண்டையே காட்டுவான்.

III. 21

IV. 1001

132 X 1001 = 132132

V. மேரி

பாயசம்

கிள்ளியூரில் ஒரு முனிவர் இருந்தார். அவரை எல்லோரும் மிகவும் உயர்வாக மதித்தார்கள். அவ்வூரில் வசித்த சோமுவுக்கு மட்டும் முனிவரின் மேல் நம்பிக்கை ஏற்படவில்லை. ஒருநாள் சோமு முனிவரிடம் சென்று, "உங்கள் மேல் எனக்கு நம்பிக்கை வர, நீங்கள் ஏதாவது செய்து காட்ட முடியுமா?" என்றான்.

"நீ நாளைக்குப் பாயசம் குடிப்பாய். இது உண்மை" என்று சொன்னார் முனிவர். அதற்கு சோமு ஏளனமாகச் சிரித்து விட்டு "அதையும்தான் பார்ப்போம்" என்று சவால் விட்டான்.

ஆனாலும் அவனுக்குள் ஒரு பயம் ஏற்பட்டு விட்டது. சாமியார் சொன்னது உண்மையாகி விடுமோ என்று நினைத்தவன் ஊரில் இருந்தால்தானே பாயசம் குடிக்கும் நிலை வரும். அதனால் நாளை காட்டில் போய்த் தங்கிவிட்டு வரலாம் என்று நினைத்தான். மறுநாள் காட்டிற்குப் போய் விட்டான்.

அங்கு வழிப்போக்கர் கூட்டம் ஒன்று காலை வேளையில் பாயசம் காய்ச்சிக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் கொள்ளைக் கூட்டம் ஒன்று அங்கே வரவும் வழிபோக்கர் கூட்டம் போட்டது போட்டபடி விட்டு விட்டு ஓடி விட்டது.




இதைச் சற்று தூரத்தில் இருந்த மரத்துக்கு அடியில் உட்கார்ந்தபடியே சோமு பார்த்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் பாயசம் காய்ச்சிய இடத்துக்கு வந்த கொள்ளைக் கூட்டத்தினர் பாயசம் காய்ச்சப்பட்டிருப்பதைப் பார்த்துவிட்டு, இது நம்மைக் கொல்வதற்குக் காய்ச்சப்பட்ட பாயசமாக இருக்கலாம் என்று சந்தேகப்பட்டு சுற்றும்முற்றும் பார்த்தனர். அவர்கள் கண்களுக்கு சோமு தெரியலானான். உடனே இவன்தான் நம்மைக் கொல்வதற்கு விஷப் பாயசம் காய்ச்சி வைத்திருக்கிறான் என்று நினைத்து அவனைப் பிடித்து வந்து பாயசத்தைக் குடிக்கச் சொன்னார்கள். அவன் மறுத்து விட்டான். கொள்ளைக் கூட்டத்தினருக்குத் தாங்கள் சந்தேகப்பட்டது உண்மையாக இருக்கலாம் என்ற எண்ணம் வரவே வலுக்கட்டாயமாக அவன் வாயில் பாயசத்தை ஊற்றினார்கள். வேறு வழியில்லாமல் சோமு பாயசத்தைக் குடிக்கலானான். கொள்ளைக் கூட்டத்தினர் கொஞ்ச நேரம் வரையிலும் பார்த்துக் கொண்டிருந்து விட்டு சோமு சாகாமல் இருந்ததினால் பாயசத்தில் விஷம் இல்லை என்று நினைத்து அவர்களும் பாயசத்தைக் குடித்தனர்.

சோமு முனிவரின் வாக்குப் பலித்ததை எண்ணி விக்கித்து நின்றான்.

— சே. ஹயாத்கான்,
இளையான்குடி.

உடலின்

அதோ பார், அந்தக் குழந்தையை... கொள்ளை அழகு! 'செக்கச்செவேல்' என்று நீங்கள் கூறுவது தோலாடை போர்த்திய மேனியைத்தான். சிவப்பழகு கிரீமை அள்ளிப் பூசி, தன்னைச் சிவப்பாக்கிக் கொள்ள முயற்சிப்பவர்கள் ஏராளம்! என்னை (தோலை) நீக்கி விட்டு, இந்த உடம்பைப் பார்த்தால் எப்படி இருக்கும்? சதையும், நரம்பும், இரத்த நாளங்களும் நீட்டிக் கொண்டு... மயக்கம் போட்டு விடுவீர்கள். உங்கள் உடலின் கவசம், உறை, மேலாடை, பாதுகாப்பு, உணர்ச்சிக்




களன் அனைத்தும் நான்தான். உங்களுக்கு அழகு தருவதும் நான்தான்!...!

நீங்கள் கேட்காமலே உங்களின் தேவையறிந்து பணி செய்து, உங்களைக் காப்பாற்றும் அவசியமான வேலைக்காரன் நான். நீங்கள் நடக்கும் போது, எரிகின்ற தீக்குச்சியை மிதித்தவுடன் 'ஆ' என கத்துகிறீர்கள். எப்படி? வெப்பத்தை உணர்வது என் மூலம்தான். உங்கள் நண்பன், உங்கள் சட்டையினுள் ஐஸ் கட்டியைப் போடும் போது, அதன் குளிர்ச்சியை உணரவைப்பதும் நான்தான். நீங்கள் கண்ணை மூடிக் கொண்டு, விரல் நுனியால் பூவையும், பந்தையும் தொட்டாலும், இரண்டின் கடினத் தன்மையையும் பிரித்து உணருவதற்குக் காரணம் நானே!ஒரு குண்டூசி குத்தினால், அது எந்த இடத்தில், எவ்வளவு ஆழத்தில் குத்தப்படுகிறது என்பதையும், வலியை உணர்வதும் என்னுள் உள்ள நரம்பு நுனிகளின் மூலம்தான். இப்படி வெப்பம், குளிர், வலி, தொடு உணர்வு, அழுத்தம் அனைத்தையும் அறியும் நரம்பு நுனிகள் என் மூலம் உடல் முழுவதும் பரவியிருக்கின்றன. அனைத்து தகவல்களையும் உடனுக்குடன் என் மேலானரான மூளைக்குத் தெரிவித்து விடுவேன்.

பாதுகாப்பு அரண்

நான் வலிமைப்படுத்தப்பட்ட கோட்டைச் சுவர் உடலுக்கு. நான் இல்லையென்றால், உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் பாக்டீரியா, வைரஸ்கள் மற்றும் கிருமிகள் எளிதில் உடலைத் தாக்கி



உறை

உள்ளே நுழைந்துவிடும். நீங்கள் எத்தனை மணி நேரம் நீரில் மூழ்கி, மூழ்கிக் குளித்தாலும், உங்கள் உடல் ஊறிவிடாமல் பாதுகாப்பதும் நானே; அதே நேரத்தில் தேவையான நீரை உடலுக்குள் தக்க வைப்பதும் நானே; வெயில்காலத்தில்



உடலின் வெப்பநிலை அதிகரிக்கும் போது, நீரை வியர்வையாக உடலிலிருந்து வெளியேற்றி, குளிர்சாதனப் பெட்டி போல செயல்பட்டு, உங்களின் உடல் வெப்ப நிலையை சமனப்படுத்துவதும் நான்தான். வெளி உலகத்துடன் அதிகம் தொடர்பு கொள்ளும் உறுப்பு நான் மட்டுமே!

பல அவதாரம்!

எனது மொத்த பரப்பு 18 ச.அடி ஆகும். மாயாஜால கதைகளில் வருவது போல, நான் பல உருவங்களை எடுக்கிறேன். கை, கால்களில் நகங்களாகவும், தலையில் முடியாகவும், உள்ளங்கை, உள்ளங்கால்களில் தடித்த உறையாகவும், பருவ காலத்தில் முகம் மற்றும் முதுகு போன்ற இடங்களில் பருவாகவும் உரு மாறுகிறேன். கண் இமையில் மிக மெலிதாகவும் பாதங்களில் முரடாகவும் உள்ளேன்.

நான் உடலின் மேல் மூன்றடுக்குகளாக அடுக்கப்பட்டிருக்கிறேன். வெளிப்பரப்பான மேலடுக்கில் மெல்லிய பேப்பர் போல மெலிதாகவும், அதன் கீழ் கண்ணாடி போன்ற தெளிவுடனும் உள்ளேன். எனது இந்த அடுக்கில் கின்னினால் இரத்தம் வராது. ஏனெனில் இவ்வடுக்குக்கு ரத்தம் கிடையாது; இறந்த செல்களால் ஆனது. எனது இந்த அடுக்கு அடிக்கடி கழட்டப்படுகிறது. எப்படி தெரியுமா? பாம்பு சட்டையைக் கழட்டுவது போல் ஒட்டுமொத்தமாக அல்ல. கொஞ்சம், கொஞ்சமாக செதில், செதிலாய் என் மேல் தோலை உரிக்கிறேன். நீங்கள் சொறியும் போது, சட்டை போடும் போது, குளிக்கும் போது என் மேலடுக்கின் கோடிக்கணக்கான செல்கள் கொட்டுகின்றன. உங்களின் மேல் தோல் 27 நாட்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படுகிறது. இங்குள்ள செல்களின் வாழ்நாள் 27 நாட்கள்தான். ஒவ்வொரு நாளும் என் மேலடுக்குக்காக, கோடிக்கணக்கான சிசு செல்கள், என் கீழடுக்கிலிருந்து மேற்பரப்புக்கு தொடர்ந்து வந்து சேருகின்றன. அவை முதலில் உருவாகும் போது, கொழகொழவென்று ஜெல்லி போல் இருக்கும்; மேற்பரப்புக்கு வந்தவுடன் கடினமான கெரடின் (Keratin) என்ற பொருளாய் மாறிவிடும்; இது தட்டையான பளபளப்பான மேலடுக்காக இருக்கும்.

எனது கீழடுக்குதான் அகத்தோல். இதில் வியர்வைச் சுரப்பிகள், எண்ணெய்ச் சுரப்பிகள், வாசனைச் சுரப்பிகள், ரோமக் கால்கள், இரத்தக் குழாய்கள் மற்றும் நரம்பு முடிச்சுகள் அனைத்தும் உள்ளன.

எனது கீழடுக்கிலுள்ள கொழுப்புப் பகுதி அதிர்ச்சி தாங்கியாகவும், குளிர் மற்றும் வெப்பத்திலிருந்து காக்கும் கவசமாகவும் இருக்கிறது.

உடல் பாதுகாப்பு

ஒவ்வொருவர் உடலுக்கும் ஒவ்வொரு விதமான வாசனை இருக்கும். (இதனை நிர்ணயிப்பது ஜீன்களே!) அதற்கு கொழுப்பு பொருளைச் சுரக்கும் வாசனைச் சுரப்பிகளே காரணம். இந்த உடல் வாசனை மூலம்தான், குற்றவாளிகளை அவர்கள் பயன்படுத்திய பொருட்களை நுகர்ந்து, மோப்ப நாய்கள் கண்டுபிடிக்கின்றன. இது மனிதர்களுக்கு மட்டுமல்ல; அனைத்து பாலூட்டிகளும் வாசனையைச் சுரக்கும் - ஆண், பெண் ஈர்ப்புக்காக.



உணர்ச்சிக்குக் கட்டுப்பட்டவன்!

எனக்குள் உள்ள இரத்தக் குழாய்களின் செயல்பாடு கொஞ்சம் சுவையானது. நல்ல வெப்பமான நாளில், நீங்கள் உடற்பயிற்சி செய்தால் இரத்தக் குழாய்கள் விரிவடைந்து, என் பரப்புக்கு அதிக இரத்தம் பாய்ந்து சிவக்கும்; ஆனால்

தோல் உள் உறுப்புகளான சிறுநீரகம், இதயம், கல்லீரல் மற்றும் சிறுநீர்த் துவாரத்திலுள்ள நோய்களை அறிவிக்கும் 'அபாய அறிவிப்பு.'

குளிரில் எனக்குள் உள்ள இரத்தக் குழாய்கள் சுருங்கி விடுவதால், தோல் வெளுத்துப் போய் விடும். எனக்குள் உள்ள இரத்தக் குழாய்கள் எப்போதுமே உணர்ச்சிகளுக்குக் கட்டுப்பட்டவை. கோபத்தில் முகம் சிவப்பதும், பயத்தில் வெளிறிப் போவதும் இதனால்தான்.

இரத்தத்திலுள்ள உப்பு, நீர் மற்றும் சில கழிவுப் பொருட்களை வெளியேற்றுவது என்னுடைய வியர்வைச் சுரப்பிகளே! இமைப்பொழுதும் சோராமல், தொடர்ந்து உழைக்கின்றன.

மின்னுவதன் ரகசியம்

என் கீழடுக்கில் ரோமக் கால்களை ஒட்டியுள்ள எண்ணெய் மற்றும் வாசனைச் சுரப்பிகளின் திரவம், முடியுடன் சேர்ந்து வெளியே வருகிறது. இதனாலேயே முடியும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் எண்ணெய் பளபளப்புடன் மின்னுகின்றன. இல்லையெனில் நான் (மேல் தோல்) வெயிலில் வறண்டு, காய்ந்து பாளம், பாளமாய் வெடித்து விடுவேன்.

நீண்ட நேரம் நீங்கள் நீரில் இருந்தால், உங்கள் உள்ளங்கை, உள்ளங்கால் தோல்களில் சுருக்கம் ஏற்படக் காரணம், தோலின் மேல் படர்ந்துள்ள எண்ணெய்ப் படலம், நீண்ட நேரக் குளியலால் கழுவி விடப்படுகிறது. தோலிலுள்ள துளைகள் மூலம் நீர் நுழைந்து தோல் ஊறி, ஊதிப் போய் சுருக்கம் விழுகிறது. நீரை விட்டு வெளியே வந்ததும், எண்ணெய்ச் சுரப்பி சுரந்து, தோலை மெருகூட்டுவதால், தோல் பழைய நிலைக்குத் திரும்புகிறது.

உங்களுக்கு வயோதிகம் நெருங்கி விட்டதென்றால், அதன் அடையாள ரேகைகள் என் மேல் பதிக்கப்படுகின்றன. நான் மிகவும் மெலிந்து, எனக்குள்ளே உள்ள சிரைகள் கூட வெளியே துருத்திக் கொண்டிருக்கும். அது மட்டுமா? எனக்குக் கீழுள்ள அடுக்கின் புரத இணைப்புகள் உடைந்து, என் மேல்பகுதிகளில் சுருக்கம் விழுகிறது. என்னை துணி போல் இழுக்க முடிகிறது. இதனால்தான் வயோதிகர்களின் தோல் தொய்வாக இருக்கிறது.

• தோல் புற்றுநோயும், தோல் சார்ந்த நோய்களும் பெரும்பாலும் கறுப்பு

தோல்காரர்களுக்கு வருவதில்லை. வெள்ளையர்களை மட்டுமே தாக்குகின்றன.

• கிட்டத்தட்ட 2000 தோல் நோய்கள் உள்ளன.

ஒரே வகையான சோப்பையே தொடர்ந்து பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு சோப்பிலும், வாசனைக்காக வெவ்வேறு வகை வேதிப் பொருட்கள் கலந்துள்ளதால், அவை நம் உடலுக்கு ஒவ்வாமை அல்லது பிரச்னை ஏற்படுத்தக்கூடும்.

• தோல் உள் உறுப்புகளான சிறுநீரகம், இதயம், கல்லீரல் மற்றும் சிறுநீர்த் துவாரத்திலுள்ள நோய்களை அறிவிக்கும் 'அபாய அறிவிப்பு.'

• பருவ காலத்தில் வரும் 'பரு'விலிருந்து தப்பிக்க, அந்தச் சமயத்தில் எண்ணெய் மற்றும் கொழுப்பு உணவுப் பொருட்களைத் தவிர்க்க வேண்டும். மேலும் ஒரு நாளைக்கு 5 அல்லது 6 முறை முகத்தை நல்ல குளிர்ந்த நீரால் சோப் போட்டுக் கழுவி சுத்தமாக வைத்திருந்தாலே போதும்.

• வியர்வைச் சுரப்பிகளின் துவாரம் அடைத்துக் கொண்டு, வியர்வை வெளியேறாததால்தான் வியர்க்குரு வருகிறது. ஒருநாளைக்கு இரு முறை குளிர்ந்த நீரில் சுத்தமாகக் குளித்தால் வியர்க்குருவிலிருந்து தப்பலாம்.

• சோரியாசிஸ் எனப்படும் காளான் படை உடலின் எந்தப் பகுதியிலும் வரலாம். தோல் செதில், செதிலாக உதிரும். இச் சமயத்தில் செல்களின் வாழ்நாள் 5 நாட்கள் மட்டுமே! உடலைச் சுத்தமாக வைத்திருந்தால் எந்தத் தோல் நோயும் வராது.

• எந்தவித சிவப்பழகு கிரீமினாலும், தோலின் இயற்கை நிறத்தை மாற்றவே முடியாது. உங்களின் நிறம் பாரம்பரியமாய் வருவது; அதற்கான காரணி 'ஜீன்களாய்' இருப்பதால், 'ஜீன் சிகிச்சை' தவிர, வேறு எந்த கிரீமாலும் நிறத்தைச் சிவப்பாக்க முடியாது!

• தோலில் வரும் சொறி, சிரங்குக்கு முக்கியக் காரணம், சுகாதாரமின்மையால் தாக்கும் கண்ணுக்குத் தெரியாத சிறு பூச்சிகளே! இந்நோய் வந்தவர்கள் தங்களின் ஆடைகளையும், படுக்கையையும் வெந்நீரில் துவைத்து சுத்தப்படுத்துவதுடன், மருத்துவரின் ஆலோசனைப்படி சிகிச்சை எடுக்க வேண்டும்.



• பேன் மற்றும் தோல் நோய் வராமல் தடுக்க தலையையும், உடலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

• தற்போது பயன்படுத்தப்படும் கிரீம், பொட்டு, டை, லிப்ஸ்டிக் போன்ற அலங்காரப் பொருட்களில் நிறைய வேதிப் பொருட்கள் கலந்துள்ளதால், இவை தோலுக்கு ஒவ்வாமை ஏற்படுத்தக்கூடும். கூடியவரை இவற்றைத் தவிர்த்தல் நலம்.

• கூடியவரை ஒரே வகையான சோப்பையே தொடர்ந்து பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு சோப்பிலும், வாசனைக்காக வெவ்வேறு வகை வேதிப் பொருட்கள் கலந்துள்ளதால், அவை நம் உடலுக்கு ஒவ்வாமை அல்லது பிரச்னை ஏற்படுத்தக்கூடும்.

- எஸ். மோகனா



உங்களுடன் ஒரு நிமிடம்

சுட்ட பழங்கள்!

நம்மை விடச் சிறியவர் ஏதாவது சொன்னால் அலட்சியப்படுத்துகிற மனோபாவம் நம்மிடம் பரவலாக உள்ளது. "போடா உனக்கென்ன தெரியும்? பொடிப்பயலே! போய் வேலையைப் பாரு!" என்று சிறுவர் சிறுமியர் விரட்டப்படுவதைப் பல சமயங்களில் கேட்க நேர்கிறது. சுட்ட பழம் சாப்பிட்ட ஔவைப்பாட்டி கதை தெரியுமல்லவா? தெரியாதவர்களுக்கு சுருக்கமாக:

ஔவை பசியும் களைப்புமாக நடக்கும்போது நாவல் மரத்தடியில் இளைப்பாறினாள். மரத்தின்மேல் ஒரு மாடு மேய்க்கும் சிறுவன் உட்கார்ந்து நாவல் பழம் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஔவை, பசி–தாகம் தணித்துக் கொள்ளக் கருதி, "அப்பனே எனக்கும் நாலு பழம் பறிச்சுப்போடேன்" என்று கேட்டாள்.

சிறுவன் கேட்டான்: "பாட்டி சுட்ட பழம் வேணுமா? சுடாதபழம் வேணுமா?"

ஔவைக்குப் புரியவில்லை. அடக்கத்துடன், "எனக்குச் சுடாத பழமே போதும்பா" என்றாள்.

சிறுவன் பறித்துப் போட்டான். ஔவை பழங்களைப் பொறுக்கி வாயில் போடுமுன்னர், தூசியை ஊதினாள்.

உடனே சிறுவன் கேட்டான்: "பாட்டி! சுடாத பழம்தானே கேட்டே? எதுக்கு ஊதி ஊதி சாப்பிடறே?"

ஔவை அசந்து போனாள். 'ரொம்ப அறிவாளி என்று பலராலும் போற்றப்பட்ட நாம் ஒரு சிறுவனிடம் தோற்றுப் போனோமே' என்று வெட்கினாள்

அப்புறம் முருகன் பிரத்யட்சமாகி ஔவைக்கு அருள் புரிந்தான் என்று கதை.

இதில் நாம் கவனிக்க வேண்டிய விஷயம், "சுட்ட பழமாவது, சுடாத பழமாவது என்னடா உளர்றே! முட்டாள்!" என்று ஔவை சிறுவனிடம் எரிந்து விழவில்லை. மாறாக, 'சிறுவன் கூறுவதிலும் ஏதாவது உட்பொருள் இருக்குமோ' என்று அறிந்து கொள்வதற்காக அடக்கத்துடன், "எனக்குச் சுடாத பழமே போதும்பா" என்று பதிலளித்தாள்.


நம்மை விடச் சிறுவர்கள் ஏதாவது சொன்னால் அன்புடன் கேட்டுக் கொள்ள வேண்டும். தவறு என்று மறுக்க நேர்ந்தால் பிரியமுடன் காரணகாரியத்துடன் விளக்க வேண்டும். புரிந்து கொள்வார்கள். எடுத்தெறிந்து பேசினால் மனம் நொந்து வாடும். சுட்ட பழமாகி விடும்!

பெரியவர்களிடம் பேசவும் உங்கள் கருத்தைக் கூறவும் தயங்காதீர்கள்! அதே சமயம் தவறான கருத்து என்று தெரிய வருமானால் திருத்திக் கொள்ளவும் தயாராயிருங்கள்.

– **ஆசிரியர்**


Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

மற்றவற்றிலிருந்து
ஒன்று மட்டும் வேறுபட்டுள்ளது.
அது எது?



விடை: ஆட்டோ 3 சக்கர வாகனம்

மணி, ராமுவின் அம்மாக்களின்
பெயர் என்ன?



விடை: மணி – அம்புஜம்மா
ராமு – பங்கஜம்மா

பிருந்தாவணம்



இந்தப்
பறவையில்
பல
பறவைகளின்
உறுப்புகள்
இடம்
பெற்றுள்ளன.
அவற்றைக்
கண்டு
பிடியுங்கள்.

விடை:
அலகு - கிளி
கால்கள், கொண்டை – சேவல்
கழுத்து – மயில்
உடல் – வாத்து

''சென்னை, செங்கல் பட்டு இவற்றுக்கு இடையில் என்ன வரும்?''

''ஒரு கமா வரும் சார்!''

– ஆர். தங்கராஜ்



ஒரே மாதிரியான இரண்டு பொம்மைகளைக் கண்டுபிடியுங்கள்!

விடை: 5-9



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2001*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka

